# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

இரண்டாம் பதிப்பு

விலை: 20
பக்கங்கள்: 28

சுடர் 32
கதிர் 256
ஆடி 24ஆம் நாள்
புதன்கிழமை
09 ஒகஸ்ட் 2017
வள்ளுவர் ஆண்டு 2048


## மகிந்தவுடன் சேர்ந்து பணியாற்ற சம்பந்தன் விருப்பம் தெரிவிப்பு

பிக்குவின் நூல் வெளியீட்டு விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 9

நாட்டில் வாழும் ஏனைய மக்களும் இந்த நாட்டுக்கு உரித்துடைய மக்கள். இந்த நாடு அவர்கள் அனைவருக்கும் சொந்தமானது என்று நினைத்து ஆட்சி நடத்தினால் நிலமை வேறுவிதமாக அமையும். இந்தப் பணியை முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜ >> 06

## கலாவிடம் வாக்குமூலம் பெற சபாநாயகரிடம் வேண்டுகை

முன்வைத்தது பொலிஸ்

ஊர்காவற்றுறை, ஒக. 9

சுவிஸ்குமார் தப்பிக்க உதவிய குற்றச்சாட்டுத் தொடர்பிலான வழக்கு விசாரணையில் சிறுவர் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரிடமும் வாக்குமூலம் பெறுவதற்கான அனுமதி சபாநாயகரிடம் கோரப்பட்டுள்ளது. அனுமதி >> 25

## பிக்குவை நெகிழவைத்த நீதிபதி...



"புரிந்துணர்வுகள் எமக்குள் தேவை. அதனை நீங்கள் செயலில் காட்டி உள்ளீர்கள்" என்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியனுக்கு நேரில் பாராட்டுத் தெரிவித்தார் ஆனந்த தேரர். (விரிவு பக். 2)

அவர் நீதியரசர் என்றால் நான் சட்டத்தரணி எப்படி எதிர்கொள்வது என எனக்குத் தெரியும்

## பதவி விலகமாட்டேன் முடிந்தால் நீக்கட்டும்

அமைச்சர் டெனீஸ்வரன் உறுதி

யாழ்ப்பாணம், ஒக. 9

நான் அமைச்சுப் பதவியிலிருந்து விலகமாட்டேன். முதலமைச்சருக்கு அதிகாரம் இருந்தால் அதைப் பயன்படுத்தி என்னை நீக்கட்டும். அவர் நீதியரசர் என்றால் நான் சட்டத்தரணி. என்னைப்பதவியிலிருந்துநீக்கினால்என்னசெய்யவேண்டும் என்பது எனக்குத் தெரியும்.

இவ்வாறு ஆணித்தரமாகச் சவால் விட்டிருக்கிறார் வடக்கு மாகாண போக்குவரத்துஅமைச்சர்பா.டெனீஸ்வரன்.

வடக்குமாகாணஅமைச்சரவையை முழுமையாக மாற்றியமைக்கப் போவதாகவடக்குமாகாணமுதலமைச்சர்சி.வி.விக்னேஸ்வரன், கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்களுடனானகூட்டத்தில்தெரிவித்திருந்தார்.

இது குறித்து அதிருப்தி அடைந்ததமிழ்அரசுக்கட்சி, அமைச்சரவையில் பங்கேற்பதில்லை என்ற முடிவை எடுத்தது. அதை அடுத்து சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தனது பதவியிலிருந்து விலகினார். எஞ்சியிருக்கும் ஒரே அமைச்சர் பா.டெனீஸ்வரனின் நிலைப்பாடு என்ன என்று உதயன் பத்திரிகை அவரிடம் வினவியது.

"நான்எந்தக்குற்றமும்செய்யவில்லை. விசாரணைக் குழுவும்அதனைச்சொல்லியிருந்தது. என் மீதான குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால் தண்டனையைஏற்கத்தயாராகஇருப்பதாகத்தெரிவித்திருந்தேன்.

முதலமைச்சர் சுயாதீனமான சட்டரீதியானதெரிவுக் குழுவைநியமித்தால்அந்த விசாரணைக்குழுவில் தோன்றுவதற்கு இப்போதும் தயாராகவே இருக்கின்றேன். நான் விசா >> 24

## அடுத்த அமைச்சர் யார் என ஆராய ரெலோ உயர் பீடம் மீண்டும்கூடுகிறது

யாழ்ப்பாணம், ஒக. 9

தமதுகட்சிக்குக்கிடைக்கும்அமைச்சுப் பதவியை யாருக்கு வழங்குவது என்பது தொடர்பில் புளொட்டைத் தொடர்ந்து ரெலோவிலும் குழப்பம் ஏற்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது. இது தொடர்பில் இறுதிமுடிவுஎடுப்பதற்காகஅந்தக் கட்சியின் உயர் மட்டக் குழு எதிர் வரும்12ஆம்திகதி கூடி >> 06

## ரவிகரனிடம் விளக்கம் கேட்கிறார் முதலமைச்சர்

யாழ்ப்பாணம், ஒக. 9

வடக்கு மாகாண சபையின் முல்லைத்தீவு மாவட்ட உறுப்பினர் ரவிகரனுக்கு எதிராகப் பொது அமைப்புக்கள் சுமத்தியுள்ள நிதி மோசடிக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விளக்கமளிக்குமாறு கேட்டுள்ளார் வடமாகாண சபை முதலமைச்சர்சி.வி.விக்னேஸ்வரன்.

வடக்கு மாகாண அமைச்சரவை மாற்றம் தொடர்பில் பரபரப்பாகப் பேசப்பட்டு வரும் நிலை >> 23

## பிரேரணை மீது விவாதமில்லை

யாழ்ப்பாணம், ஒக. 9

முதலமைச்சருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களையும் விசாரணை செய்யும்வகையில்அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டுக்களை விசாரிக்க மாகாண சபைத் தெரிவுக்குழுவை அமைக்கக் கோரும் பிரேரணை நாளைய அமர்வில் எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது என்று தெரியவருகின்றது. >> 23



## கடலில் களேபரம் நெடுந்தீவு அருகே இந்தியமீனவர்கள் 49 பேர் கைது

இலங்கைகடற்பகுதிக்குள்அத்துமீறிஉள்நுழைந்துமீன்பிடியில்ஈடுபட்ட குற்றச்சாட்டில்49 இந்திய மீனவர்கள் கடற்படையினரால்கைது செய்யப்பட்டனர். அவர்களின் 12 படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கையின் போது கடலில் பெரும் களேபரம் இடம்பெற்றதாகத் தகவல்கள் கூறுகின்றன. >> 25

## 12 மணி நேரம் நீந்தி உயிர்தப்பிய மீனவர்

அத்துமீறிய இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்யும்போது கடலில் வீழ்ந்த இரு இந்திய மீனவர்களில் ஒருவர் 12 மணிநேரமும் மற்றொருவர் 4 மணிநேரமும் கடலில் தொடர்ந்து நீந்தி உயிர் தப்பினர்.



இந்திய புதுக்கோட்டையை சேர்ந்த பாலமுருகன் (வயது-25) மற்றும் செல்வமுருகன் (வயது-21) ஆகிய இருவருமே இவ்வாறு உயிர் தப்பினர். நெடுந்தீவை ஒட்டிய கடலில் நேற்றுமுன்தினம் இரவு இவர்கள் இருவரும் கடலில் வீழ்ந்தனர். >> 25

## ஆசியாவிலேயே மிகப் பெரும் இரும்புப் படிவு இலங்கையில்

மொனராகலை மாவட்டத்தில் கண்டுபிடிப்பு

ஆசிய வலயத்தில் மிகப்பெரிய இரும்புத் தாதுப்படிவு இலங்கையின் மொனராகலை மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. புத்தல என்ற இடத்தில் இந்தப் படிவு இருப்பதாக இலங்கை புவியியல் திணைக்களம் தெரிவித்தது.

இந்தக்கனிமப்படிவுசுமார்64சதுரகிலோமீற்றர்கள்வரைவியாபித்திருப்பதாகவும், அதிலிருந்து கிட்டத்தட்ட ஒன்பது மில்லியன் தொன் இரும்புக் கனிமத்தைப் பெறுக்கொள்ள முடியுமெனவும் இந்த ஆராய்ச்சிக்குப்பொறுப்பாகவுள்ளபுவியியல் பேராசிரியர் அத்துல சேனாரத்ன தெரிவித்தார்.

இந்தக் கனிமத்தைப் பிரித்தெடுக்கச் சரியான வழிகள் பின்பற்றப்பட்டால் இலங்கைவருடாந்தம்வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் சுமார் 60 ஆயிரம் மெட்ரிக் தொன் இரும்புக்கான செலவை மிச்சப்படுத்தலாம் எனவும் அவர் கூறினார். >> 24

## முகமூடிக் கொள்ளையர் கைவரிசை வரணியில் 89 பவுண் கொள்ளை

தென்மராட்சி. ஒக. 9

வீட்டிலிருந்த பெண்களைக் கத்தியைக்காட்டிமிரட்டிவிட்டு 89 பவுண் நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றனர் முகமூடிக் கொள்ளையர்கள். வரணியில் நேற்றுமுன்தினம்இரவுஇந்தக்கொள்ளை இடம்பெற்றது.

ஆண்கள் வெளியில் சென்ற வேளையில் வீட்டினுள் புகுந்தமுகமூடிஅணிந்தஇருவர் கொள்ளையை நிகழ்த்தினர். வெளிநாட்டில் இருந்து வந்த பெண் மற்றும் அவரின் உறவுப் பெண் ஆகியோரின் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டி அவர்கள் அணிந்திருந்த மற்றும் வீட்டுக்குள் வைத் >> 25



## ஹைஏஸ் – ஹன்ரர் கோர விபத்து

### சுவிசைச் சேர்ந்தவர் சம்பவ இடத்தில் உயிரிழப்பு

வவுனியா, ஒக. 9

வவுனியாவில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மூவர் படுகாயமடைந்தனர். அவர்கள் வவுனியா பொது மருத்துமவனையில் சேர்க்கப்பட்டனர். இந்த விபத்து நேற்றுப் பிற்பகல் நடந்தது.

கொழும்பு வானூர்தி நிலையத்திலிருந்து வவுனியா நோக்கி வந்து கொண்டிருந்த ஹைஏஸ் வாகனம் வவுனியாவிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற ஹன்ரர் வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. வவுனியா .இ.போ.ச. சாலைக்கு முன்பாக இந்த விபத்து நிகழ்ந்தது. தற்போது சுவிஸர்லாந்தில் புலம்பெயர்ந்து வசிக்கும் காந்தன் (வயது 56) என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். படுகாயமடைந்த மூவர் வவுனியா பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-10)

## கிளிநொச்சியைச் சேர்ந்த இருவர் பேருந்துச் சில்லில் நசியுண்டு சாவு

### கதிர்காமம் சென்ற போது பரிதாபம்

கிளிநொச்சி, ஒக. 9

பேருந்து சில்லில் சிக்கி யாத்திரிகர்கள் இருவர் உயிரிழந்தனர். இந்தப் பரிதாபச் சம்பவம் கதிகாமத்தில் நேற்று நடந்தது. கிளிநொச்சியைச் சேர்ந்த யாத்திரிகர்கள் இருவரே உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. கிளிநொச்சியில் இருந்து கதிர்காமத்துக்குச் சென்றவர்கள் அங்கு அருகிலுள்ள மைதானத்தில் உறங்கிக் கொண்டிருந்தனர். நேற்று அதிகாலை அவர்களை ஏற்றிச் சென்ற பேருந்தை அதன் சாரதி பின்னோக்கி நகர்த்த முற்பட்டுள்ளார். அதன் போதே இந்த விபத்து நடந்துள்ளது.

சம்பவத்தில் மூவர் படுகாயமடைந்தனர். அவர்கள் கதிர்காமம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.


அவர்களில் இருவர் உயிரிழந்தனர். பாரதிபுரத்தைச் சேர்ந்த சி.ஐங்கரன் (வயது- 41), நா.நிதர்சன் (வயது - 18) ஆகியோரே உயிரிழந்தனர்.

படுகாயமடைந்த மற்றுமொருவர் அம்பாந்தோட்டை மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

பேருந்தின் சாரதி கைது செய்யப்பட் டுள்ளார். பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஐ-10)

## கட்டுப்பாட்டை இழந்த பேருந்து தடம்புரண்டதில் ஒருவர் சாவு

### 11 பேர் காயம்; அரணாயக்கவில் சம்பவம்



கொழும்பு, ஒக. 9

வேகக் கட்டுப்பாட்டை இழந்த பேருந்து வீதியை விட்டு விலகித் தடம்புரண்டு விபத்துக்குள்ளானது. அதில் பெண்ணொருவர் உயிரிழந்தார். 11 பேர் காயமடைந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. இந்த விபத்து நேற்று அரணாயக உஸ்ஸாபிடியப் பகுதியில் நடந்தது. இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச்சொந்தமானபேருந்தே விபத்துக்குள்ளானது. வழமையானசேவையில்ஈடுபட்ட பேருந்து பயணிகளை ஏற்றிக் கொண்டு சென்றது. திடீரென வேகக் கட்டுப்பாட்டை இழந்து பேருந்து தடம்புரண்டது எனத் தெரிவிக்கப்பட்டது. விபத்தில் 12 பேர் காயமடைந்தனர். அவர்கள் மாவனெல்லை மருத்துவமனையில்சேர்க்கப்பட்டனர். அவர்களில் பெண் ஒருவர் உயிரிழந்தார் என்றுதெரிவிக்கப்பட்டது.மேலதிக விசாரணைகளை அரணாயக்க பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-10)

# அரசியல் கைதிகளின் விடுதலைக்காக போராட்டங்கள்



யாழ்ப்பாணம், ஒக. 9

அரசியல் கைதிகளை விடுவிக்கக் கோரி வடக்கின் 3 மாவட்டங்களில் நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. யாழ்ப்பாணத்தில் மையப் பேருந்து நிலையம் முன்பாகவும், கிளிநொச்சியில் கந்தசுவாமி ஆலய முன்றிலினும், வவுனியாவில் இ.போ.ச பேருந்து நிலையத்துக்கு முன்பாகவும் போராட்டம் இடம்பெற்றது.




"சிறைச்சாலைகளில் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு நீதி வேண்டும். நிமலரூபனின் படுகொலைக்கு பதில் என்ன?

டில்ருக்சனின் படுகொலைக்கு பதில் என்ன?

அரசியல் கைதிகளுக்கு விடுதலை இல்லையா?

நீதி அமைச்சரே பதில் கூறு" என பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சிறைச்சாலையில் அரசியல் கைதிகள் திட்டமிட்டு படுகொலை செய்யப்பட்டமைக்குக் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. படுகொலை செய்யப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு உரிய இழப்பீடுகளை வழங்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு மற்றும் கிளிநொச்சி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கம் ஆகியன இணைந்து இந்தக் கவனவீர்ப்பை ஏற்பாடு செய்திருந்தன. (ஐ-10)

### நல்லூர் துப்பாக்கிச்சூடு:

## அடையாளம் காணப்பட்டார் மறியலிலுள்ள சந்தேகநபர்

யாழ்ப்பாணம்,ஒக.9

நல்லூர் ஆலய பின்வீதியில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள முதன்மைச் சந்தேகநபர் அடையாள அணிவகுப்பில் அடையாளம் காட்டப்பட்டார்.

இந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்கள் மூவரையும் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை தொடர் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

கடந்த மாதம் 15 ஆம் திகதி யாழ்.நல்லூர் ஆலயத் தெற்கு கோபுர வாசல் வீதியில் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது. நீதிபதி மா. இளஞ்செழியனை இலக்கு வைத்து துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

அதில் நீதிபதியின் மெய்ப்பாதுகாவலராக இருந்த பொலிஸ் உபபரிசோதகர் ஹேமரத்ன ஹரிச்சந்திர உயிரிழந்தார். இன்னொரு பொலிஸ் உத்தியோகத்தர் படுகாயமடைந்தார். இந்தத் துப்பாக்கிச் சூட்டைத்தான் தான் மேற்கொண்டார் என புங்குடுதீவுப் பகுதியைச் சேர்ந்த செல்வராசா ஜெயந்தன் என்பவர் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்திருந்தார். சரணடைந்த நபரை யாழ்.நீதிவானின் இல்லத்தில் முற்படுத்தி னர். அவரை நேற்று வரை விளக்கமறி யலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பலத்த பாதுகாப்பின் மத்தியில் சந்தேக நபர் மன்றுக்கு அழைத்து வரப்பட்டார். வழக்குகளுடன் சம்பந்தப்படாத 6 பேர் மத்தியில் சந்தேக நபர் அடையாள அணி வகுப்புக்கு நிறுத்தப்பட்டார். மூடிய மன்றில் நடைபெற்ற இந்த அடையாள அணிவகுப்பில், நீதிபதி மா.இளஞ்செழியனின் வாகன சாரதி மற்றும் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் மற்றும் சந்தேக நபர் தப்பிச் சென்ற போது, பறித்துச் சென்ற மோட்டார் சைக்கிளின் உரிமையாளர் மன்றுக்கு வந்திருந்தனர்.

சந்தேக நபரை அடையாளம் காட்டினர். அடையாள அணிவகுப்பில் அடையாளம் காண்பிக்கப்பட்ட சந்தேகநபரான செல்வராசா ஜெயந்தன் மற்றும் அவருடன் மது அருந்திய குற்றச்சாட்டில் கைதுசெய்யபட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இருவரும் மீண்டும் மன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். எதிர்வரும் 22 ஆம் திகதி வரை அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ஐ-10,106)

# மணல், மரம் கொள்ளை; எதிர்த்து மக்கள் போராட்டம்



மட்டக்களப்பு, ஓக. 9
மட்டக்களப்பு - செங்கலடிப் பிரதேச செயலகப் பிரிவில் மணல் மற்றும் மரக் கொள்ளைகள் அதிகரித்துள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பாலாமடு, புத்தம்புரி மற்றும் சின்னப் பொத்தானை ஆற்றுப் பகுதிகளில் மணல் அகழ்வதைக் கண்டித்தும், புலுட்டுமானோடை, வெரச்சியாறு, உடும்புக்கல்லாறு, மற்றும் கார் மலை போன்ற வனப்பகுதிகளில் மரம் வெட்டுவதை நிறுத்துமாறும் ஆர்ப்பாட்டக்காரர்கள் வலியுறுத்தினர்.

இலுப்பையடிச்சேனை, வேப்பவெட்டுவான் மற்றும் பாலர்சேனை கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஒன்றிணைந்து ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்தன. "சட்ட விரோதமான முறையில் மணல் அகழப்படுகிறது. இதனால் ஆறு பெரிதாகி ஆழம் அதிகரித்து நிலம் மற்றும் குடியிருப்புகள் அழிவடைகின்றன. மழை காலங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்படுகிறது. அகழப்படும் மண்ணை கனரக வாகனங்கள் மூலம் ஏற்றிச் செல்லப்படுவதால் வீதிகள் சேதமடைகின்றன. வீதியில் செல்லும் கால்நடைகளும் விபத்துக்குளாகின்றன. இந்தப் பிரதேச மக்கள் வறுமையில் வாடும் போது வெளி இடங்களைச் சேர்ந்தவர்கள் எங்களது வளத்தை வைத்துக் கோடீஸ்வரராக வாழுகின்றனர். எமது மக்கள் மலசல கூடம் கட்டுவதற்கும் அரசை நாட வேண்டியுள்ளது. கடந்த முறை மணல் அகழ்வதை நிறுத்துமாறு கோரி ஆர்ப்பாட்டம் செய்து பிரதேச செயலர் உ. உதயஸ்ரீதரிடம் கோரிக்கைகள் அடங்கிய மனுவை கையளித்தோம். அதற்குப் பிரதேச செயலர் மணல் அகழ்வை நிறுத்துவது தொடர்பாக நான் மாத்திரம் முடிவெடுக்க முடியாது.

மாவட்டச் செயலரிடமும் மனுவைக் கையளிக்குமாறு கூறினார். அதனடிப்படையில் மாவட்டச் செயலரிடமும் மனுவைக் கையளித்தோம். இது தொடர்பாக சரியான தீர்வு கிடைக்கும் என மாவட்டச் செயலர் பி.எம்.எஸ்.சார்ள்ஸ் எங்களிடம் உறுதியளித்தார். ஆனால் தற்போது புவிச்சரிதவியல் திணைக் களத்தால் மணல் ஏற்றுவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது" என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (ஜ-10, 47)



கொழும்பு புனித அந்தோனியார் ஆண்கள் பாடசாலையின் மூன்று மாடிக் கட்டடத் துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. அமைச்சர் மனோ கணேசன் கட்டடத்துக்கான அடிக்கல்லை நட்டார். (ஜ)

# பல்கலை. மாணவர்கள் சுட்டுக்கொலை; பொலிஸாரின் பிணை மனு நிராகரிப்பு

யாழ்ப்பாணம், ஓக.9
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் சுட்டுக்கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களின் பிணை மனுவை யாழ். மேல் நீதிமன்று நிராகரித்தது.

சந்தேகநபர்களால் தாக்கல் செய்யப்பட்ட பிணை மனு மீதான விசாரணை யாழ்ப்பாண மேல் நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன் போது நீதிபதி மா. இளஞ்செழியன் இந்த உத்தரவைப் பிறப்பித்தார். "இதுவொரு கொலை வழக்கு. அதனை மேலும் விசாரிக்க வேண்டும்" என்று நீதிபதி, தெரிவித்தார்.

**பின்னணி**

கொக்குவில் குளப்பிட்டிச் சந்திப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் பல்கலைக்கழக மாணவர்கள் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தனர். இந்தச் சம்பவம் கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 20 ஆம் திகதி நடந்தது.

மோட்டார் சைக்கிளை நிறுத்துமாறு வழங்கிய உத்தரவை மீறிப் பயணித்த போதே, அவர்கள் மீது துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவத்தில் கலைப்பிரிவில் கல்வி கற்று வந்த மூன்றாம் வருட மாணவர்களான எஸ்.சுலக்ஸன் மற்றும் என். கஜன் ஆகிய மாணவர்கள் உயிரிழந்தனர். (ஜ-10)


# அவைத்தலைவர் தெரிவால் மாகாண சபையில் குழப்பம்

கொழும்பு, ஓக. 9
புதிய அவைத்தலைவர் ஒருவரைத் தெரிவு செய்வதற்கு வட மத்திய மாகாண சபை உறுப்பினர்களிடையே நேற்றும் வாக்குவாதம் ஏற்பட்டது. எதிர்க்கட்சியினர் நிலத்தில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். நியாயப்பத்திரத்தையும் தீ வைத்துக் கொளுத்தினர்.

வடமத்திய மாகாண சபை அமர்விலேயே இந்தப் பதற்றமான சூழல் ஏற்பட்டது. வட மத்திய மாகாண சபையில் கடந்த மாதம் 18ஆம் திகதியும் கடுமையான வாதப்பிரதிவாதங்கள் ஏற்பட்டிருந்தன. ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் 11 பேர் இணைந்து வடமத்திய மாகாண சபையின் அவைத் தலைவர் ரி.எம்.ஆர். சிறிபாலவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைத்தனர். அந்தப் பிரேரணை கடந்த மாதம் 18ஆம் திகதி விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. பிரேரணை விவாதத்தால் உறுப்பினர்களிடையே கடும் மோதல் ஏற்பட்டது. அதனையடுத்து சபை நடவடிக்கைகள் நேற்று வரை ஒத்திவைக்கப்பட்டன.

இந்த நிலையில் வட மத்திய மாகாண சபை நேற்றுக் கூடியது. கூட்டு எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மாகாண சபை உறுப்பினர்களுக்கும், ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களுக்கும் இடையில் கடும் வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றன. பிரதி அவைத் தலைவர் டி.எம். அமரதுங்க அவைக்குத் தலைமை தாங்கினார். தொடர்ந்தும் எதிர்க்கட்சியினர் நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைத்தனர். அதனால் ஒன்றிணைந்த எதிர்க் கட்சியினர் கூச்சல், குழப்பம் விளைவித்தனர். ஒரு சிலர் கீழே அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். அதனையடுத்து, அவை பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது. மீண்டும் கூடிய போது, நம்பிக்கையில்லா பிரேரணை நிறைவேற்றப் பட்டது. புதிய அவைத் தலைவர் தெரிவு செய்யப்பட்டார். (ஜ-10)

## நீதிபதி இளஞ்செழியனை சந்தித்தார் ஆனந்த தேரர்



யாழ்ப்பாணம், ஓக. 9
யாழ்ப்பாண மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியனை , முன்னாள் இராணுவ அதிகாரியான ஆனந்த தேரர் நேற்றுச் சந்தித்தார். இந்தச் சந்திப்பு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் நடந்தது. நல்லெண்ண அடிப்படையில் இந்தச் சந்திப்பு நடந்தது எனத் தெரிவிக்கப்பட்டது.

துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்த மெய்ப் பாதுகாவலரான உப பொலிஸ் பரிசோதகர் சரத் ஹேமச்சந்திரவின் இழப்புக் குறித்து இருவரும் கலந்துரையாடினர் எனத் தெரிவிக்கப்பட்டது. நீதிபதியின் மனிதாபிமான செயற்பாடுகளுக்கு ஆனந்த தேரர் நன்றி தெரிவித்தார். அவர் நினைவுப்பரிசு ஒன்றையும் நீதிபதிக்கு வழங்கினார். (ஜ-10.37)

## ரணிலுக்காக சிறப்பு வழிபாடு

வவுனியா, ஓக.9
தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் அனுபவத்தின் 40 வருட நிறைவை முன்னிட்டு வவுனியா கோவில் குளம் அகிலாண்டேசுவரி ஆலயத்தில் சிறப்பு வழிபாடுகள் நேற்று இடம்பெற்றன. வவுனியா பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் நிகழ்வு இடம்பெற்றது. இதில் வவுனியா மாவட்ட மேலதிக செயலர் த. திரேஸ்குமார், பிரதேச செயலர் கா. உதயராசா, பிரதேச கலாசார உத்தியோகத்தர் வீ. பிரதீபன், அகிலாண்டேசுவரி ஆலயத்தின் செயலாளர் ஆறுமுகம் நவரட்ண ராஜா,கிராம அலுவலர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஜ-10)

# 100 நாள் கடந்து தொடர்கிறது போராட்டம்

## தேவாலயத்தில் சிறப்பு வழிபாடு

கிளிநொச்சி, ஓக. 9
காணி விடுவிப்புக் கோரி தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் இரணைதீவு மக்கள் நேற்றுடன் போராடும் இடத்தை மாற்றினர். கடந்த 100 நாள்களாக இரணைமாதா நகர் கடற்கரையை அண்டிய பகுதியில் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் நேற்றிலிருந்து இரணைமாதா நகர் தேவாலயத்துக்கு முன்பாக போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். ஆலயத்தில் சிறப்புப் பூசை வழிபாடுகளை மேற்கொண்டனர்.




அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர், அதிகாரிகள் என அனைவரதும் வாக்குறுதிகள், காலக்கெடுக்கள் காற்றோடு பறந்து விட்ட நிலையில் இரணைதீவு மக்களின் போராட்டம் நூறு நாள்களைக் கடந்துள்ளது. " நாங்கள் போராட்டத்தை ஆரம்பித்து நூறு நாள்கள் கழிந்துள்ளன. எமது போராட்டக் களத்துக்கு பல அரசியல்வாதிகள் வந்து சென்றனர். இதன் போது அவர்கள் அளித்த எந்த வாக்குறுதிகளும் நிறைவேற்றப் படவில்லை. எம்மைப் பார்க்க வந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், இராஜாங்க அமைச்சர், அரசியல்வாதிகள் ஆகியோரின் உறுதி மொழிகளும், காலக்கெடுக்களும் இந்த கடற்கரைக் காற்றோடு சென்று விட்டது. இனி எங்களது போராட்டத்தை வேறு வடிவத்தில் மேற்கொள்ளவும் தீர்மானித்திருக்கின்றோம்" என்று போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர்.

"எங்களுடன் பேசிக்கொள்வது போல காட்டிக் கொண்டு மறுபக்கத்தில் திட்டமிட்ட நில ஆக்கிரமிப்புக்களை அரசு முன்னெடுத்து வருகின்றது. பூர்வீகமாக வாழ்ந்த இரணைதீவு மக்களுடைய நிலத்தை அரசு விடுவிக்கவில்லை.

இவ்வாறு போராடி வருகின்ற மக்கள் 100 நாள்களுக்கு மேலாக வீதியிலிருந்து தொழிலின்றி, பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் போராடி வருகின்றனர். மக்களைச் சந்தித்த இராஜாங்க அமைச்சர் இரண்டு வாரங்களுக்குள் அரச தலைவருடன் பேசி தீர்வைத் தருவதாக உறுதியளித்தார். 2 மாதங்களைக் கடந்த நிலையில் அந்த மக்களுக்கான தீர்வு இன்னமும் வழங்கப்படவில்லை. என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார். (ஜ-6,10)



# பிரேரணை மீதான விவாதம்: நாளையே முடிவு எட்டப்படும்

## சபாநாயகர் நாடாளுமன்றில் அறிவிப்பு

கொழும்பு, ஒக.9

வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள முடியுமா என்பது தொடர்பில் சபாநாயகர் கரு ஜயசூரிய தனது முடிவை நாளை வியாழக்கிழமை நாடாளுமன்றத்துக்கு அறிவிக்கவுள்ளார்.

சட்டமா அதிபரிடம் ஆலோசனை பெறப்பட்டே தீர்மானம் அறிவிக்கப்படும் என்று அவர் நேற்றுத் தெரிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்றுப் பிற்பகல் சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் கூடியது.

சபாநாயகர் அறிவிப்பு, பொதுமனுத் தாக்கல், வாய்மூல விடைக்கான கேள்விச்சுற்று, 23/2 இன் கீழான கேள்வி பதில், அமைச்சுகள் அறிவிப்பு ஆகியன முடிவடைந்த பின்னர் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பினார்.

"பொது எதிரணியிலுள்ள 30க்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பத்துடன் அயலுறவு அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அது விரைவில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும். இது பற்றி தங்களின் நிலைப்பாடு என்ன?" என்று சபாநாயகரிடம் வினவினார் விமல் வீரவன்ஸ.

அதற்குப் பதிலளித்த சபாநாயகர், "இது பற்றி இன்று (நேற்று) நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் ஆராயப்பட்டது. இது தொடர்பில் சட்டப் பிரச்சினையொன்று முன்வைக்கப்பட்டது சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்ற பின்னர் வியாழக்கிழமை மீண்டும் ஆராயப்படும்" என்றார்.

"நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்து சட்டப் பிரச்சினை எதுவும் இல்லை" என்று விமல் வீரவன்ஸ வாதிட்டார்.

இதன்போது எழுந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, "சபாநாயகரின் தீர்ப்பு கிடைத்த பின்னர் இவர்களால் அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கக்கூடியதாக இருக்கும். அது பற்றி எமக்குப் பிரச்சினை இல்லை. எதிர்க்கவும் மாட்டோம். தீர்ப்பு வருவதற்கு முன்னர் இவர்கள் ஏன் சத்தமிடுகின்றனர்? ஐ.நா. அலுவலகத்துக்கு முன்னால் சென்று பாயொன்றை விரித்து அயலுறவு அமைச்சருக்கு எதிராக உண்ணாவிரதம் இருக்கச் சொல்கின்றனரா?" என்று வினவினார்.

இதனால் சீற்றமடைந்த விமல் வீரவன்ஸ "இது அங்கொடை வைத்தியசாலை இல்லை. இது நாடாளுமன்றம்" என்று பிரதமரை விமர்சித்தார்.

அதன்பின்னர் கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில "நீதிமன்ற விசாரணையில் இருக்கும் விடயமொன்று தொடர்பில் நாடாளுமன்றத்தில் விவாதிக்க முடியாது. அது போல விசாரணை ஆணைக்குழுவிலுள்ள விடயம் குறித்தும் விவாதிக்க முடியாது.

எனினும் வெளிவிவகார அமைச்சருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டு பிணைமுறி விவகாரத்துடன் தொடர்புபட்டது அல்ல. அதற்குப் புறம்பானதொரு விடயமே என்று நம்பிக்கையில்லாப் பிரேரணையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தீர்மானம் எடுக்கும்போது இந்த விடயத்தையும் கருத்திற்கொள்ள வேண்டும்" என்று தமது தரப்பு கருத்தை முன்வைத்தார்.

அதன்பின்னர் ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க உரையாற்றினார்.

"நம்பிக்கையில்லாப் பிரேரணை நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட வேண்டும். அது இன்னும் உள்வாங்கப்படவில்லை. அவ்வாறு உள்வாங்கிய பின்னரே அதை விவாதிப்பதா அல்லது இல்லையா என்பது பற்றி சட்ட ஆலோசனை பெறப்படும். ஒழுங்குப் பத்திரத்தில் இடம்பெறுவதற்கு முன்னர் எப்படி சட்டப் பிரச்சினை ஏற்படும்?' என்று வினா தொடுத்தார்.

"சட்டப் பிரச்சினை இருந்ததால் தான் அதை உள்ளடக்கவில்லை. நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்து எனது முடிவை வியாழக்கிழமை அறிவிக்கவுள்ளேன், அதன்பின்னர் ஏனையவற்றை செய்யலாம்" என்று சபாநாயகர் பதிலளித்தார். (ற)



# வீட்டுத் திட்டம் வழங்கக் கோரி வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

வவுனியா, ஒக.9

வீட்டுத்திட்டம் வழங்கக் கோரி கணேசபுரம் கிராம மக்கள் வவுனியா பிரதேச செயலகத்தை முற்றுகையிட்டு நேற்றுப் பிற்பகல் போராட்டம் நடத்தினர்.

வவுனியா மரக்காரம்பளை கிராம சேவகர் பிரிவுக்கு உட்பட்ட கணேசபுரம் கிராமத்திலுள்ள 30 குடும்பங்களைச் சேர்ந்தவர்களே தங்களுக்கு வீட்டுத்திட்டம் வழங்கக் கோரிப் போராட்டத்தில் ஈடுபட்டனர். போர் காரணமாக இடம்பெயர்ந்து வந்த மக்கள் மற்றும் இந்தியாவுக்கு அகதிகளாகச் சென்று தாயகம் திரும்பிய மக்கள் 2004ஆம் ஆண்டு கணேசபுரம் கிராமத்தில் மீள்குடியமர்வு செய்த போதும் இதுவரை வீட்டுத்திட்டம் வழங்கப்படாது புறக்கணிக்கப்படுகின்றனர் என்றும் அவர்கள் தெரிவித்தனர். (ற)

# விடுதலைப் புலிகள் அமைப்பு இயங்க ஆரம்பித்துவிட்டதா?

## மகிந்த ஆதரவு அணியின் பத்ம உதயசாந்த எம்.பி. கேள்வி

கொழும்பு, ஒக.9

ஆவா குழு உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். விடுதலைப் புலிகள் அமைப்பு மீள இயங்க ஆரம்பித்துள்ளதா?. இது தொடர்பில் அரசின் நிலைப்பாடு என்ன? இவ்வாறு கேள்வி எழுப்பினார் மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர் பத்ம உதயசாந்த.

நாடாளுமன்ற அமர்வு நேற்றுப் பிற்பகல் 1.30 மணிக்கு சபாநாயகர் கரு ஜெயசூரிய தலைமையில் கூடியது. அதில் வாய்மூல கேள்வி நேரத்தின்போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

கிழக்கு மாகாணத்தில் ஐந்து பொலிஸ் நிலையங்களை இலக்கு வைத்து விடுதலைப்புலிகள் அமைப்பு தாக்குதல் நடத்திய திகதி, அதில் கொல்லப்பட்ட பொலிஸாரின் எண்ணிக்கை, தாக்குதலின் போது சொத்துகளுக்கு ஏற்பட்ட இழப்பீடு மதீப்பீடு செய்யப்பட்டுள்ளதா, தாக்குதலுக்கு பொறுப்புகூற வேண்டியவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனரா? என்றும் அவர் சட்டம், ஒழுங்கு அமைச்சரிடம் கேள்விகளை எழுப்பினார்.

சட்டம், ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க நேற்று சபைக்கு வராததால் இந்தக் கேள்விகளுக்கு ஆளுங்கட்சி பிரதம கொறடாவான அமைச்சர் கயந்த கருணாதிலக பதில்களை வழங்கினார்.

1990 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 11 ஆம் திகதியே கிழக்கு மாகாணத்தில் ஐந்து பொலிஸ் நிலையங்களை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அந்தத் தாக்குதல்களில் 252 பொலிஸ் அதிகாரிகள் கொல்லப்பட்டனர் என்று அமைச்சர் கயந்த கருணாதிலக பதிலளித்தார்.

அதன்பின்னர் இடையீட்டுக் கேள்வியொன்றை பத்ம உதயசாந்த கேட்டார்.

"ஆவா குழுவின் தலைவர் உட்பட ஆறு உறுப்பினர்கள் கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன. விடுதலைப்புலிகள் அமைப்பு மீள இயங்க ஆரம்பித்துள்ளது என்பதையே பாதுகாப்புத் தரப்பின் தகவல்கள் எடுத்துக் காட்டுகின்றன. பொலிஸ்மா அதிபரும் இது குறித்து யாழ்ப்பாணத்தில் வைத்து அறிவிப்பொன்றை விடுத்திருந்தார். விடுதலைப்புலிகள் அமைப்பு வடக்கில் மீள இயங்க ஆரம்பித்துள்ளனர் என வெளியாகி வரும் தகவல்கள் குறித்து அரசின் பதில் என்ன? பொறுப்புடன் பதிலளிக்கப்படுமா?" என்று அவர் கேள்வி எழுப்பினார்.

"இந்தக் கேள்வி சட்டம், ஒழுங்கு அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுவரப்படும். அவர் பதிலளிப்பார்" என்றுஆளுங்கட்சி பிரதம கொறடாவான அமைச்சர் கயந்த கருணாதிலக பதிலளித்தார். (ற)

# ரவி தொடர்பில் இருவாரத்தில் முடிவு

## சு.க. தெரிவிப்பு

கொழும்பு, ஒக.9

சர்ச்சைக்குரிய பிணைமுறி மோசடி விவகாரம் மற்றும் சொகுசு வீடு தொடர்பில் விசாரணைகளில் சிக்கியுள்ள வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க தொடர்பில் இரண்டு வாரங்களில் தனது தீர்மானத்தை அரச தலைவர் அறிவிப்பார்.

இவ்வாறு விவசாய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்ன தெரிவித்தார். அரச விவசாய அபிவிருத்தி அமைச்சில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

பிணைமுறி மோசடி தொடர்பில் அரச தலைவர் ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொண்டுள்ளது. இந்தக் குழுவின் விசாரணைகளில் தற்போது அயலுறவு அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக சாட்சியமளிக்கப்பட்டுள்ளது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியே பிணைமுறி மோசடி தொடர்பில் முதலாவது முறைப்பாடு அளித்திருந்தது.

மோசடியில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக சு.க. எப்போதும் செயற்படும். இந்த விடயம் தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன பரிசீலித்து வருகின்றார். இன்னும் இரண்டு வாரங்களில் தனது இறுதி முடிவை அவர் அறிவிப்பார். என்றார். (ற)

# பிணைமுறி விசாரணையில் நம்பிக்கையில்லை

## இப்படிச் சொல்கிறார் விஜித ஹேரத் எம்.பி.

கொழும்பு,ஒக.9

மத்தியவங்கி பிணைமுறி விவகாரம் தொடர்பில் அரச தலைவர் விசாரணை ஆணைக்குழு முன்னெடுக்கும் விசாரணைகளில் நம்பிக்கையில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார். கொழும்பில் நேற்று நடந்த ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது, மத்திய வங்கியின் பிணைமுறி விவகாரம் குறித்து தான் குற்றமற்றவர் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஒரு போதும் கூற முடியாது. இந்தப் பிரச்சினையில் அமைச்சரோ, தலைமை அமைச்சரோ யார் சம்பந்தப்பட்டிருந்தாலும் விசாரணை ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இவர்களுக்கு எதிராக போதியளவு தெளிவான சாட்சிகள் இருக்குமாயின் பேதமின்றி இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்" என்றார். (ஜ)


# கிணற்றில் சடலம் மீட்பு

வடமராட்சி, ஒக. 9

கரவெட்டிப் பகுதியில் கிணற்றில் இருந்து குடும்பத் தலைவர் ஒருவர் சடலமாக நேற்று மீட்கப்பட்டார். கரவெட்டி கிழக்குப் பகுதியைச் சேர்ந்த ஆர்.கஜேந்திரகுமார் வயது 41 என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக மந்திகை ஆதார மருத்துமவனையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை நெல்லியடிப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். குடும்பத் தகராறு காரணமாக தவறான முடிவை எடுத்து தனது வீட்டு கிணற்றுக்குள் அவர் விழுந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஜ-10, 26)



கிழக்கு மாகாண சபையின் சிறப்பு அமர்வும், கிழக்கு மாகாணத்தின் புதிய ஆளுநராக நியகமிக்கப்பட்ட ரோஹித போகல்லாகமவுக்கு சிறப்பு பொலிஸ் அணிவகுப்பும் கிழக்கு மாகாண சபை வளாகத்தில் நேற்று இடம்பெற்றது. (ஜ-10)



# பல்கலை நுழைவாயிலை முற்றுகையிட்டுப் போராட்டம்

மட்டக்களப்பு, ஓக. 9
கிழக்குப் பல்கலைக் கழக மாணவர்கள் பல்கலைக்கழகத்தின் முதன்மை நுழைவாயிலை முற்றுகை யிட்டு நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். "மாணவர்களின் விடுதிப் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு வழங்கப்படவேண்டும், மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வகுப்புத்தடையை நீக்கவேண் டும்" ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாகத் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில் நேற்றுத் திடீரென கிழக்குப் பல்கலைக் கழக வந்தாதாறுமூலை வளாக விடுதியிலி ருந்து பேரணியாகச் சென்ற மாணவர்கள், முதன்மை நுழைவாயில் முன்பாக ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர். பின்பு நிர்வாகக் கட்டடத்தை முற்றுகையிட்டு அவர்கள் கோசங்களை எழுப்பினர்.

"நாங்கள் நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றோம். இதுவரை எந்தவித உத்தரவாதங்களும் கிழக்குப் பல்கலைக்கழக நிர்வாகத்தினரால் வழங்கப்படவில்லை. எமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும்வரை நாங்கள் தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுபடுவோம். எங்களது போராட்டத்துக்கு தலைமை தாங்கிய 5 மாணவர்களை இரண்டு வருடங்களுக்கும், மேலும் 5 மாணவர்களை ஒரு வருடத்துக்கும் பல்கலைக்கழக நிர்வாகம் இடைநிறுத்தியுள்ளது. இவ்வாறான மாணவர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும்" - என்று ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மாணவர்கள் வலியுறுத்தினர். (ஜ-10, 47)

# நீதிமன்றில் தோன்றிய பெண்ணின் நடை உடை பாவனையால் குழப்பம்

## விசாரணை நடத்த நீதிவான் கட்டளை

ஊர்காவற்றுறை, ஓக. 9
விபத்துவழக்குஒன்றில்மன்றில் முன்னிலையாகிய பெண்ணின் நடை, உடை, பாவனைக்கும்அவரதுபெயருக்கும் இடையே மத ரீதியானவேறுபாடுகாணப்பட்டதால்ஊர்காவற்றுறைநீதிவானுக்குச் சந்தேகம் எழுந்தது. அதனால் ஆள் மாறாட்டம் ஏற்பட்டுள்ளதா? என்பது தொடர்பில் விசாரணை செய்துஅறிக்கைசமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு நீதிவான் கட்டளையிட்டார்.

விபத்துச்சம்பவம்தொடர்பில் ஊர்காவற்றுறை நீதிவான் மன்றில் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். அந்தவழக்கின்இருதரப்பினரும்கடந்த 4ஆம் திகதி வெள்ளிக்கிழமைமன்றில்முன்னிலையாகினர். அவர்கள் இருவரும் இணக்கத்துடன் வழக்கைமுடிவுறுத்துவதாக மன்றில் தெரிவித்தனர்.

இந்தவழக்கின்ஒருதரப்பான பெண் ஒருவரிடம்பெயரைக் கூறுமாறு மன்று கேட்டுள்ளது. இஸ்லாமிய மதத்தைச் சார்ந்த பெயரை 'அந்தப் பெண் கூறியுள்ளார். எனினும்அவர் இந்துமதப்பெண்களின்கலாசாரமானசேலை அணிந்து, கழுத்தில் தாலி நூல் தரித்துக் காணப்பட்டார். அதனால்அந்தப்பெண் தொடர்பில் சந்தேகம் கொண்ட நீதிவான் ஏ.எம். எம். றியாழ், அவரது ஆள் அடையாள அட்டை மன்றில் சமர்ப்பிக்கப் பணித்தார்.

ஆள்அடையாளஅட்டைஇல்லையெனவும் கடவுச்சீட்டு மட்டுமே உள்ளது எனவும் அந்தப் பெண் கூறியதுடன் அதனைமன்றில்முன்வைத்தார். அதனை மன்று ஆராய்ந்தது. அந்தப் பெண்ணால் மன்றில் தெரிவித்த பெயர் கடவுச்சீட்டில் சரியாக இருந்த போதும், அவரது ஒளிப்படம் முஸ்லிம் பெண்கள்அணியும்கலாசாரஉடையணிந்தேகாணப்பட்டுள்ளது. இதனால் சந்தேகமடைந்த நீதிவான், ஆள் மாறாட்டம் ஏற்பட்டுள்ளதா? என்பது தொடர்பில்உரியதிணைக்களங்களிடம் விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். அதுவரை விபத்துச் சம்பவம் தொடர்பான வழக்கு நீதிமன்றால் ஒத்திவைக்கப்பட்டது. (வ-37)

# ஆவா குழுவை உருவாக்கியது இராணுவமே

## சிறிதரன் எம்.பி. சபையில் சாடல்

கொழும்பு, ஓக. 9
"வடக்கில் கைது, தேடுதல்களால் முன்னாள் போராளிகளின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது" என்று தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், இராணுவமே ஆவா குழுவை உருவாக்கியது எனவும் குற்றஞ்சாட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவக சட்டவரைவு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது: 12 ஆயிரம் போராளிகள் மறுவாழ்வளிக்கப்பட்டு சமூகமயப்படுத்தப்பட்டுள்ளனர் என்றும், அவர்களுக்கு எவ்வித துன்பமும் வராது என்றும் பெருமையாக அறிவிக்கப்பட்டது.

ஆனால், ஜேர்மன் தொழில்நுட்பக் கல்லூரிக்குச் சென்று தொழில்நுட்பப் பயிற்சிகளைப் பெறுவதற்கு முன்னாள் போராளிகளுக்கு வயது தடையாக இருக்கின்றது. இவை உட்படப் பல பிரச்சினைகள் இருக்கையில், கடந்தகால சம்பவமொன்றுக்காக வவுனியா மேல் நீதிமன்றால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவருக்கு ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. தற்போது அவர் சிறைவைக்கப் பட்டுள்ளார்.

மறுவாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ள முன்னாள் போராளிகள் எந்தவித துன்பமும் இன்றிச் சிறப்பாகவே வாழ்கின்றனர் என்றே பன்னாட்டுச் சமூகத்துக்கு காண்பிக்கப்படுகின்றது. ஆனால், நிம்மதியற்ற வாழ்க்கையைத்தான் முன்னாள் போராளிகள் அனுபவிக்கின்றனர்.

எதற்கெடுத்தாலும் முன்னாள் போராளிகள் தொடர்புபடுத்தப்படுகின்றனர். யாழ்ப்பாண மேல்நீதிமன்ற நீதிபதி இலக்குவைக்கப்பட்ட சம்பவத்துக்கும், நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்குக் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட விடயத்துக்கும் முன்னாள் போராளிகளையே முடிச்சுப்போட்டனர். இதனால், மறுவாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ள போராளிகளின் வாழ்க்கை கேள்விக்குறியாகியுள்ளது.

தற்போது யாழ்ப்பாணத்தில் சிறப்பு அதிரடிப் படையினரும், பொலிஸாரும் இணைந்து கூட்டு ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். போர்க்காலத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்த இராணுவத்தினர்தான் ஆவா குழுவை உருவாக்கினர். அந்தக் குழு கொழும்பு வந்துவிட்டது என்று பேசப்படுகின்றது. இராணுவம் உருவாக்கிய குழுவை ஏன் கட்டுப்படுத்த முடியாமல் உள்ளது?" - என்றார். (4)

## கந்தபுராணவாழ்வியல்: 13ஆம் நாள் இன்று

யாழ்ப்பாணம், ஓக.9
நல்லூர் கந்தசுவாமி ஆலய திருவிழாவை முன்னிட்டு கந்தபுராண வாழ்வியல் தொடர்பான விழிப்புணர்வை மேம்படுத்தும் நிகழ்வுகள்அரங்கேறும் "கந்தபுராணக் கலாசாரம் இந்த மண்ணின் அடையாளம்" 13ஆம்நாள்நிகழ்வு இன்றுபுதன்கிழமைமாலை6.30 மணிக்குநல்லைதிருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப்பணிப்பாளர் திருமதி ஹேமலோஜினி குமரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுகு முதன்மை விருந்தினராக நீர்வேலி யாழ்.சீ.சீ. தமிழ்க்கலவன்பாடசாலைஅதிபர்தி.இரவீந்திரநாதன்கலந்துகொள்ளவுள்ளார் என அறிவிக்கப்பட்டது. (21)

## இசையரங்கு இன்று

யாழ்ப்பாணம், ஓக.
நல்லூர்ஆலயத்திருவிழாவைமுன்னிட்டுஇலங்கை இளங்கலைஞர் மன்றமும் தெல்லிப்பழை துர்க்கா தேவிஆலயமும்இணைந்துநடத்தும்தெய்வீகஇசையரங்குஇன்றுபுதன்கிழமைமாலை6.45தொடக்கம் இரவு8மணிவரைநல்லூர்துர்க்காதேவிமணிமண்டபத்தில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டது. (21)

## நடமாடும் சேவை இன்று

சாவகச்சேரி ஓக. 9
சாவகச்சேரிநகரகைத்தொழில்வணிகர்மன்றப்பிரதிநிதிகளுக்கானநடமாடும்சேவைஇன்று மன்றத்தின் நமசிவாயம்மண்டபத்தில்நடைபெறுமெனஅறிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பொலிஸாரின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்தநடமாடும்சேவையில் நகரப்பகுதி வணிகர்கள் மற்றும்சந்தைவியாபாரிகள்தாம்எதிர்நோக்கும்பிரச்சினைகளைமுன்வைக்குமாறு பொலிஸார்அறிவித்துள்ளனர். (21,9)

## முதலாவது நிழல் பிரதேச சபைத் திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஓக.9
தேசோதயசபையின்கீழான நிழல் பிரதேச சபைக்கான அலுவலகம் இன்று பி.ப 3மணிக்கு இருபாலைச் சந்தியில் திறக்கப்பட வுள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்தின் முதலாவது நிழல் பிரதேச சபை இதுவாகும்.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகயாழ். இந்திய துணைத் தூதரகக் கொன்சியூலர் நடராஜனும், விருந்தினர்களாக யாழ். மேலதிக மாவட்டச் செயலர், சர்வோதயஇணைச்செயலாளர் வினியா ஆரியரட்ண, யாழ். மாவட்ட தேசோதய சபையின் தலைவர் ஆ.தனேந்திரன், யாழ். மாவட்ட சர்வோதய சபையின் இணைப்பாளர் யுகேந்திரா ஆகியோர்கலந்துகொள்வர். (ற)



வரலாற்றுச் சிறப்பு மிக்க கதிர்காமம் ஆலயத்தின் வருடாந்த ஆடிவேல் தீர்த்தத்திருவிழா நேற்றுச் சிறப்பாக இடம்பெற்றது. அதில் நாடு முழுவதிலிருந்தும் மூவின மக்களும் பங்கேற்றனர். பாதயாத்திரையாகச் சென்ற அனைவரும் தீர்த்தமாடினர். (ஜ)

# தரம் 5 மாணவர்களுக்கு வழிகாட்டல் செயலமர்வு

சாவகச்சேரி, ஓக 9



இந்த வருடம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான வழிகாட்டல் செயலமர்வு சாவகச்சேரியில் நேற்று நடத்தப்பட்டது. தென்மராட்சி கலைமன்ற கலாச்சாரமண்டபத்தில் இந்தச்செயலமர்வு நடைபெற்றது. தென்மராட்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட சுமார் 300 க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றினர். பிரபலஆசிரியர்களானஎஸ்.எஸ்.தீபன், எம்.சந்திரமோகன் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கினர். சாவகச்சேரி நுணாவில் மேற்கு சுரேஷ் மோட்டேர்ஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் சாவகச்சேரி பிரதேச இளைஞர் கழகங்களின் சம்மேளனத்தலைவர் சு.நக்கீரன் தலைமையில் இந்தச் செயலமர்வு நடைபெற்றது. இதில் விருந்தினர்களாக ஓய்வுநிலை அதிபர் க.அருந்தவபாலன், அனுசரணையாளர் சி.சுரேஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-9)

# இசைவெளியீட்டுவிழா

யாழ்ப்பாணம், ஓக.9

தென்னிந்திய மற்றும் ஈழத்துக் கலைஞர்கள் கலந்து சிறப்பிக்கும் "கலைப்பூக்கள்" இசைவெளியீட்டுவிழா இன்று மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம், செல்வா திரையரங்கில் இடம்பெறவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக இயக்குநர் ரஞ்சித், ஒளிப்பதிவாளர் பழனி ராம்குமார், நடிகர் லுத்புதின் ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாக ரீயூப் தமிழ் சுகதேவன், நடிகர் அரவிந்தன், இயக்குநர், நடிகர் பத்தநாதன், நடிகர் சிந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர் எனவும் அறிவிக்கப்பட்டது. (21)

## மகிந்தவுடன்...

பக்சவும் நானும் இணைந்து நாட்டு மக்களுக்காக நிறைவேற்ற வேண்டும் என்று விரும்புகின்றேன். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

தமிழ் வினைச்சொற்களை விவரித்தல் என்ற தலைப்பில் ஜூலம்பிட்டியே மங்கள தேரரினால் எழுதப்பட்ட புத்தகம் மேல்மாகாண காலாசார சதுக்கத்தில் நேற்று வெளியிடப்பட்டது. இந்த நிழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வினைச்சொற்களை விவரித்தல் என்ற பெயரில் தேரரினால் வெளியிடப்பட்டுள்ள புத்தகம் தமிழ். சிங்கள மக்களுக்கான உறவுப்பாலமாக அமையும். பெரும்பான்மை சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையில் இந்தப் புத்தகம் ஓர் உறவை ஏற்படுத்தும்.

நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் யாழ்ப்பாணத்தில் பிக்குமார்கள் பாடசாலைகளுக்குச் சென்று சிங்களம் கற்பித்தார்கள். தமிழ் மாணவர்களும் ஆர்வத்துடன் கற்றார்கள். ஆனால் அரசின் மொழிக்கொள்கை அரசியல் நோக்கத்தின் அடிப்படையில் மாற்றமடைந்த காரணத்தால் துன்பியல் நிகழ்வாக சிங்கள மொழி கற்பிக்கும் செயற்பாடுகள் தடைப்பட்டுப் போயின.

அந்தத் திடமான முயற்சி முன்னெடுக்கப்பட்டிருந்தால் தமிழர்கள் சிங்களத்தையும் சிங்களவர்கள் தமிழையும் கற்றிருப்பார்கள். அந்த நிலை தொடர்ந்திருந்தால் இந்த நாட்டில் ஏற்பட்ட பல பிரச்சினைகள் இடம்பெற்றிருக்காமல் போயிருக்கும். அது நடைபெறவில்லை.

வடக்கு கிழக்கில் பல அழிந்த பௌத்த விகாரைகளில் தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. ஒரு காலகட்டத்தில் தமிழ் பௌத்தர்கள் இருந்தார்கள். எனவே பௌத்தம் இருவருக்கும் பொதுவானது. அப்படியிருந்தால் எம்மத்தியில் ஏற்பட்டுள்ள குரோதங்களை இலகுவாக நாம் நீக்கிக்கொள்ள முடியும். நாம் அனைவரும் ஒரே நாட்டு மக்கள். இந்த நாட்டின் எதிர்காலம் ஒற்றுமையிலேயே தங்கியுள்ளது. சிங்கப்பூர் போன்ற நாடுகள் எமது நாட்டை முன்னுதாரணமாகக் கொண்டு தான் வளர்ச்சி பெற்றன.

இன்று சிங்கப்பூர் எங்குள்ளது நாம் எங்கே உள் ளோம். சிங்கப்பூர் மக்கள் நாளாந்தம் எமது நாட்டினை விடவும் 50 வீதம் அதிகமாக உழைக்கின்றார்கள். இவ்விதமான பின்னணிகளுக்கு எமது கொள்கைகளே காரணமாகும் கொள்கைகளில் மாற்றம் செய்யவேண்டும்.

இந்த நாட்டில் வாழும் ஏனைய மக்களும் இந்த நாட்டுக்கு உரித்துடைய மக்கள். இந்த நாடு அவர்கள் அனைவருக்கும் சொந்தமானது என்று ஆட்சிநடத்தினால் நிலமை வேறு விதமாக அமையும்.

இந்தப் பணியை முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவும் நானும் இணைந்து நாட்டு மக்களுக்காக நிறைவேற்ற வேண்டும் என்று விரும்புகின்றேன். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் முஸ்லிம் அரசியல் தலைவர்கள் என்று நாட்டுக்கான ஒரு பொதுப்பாதையைக் கொடுக்க வேண்டும். நாட்டு மக்கள் மதிப்புடன் சமத்துவத்துடனும் சம உரிமைகளுடனும் வாழ வேண்டியது அவசியமாகும். இந்த நாடு பிரிவுபடக்கூடாது.

இந்த நாடு ஒருமித்த ஒற்றுமையான ஒரே நாடாக எப்பொழுதும் இருக்க வேண்டும். இந்த நாட்டுக்கு எவ்விதமான குந்தகமும் ஏற்படவும்கூடாது. இதனைப் பிரிப்பதற்கு நாங்கள் எல்லோருமே எதிர்ப்புத்தான். அதனால் பிரிவினை வாதம் ஏற்படுவதை நாங்கள் எதிர்க்கின்றோம். நாம் ஒற்றுமையாக ஒருமித்து நாட்டைக் கட்டியெழுப்பவேண்டும் - என்றார்.

நிகழ்வில் உரையாற்றிய மகிந்த ராஜபக்ச தெரிவித்ததாவது:

எமது பாடசாலைக் காலத்தில் சிங்கள, தமிழ் மாணவர்கள் ஒன்றாகக் கல்வி கற்கும் சூழல் இருந்தது. குறுகிய அரசியல் நோக்கத்தைக் கொண்டவர்கள், இந்த ஒற்றுமையை அன்னியோன்னியத்தைக் கெடுத்துவிட்டார்கள். போர் என்னால் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதால்தான், சம்பந்தன் இன்று என்னுடன் ஒரே மேடையில் இருக்கின்றார்.

போர் முடிவுக்கு வந்ததும் நல்லிணக்கம் கட்டியெழுப்பப்பட்டது. போர் நடந்தபோது அதனை ஏற்படுத்த முடியாது. இன்று நல்லிணக்கம் என்ற பெயரில் நாட்டைப் பிரிக்க ஏற்பாடு நடக்கின்றது. நாட்டை இணைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை.

சிறுபான்மையினர், பெரும்பான்மையினர் என்று பிரிப்பதற்கு நான் விரும்பவில்லை. நாங்கள் ஒரே நாட்டைச் சேர்ந்தவர்கள். எம்மிடையே கோபம், பிரிவினைவாதம், வைராக்கியம் என்பவற்றை ஏற்படுத்த முனைந்தால் அது அரசியல் நோக்கத்துக்காகவே அன்றி மக்களின் தேவைக்காக அல்ல.

நாங்கள் தமிழ் மக்களுக்கு எதிராகப் போர் செய்யவில்லை. கொடூர பயங்கரவாதத்துக்கு எதிராக 30 வருடம் போர் புரிந்தோம். மூன்று வருடங்களுக்குள் போரை நிறைவுக்குக் கொண்டுவந்தோம். இன்று அதன் பிரதிபலனாகச் சுதந்திரமாகச் சுற்றித்திரியும் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. எனக்கு அவ்வாறு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மேற்குலக நாடுகளுக்கு நான் சென்றால் வெவ்வேறு விடயங்களுக்காக என்னை நீதிமன்றத்துக்குக் கொண்டுசெல்ல முயற்சிக்கின்றனர். நான் அரச தலைவராக இருந்தகாலத்தில் பொதுநலவாய மாநாட்டுக்குச் சென்றபோது ஆஸ்திரேலியாவில் தங்களது உறவுகளை இழந்தவர்கள் இணைந்து எனக்கெதிராக முறைப்பாடு செய்து கைது செய்வதற்கு முயற்சித்தனர். நான் பிரிட்டன் சென்றபோது எனது அதிகாரிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முயற்சிக்கப்பட்டது. நான் அமெரிக்காவுக்குச் சென்றபோது எனக்கெதிராக நீதிமன்றம் சென்றார்கள். இதுகுறித்து நாங்கள் அப்போது பெரிதாகப் பேசவில்லை - என்றார். (உ,5)

## அடுத்த...

ஆராயவுள்ளது. வடக்குமாகாண அமைச்சரவையை முழுமையாக மாற்றப் போவதாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அறிவித்திருக்கிறார். ரெலோ அமைப்புதமது கட்சி சார்பாக அமைச்சரவையில் ஏற்கனவே இடம்பெற்றுள்ள பா.டெனீஸ்வரனை நீக்குமாறு கோரியிருந்தது. அத்தோடு அந்த இடத்துக்கு ரெலோவின் மற்றொரு மாகாண சபை உறுப்பினரான விந்தனை நியமிக்குமாறு கோரும் கடிதத்தையும் முதலமைச்சரிடம் கையளித்திருந்தது.

ரெலோசார்பில் பதவியிலிருந்த டெனீஸ்வரன் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்தவர். அவருக்குப் பதிலாகப் பரிந்துரைக்கப்பட்ட விந்தன் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்தவர். இதனால் அமைச்சரவையில் மன்னார் மாவட்டத்திற்கான பிரதிநிதித்துவம் இல்லாமல் போகிறது என்கிற கவலை தெரிவிக்கப்பட்டு வந்தது.

சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் பதவி விலகியதை அடுத்து ரெலோ சார்பில் உறுப்பினராக இருக்கும் மருத்துவர் க.குணசீலனை அந்தப் பதவிக்குப் பரிந்துரைக்க முடியும் என்ற நிலை தோன்றியுள்ளது. அப்படிச் செய்யும் போது மன்னார் மாவட்டப் பிரதிநித்துவத்தைப் பாதுகாக்க முடியும் என்று கட்சியில் சிலர் கருதுகின்றார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

அதேநேரத்தில் கட்சியில் இருக்கும் மற்றொரு மூத்த உறுப்பினரான க.சிவாஜிலிங்கமும் அமைச்சர் பதவியை ஏற்க இப்போது தயாராக இருக்கிறார் என்று கூறப்படுகிறது. இதற்கு முன்னர் அமைச்சுப் பதவியை ஏற்குமாறு அவரிடம் முதலமைச்சர் கோரிக்கை விடுத்த போது அதனை அவர் அடியோடு நிராகரித்திருந்தார்.


இந்த மாற்றங்களை அடுத்தே ரெலோவின் சார்பில் அடுத்த அமைச்சர் யார் என்பதைத் தீர்மானிப்பதற்காகக் கட்சியின் உயர் பீடம் மீண்டும் கூடவுள்ளது. (உ5,101)

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 60 | 80 | 80 | 60 | 50 |
| கத்தரி | 80 | 60 | 140 | 110 | 80 |
| மரவள்ளி | 60 | 80 | 80 | 60 | 70 |
| பயிற்றை | 120 | 150 | 120 | 100 | 140 |
| பாகல் | 180 | 140 | 240 | 180 | 180 |
| க.கிழங்கு | 120 | 140 | 140 | 120 | 70 |
| பெ.வெங்காயம் | 100 | 110 | 100 | 110 | 90 |
| சி.வெங்காயம் | 140 | 150 | 160 | 140 | 120 |
| பூசணி | 80 | 80 | 60 | 70 | 60 |
| தக்காளி | 150 | 160 | 140 | 150 | 140 |
| வாழைக்காய் | 100 | 100 | 80 | 80 | 60 |
| கீரை | 30 | 25 | 40 | 15 | 20 |
| பொன்னாங்காணி | 25 | 25 | 30 | 30 | 20 |
| ப.மிளகாய் | 250 | 400 | 400 | 350 | 300 |
| புடோல் | 80 | 80 | 80 | 110 | 80 |
| கோவா | 120 | 120 | 100 | 140 | 100 |
| வெண்டி | 100 | 80 | 60 | 100 | 60 |
| போஞ்சி | 120 | 150 | 200 | 160 | 160 |
| லீக்ஸ் | 100 | 100 | 120 | 120 | 120 |
| தேங்காய் | 60 | 70 | 70 | 70 | 60 |
| உ.கிழங்கு | 100 | 100 | 100 | 110 | 100 |
| தேசிக்காய் | 60 | 60 | 80 | 50 | 40 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 15 | 15 |
| கறிமிளகாய் | 200 | 160 | 160 | 180 | 240 |
| கரட் | 200 | 200 | 180 | 240 | 200 |
| முருங்கைக்காய் | 100 | 100 | 80 | 30 | 60 |

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்

| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 700 | 700 | 1000 | 1000 |
| நண்டு | 400 | 300 | 600 | 300 |
| கணவாய் | 800 | 700 | 800 | 1000 |
| பாரை | 600 | 500 | 700 | 1000 |
| சுறா | 500 | 700 | 1000 | 1000 |
| சீலா | 400 | 400 | 500 | 500 |
| விளை | 600 | 400 | 500 | 800 |
| முரல் | 400 | 400 | 450 | – |
| கும்பிளா | 300 | 300 | 400 | 600 |
| கிளாக்கன் | 800 | – | 600 | – |
| ஓரா | 350 | 300 | 450 | 400 |
| திரளி | 300 | 200 | 200 | 200 |
| நகரை | 250 | 150 | 300 | – |
| சூடை | 200 | 100 | 200 | 150 |
| ஒட்டி | 300 | 200 | 300 | 400 |
| திருக்கை | 400 | 200 | 400 | 400 |
| மதனம் | 250 | 150 | 300 | 500 |
| கொய் | 200 | 30 | 80 | 100 |
| பாலை | 300 | 200 | 500 | – |
| வாழை | 200 | 200 | 400 | – |




பெண்களுக்கான அலங்கார மோதிர வகைகள் சில தற்போது நவீன வடிவில் சந்தைக்கு வந்துள்ளன. இவை 500 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.

# சமுர்த்திப் பெயர் பட்டியல் தயாரிப்பு விதிமுறையை மீளப்பரிசீலிக்கவேண்டும்

## விதிமீறலாக சமுர்த்தி நிறுத்தப்பட்டவர்களை முறையிடுமாறு மாவை எம்.பி. யோசனை

யாழ்ப்பாணம், ஓக. 9

சமுர்த்தி உதவி பெறத் தகுதியுடையோர் பட்டியல் தயாரிக்கும் விதிமுறை மீள் பரிசீலனை செய்யப்பட வேண்டும். இதுவரை காலமும் சமுர்த்தி உதவி பெற்று வந்தவர்களுக்கான உதவிகள் விதிமுறைகளை மீறி நிறுத்தப்படுமாயின் தங்கள் பிரதேசத்துக்குரிய பிரதேச செயலாளர்களிடம் முறையிட முடியும்"

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ. சேனாதிராசா தெரிவித்தார்.

சமுர்த்தி பெறுவது, அவற்றை இதுவரை பெற்றுவந்தவர்கள் சமுர்த்திப் பட்டியலில் இருந்து நீக்கப்படுவது தொடர்பில் கிராம மக்களிடம் குழப்ப நிலை காணப்படுகிறது.

இந்த நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர்சேனாதிராசாஅனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

சென்ற வருட வரவு செலவுத் திட்டத்தில் சமுர்த்திபெறுபவர்களின்எண்ணிக்கை அதிகரித்து அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் சமுர்த்தி உதவி பெறுபவர்கள் தாங்கள் பெறும் சமுர்த்தி உதவிகள் மற்றும் தங்கள் பெயர்கள் வெட்டப்படுகின்றன என்று முறைப்பாடுகள் செய்கின்றனர்.

குறிப்பாக போரால் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் முழுமையாக மீள்குடியமர்வுகள் இடம்பெறவில்லை. உழைக்கும் தகுதியுள்ளவர்களுக்கு உழைக்கும் வாய்ப்புக்கள் உருவாகவில்லை. அன்றாடவாழ்க்கையை நடத்துவதற்கு வாழ்வாதாரம் இல்லை. வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வோர் தொகை அதிகரித்துள்ளது.

சமுர்த்தி உதவி பெறுவதற்குத் தகுதியுடையோரைத்தெரிவதற்குவகுத்தவரைவிலக்கணம், விதிமுறைகள்வகுக்கப்பட்டுப் பல ஆண்டுகள் கடந்து விட்டன. நிகழ்காலத்தில் வாழ்க்கைச் செலவு அதிகரித்துவிட்டது. இந்தநிலையில்சமுர்த்தி உதவி பெறத் தகுதியுடையோர் பட்டியல் தயாரிக்கும் விதிமுறை மீள் பரிசீலனை செய்யப்பட வேண்டும்.

> இதுவரை காலமும் சமுர்த்தி உதவி பெற்று வந்தவர்களுக்கான உதவிகள் நிறுத்தப்படுமாயின் அவர்கள் தங்கள் பிரதேசத்துக்குரிய பிரதேச செயலாளர்களிடம் முறையிட முடியும்.

இதுவரை காலமும் சமுர்த்தி உதவி பெற்று வந்தவர்களுக்கான உதவிகள் நிறுத்தப்படுமாயின்தங்கள்பிரதேசத்துக்குரிய பிரதேச செயலாளர்களிடம் முறையிடுங்கள்.

இதுவரையும் சமுர்த்தி உதவி பெறத் தகுதியுடையோரும், உரிய சமுர்த்திப் பட்டியலைப் பதிவு செய்வதில் தவறுகள் நேர்ந்திருந்தால் அது பற்றியும் பிரதேச செயலாளர்களிடம்முறையிடலாம். இந்த விடயங்கள் தொடர்பில் எதிர்வரும் பிரதேசமட்ட, மாவட்ட மட்ட ஒருங்கிணைப்புக் கூட்டங்களில் பொருத்தமான தீர்மானங்களை எடுக்க முடியும். இந்த வாரத்தில்நாடாளுமன்றம்நடைபெறும்காலத்தில்சமுர்த்திஅமைச்சரிடம்பேசிசமுர்த்தி உதவி பெறுவதற்குத் தகுந்தவர்கள் பாதிக்கப்படாமல் அவர்களுக்கு உதவும் பொருட்டுபொருத்தமானநடவடிக்கைகள் எடுக்கப்படும்-என்றுள்ளது. (4)

### யாழ்ப்பாண மாநகர சபையின் நிகழ்வுகளுக்கு

# சபை எல்லைக்குட்பட்ட உறுப்பினர்களையே அழைக்குமாறு முதலமைச்சர் பணித்தாரா?

## *நாளைய அமர்வில் கேள்வி எழுப்புவாராம் தவராசா*

யாழ்ப்பாணம், ஓக. 8

'யாழ்ப்பாண மாநகர சபையின் நிகழ்வுகளுக்கு யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் வாழும் மாகாணசபை உறுப்பினர்களுக்கு மட்டும் அழைப்பு அனுப்புமாறு முதலமைச்சர் தனது அமைச்சு ஊடாகப் பணித்துள்ளாரா?'

இவ்வாறு மாகாணசபையின்நாளையஅமர்வில், சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா வாய்மூலகேள்வியெழுப்பவுள்ளார்என்றுதெரிவிக்கப்பட்டது.

இது பற்றி மாநகர சபைக்குத்தங்கள்அமைச்சின் ஊடாக எழுத்து மூலமாகஅறிவுறுத்தல்வழங்கப்பட்டதா? அவ்வாறு வழங்கப்பட்டிருப்பின், அந்த அறிவுறுத்தலின் பிரதியைசபைக்குச்சமர்ப்பிக்கமுடியுமா?

மாகாண சபை உறுப்பினர்கள் தாங்கள் வாழ்கின்ற உள்ளூராட்சி எல்லைக்குள் மட்டும் மட்டுப்படுத்தப்பட்டவர்கள் அல்லர். இவ்வாறிருக்கும் போது அவ்வாறான அறிவுறுத்தல்வழங்கப்பட்டது ஏன்?

மாகாண அமைச்சர்கள், அவைத் தலைவர், பிரதி அவைத் தலைவர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகிய பதவிநிலை உறுப்பினர்கள் யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர் இல்லையெனில், அவர்களுக்குக்கூட அழைப்பிதழ் அனுப்ப வேண்டாம் எனத் தங்கள் அமைச்சினால் அறிவுறுத்தப்பட்டுள்ளதா? என்று அவர் கேள்வியை எழுப்பவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

இதுதவிர, கடந்த ஜீன் மாதம்21ஆம்திகதிநடைபெற்ற52ஆவதுஅமைச்சரவைக் கூட்டத்தில், பிரமாணஅடிப்படையிலான மூலதன நன்கொடையின்கீழ்முதலமைச்சருக்கு 2 மில்லியன் ரூபா மேலதிகமாக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிக்குரிய வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், முதலமைச்சருக்குப் பிரமாண அடிப்படையிலான நிதி ஒதுக்கீட்டுக்கு மேல்திகமாக நிதி ஏதும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா?அவ்வாறஒதுக்கீடுசெய்யப்பட்டிருப்பின்அந்தத்தொகை எவ்வளவு? இதற்காகச் சபையின்இந்தஆண்டுக்குரிய பாதீட்டில் அனுமதி வழங்கப்பட்டதா? என்றும் எதிர்க் கட்சித் தலைவரால் முதலமைச்சரிடம் வாய் மூல கேள்வி எழுப்பப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (4,8)

## பன்னாட்டு ஆய்வு மாநாடு வவுனியாவில்

யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட பன்னாட்டு ஆய்வு மாநாடு வியாபாரக்கற்கை நெறிகள் பீடத்தில் இன்று புதன் கிழமை முற்பகல் 9 மணிக்கு இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

வவுனியா வளாகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தி யாளர்கள் சந்திப்பில் வவுனியா வளாக முதல்வர் கலாநிதி த. மங்களேஸ்வரன் இதனைத் தெரிவித்தார்.

"பேண்தகு அபிவிருத்திக்கான பெறுமதி உருவாக்கம்" எனும் தொனிப் பொருளில் இந்த மாநாட்டில் சிறப்புரை யாற்றுவதற்கு பாகிஸ்தானிலிருந்து மின்பொறியியல் துறையைச்சேர்ந்த பேராசிரியர் ஹமாட் ஓமர், மற்றும் இந்தியாவிலிருந்து முகாமைத்துவப் பேராசிரியர் அசோக்குமார் ஆகியோர் அழைக்கப்பட்டுள்ளார்கள்.

பேண்தகு அபிவிருத்திக்கான பெறுமதி உருவாக்கம் தொடர்பாக 50 ஆய்வுக்கட்டுரைகள் பல்வேறு பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த ஆய்வாளர்களால் இந்த மாநாட்டில் வாசிக்கப்படவுள்ளன. இந்தக் கட்டுரைகள் இலங்கையில் பேண்தகு அபிவிருத்தியை ஏற்படுத்தவதற்கு உறுதுணையாக அமையுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தப் பன்னாட்டு ஆய்வு மாநாடு கலாநிதி க. கோப் பெருந்தேவியின் ஏற்பாட்டில் இடம்பெறுகிறது- என்று அவர் மேலும் தெரிவித்தார்.

வவுனியா வாளாக முதல்வர் கலாநிதி த. மங்களேஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்தமாநாட்டில்முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் இ.விக்னேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார்என்று தெரிவிக்கப்பட்டது. (4)

## தொடருந்தில் திருடிய சிப்பாய் பொலிஸாரால் கைது

அலைபேசியைத்திருடிய குற்ற ச்சாட்டில் இராணுவச் சிப்பாய் ஒருவரை நேற்றுமுன்தினம் கைது செய்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வல்லவ பகுதியைச் சேர்ந்த மல்லவத்தகே றொசான் நிலாந்த என்பவரே (வயது- 27) கைது செய்யப்பட்டார். கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு நேற்றுமுன்தினம் பயணித்த தொடருந்தில் பெண்ணின் கைப்பையில் இருந்த 38 ஆயிரத்து 500 பெறுமதியான அலைபேசி, பணம்என்பவற்றையே அவர் திருடியுள்ளார்என்றுபொலிஸார் தெரிவித்தனர். (4,8)



13ஆம் திருவிழா

### சொல்ல வார்த்தை ஏது முருகா

யாமிருக்க பயமேன்
எனக்கூறி எம் பயம்
போக்கிய முருகா
கார்த்திகைப் பெண்களோடு
பூக்களில் மலர்ந்த
கார்த்திகை வேல் அழகா!
மாம்பழத்துக்கு கதை
சொன்ன வடிவேலா
முழுமுதற் கடவுளின்
சகோதரா சிங்காரவேலா
தந்தைக்கு உபதேசம்
செய்த செல்வ வடிவேலா
உன் குறும்புகள் தான்
இங்கு சொல்ல வார்த்தை
ஏது எங்கள் வீட்டு வடிவேலா!
வழி காட்டு உன் புகழ்பாட
உன் மனதோடு
எம் குறை யாவும் நீங்க!

*சுபானுஜன், தெல்லிப்பழை.*

### தேவர் குலம் காத்த குமரவேள்

குன்றங்கள் ஆறில்
எழுந்தருளும் குமரேசன்
குண்டலியாம் சிவனின்
அன்புமகன்குமரன்
கிரிராசகுமாரியின் மைந்தன்
குழந்தை வேலன் குன்றம்
எறிந்தவன்குன்றப் போரிலே
வெற்றி பெற்ற வீரமகன்
தேவர் குலம் காத்த குமரவேள்
வாரி குளித்த வேல் ஏந்தியவன்
தந்தைக்க பிரணவப் பொருள்
உரைத்த சிவகுருநாதன்
திருப்பரங்குன்றிலே
திருமணம் கொண்டவன்
குஞ்சரி அம்மனின்
மணவாளன்
குறிஞ்சி நிலத்தின் தலைவன்
குறவர் மடமகள்
வள்ளியின் கணவன்
அடியார்கள் சித்தகுகையில்
இருக்கும் குகன்குரவன்
குழலன் குறும்பல்
இயத்தன்சேவல்
கொடியுடைய குக்குடத்துஜன்
நற்குணங்கள் பல கொண்ட
வேல் வேந்தன்
நல்லூர்க் கோயிலை வலம்
வந்து வணங்கும்அடியார்கள்
குறைகள் நீக்கி குடிகளை
உயரச் செய்யபச்சை மயில்
வாகனத்திலே பகலவன்
ஒளியிலே பண்புடனே
வருகிறார்

*வ.மயூரதேவி*

### மயிலேறி எப்போ வருவாய்கந்தா

நல்லையில் வீற்றிருந்து
அருள்புரியும் கந்தா
அடியவர்கள் குறைகள் தீர்க்கம்
அலங்காரக் கந்தா
ஆனைமுகனின் சோதரனே
ஆறுமுகா சூரபத்மனை
அழித்து ஆட்கொண்ட கந்தா
தேவர்களைச் சிறை மீட்டுக்
காத்திட்ட கந்தா
எம்மவர் படும் இன்னலுக்கு ஓர்
எல்லை இல்லையா கந்தா
எம்மவர் துயர் துடைக்க
உந்தன் அபயக்கரத்தை
ஒருமுறை நீட்டு கந்தா
எம்மைக்காக்க எம் துயரமது
போக்கி அருளிட மயிலேறி
எப்போ வருவாய் கந்தா

*நயினை விசு இராசநாயகம்*



## ஆரோக்கியமற்ற உணவுகளைத் தவிர்ப்போம்!

★பீஸா பர்கர், உடனடி உணவுகள் என்பவை அதிக சக்திப் பெறுமானம் கொண்ட அதிக சீனி, உப்பு, எண்ணெய் கொண்ட உணவுகளாகும். இவற்றை அடிக்கடி எடுத்து .வரின் உடல் பருமன் அதிகரிக்கும் இதய நோய்களையும் ஏற்படுத்தும்.



*தகவல்*
*சு.ம.அ.பணிமனை,*
*யாழ்.மாநகர சபை.*

# பாடசாலைகளின் குறைபாடுகளை கல்வி வாரியத்தில் முறையிடக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 9

"துணுக்காய் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளின் தேவைகள், பிரச்சினைகள் தொடர்பாகத் துணுக்காய் வலயக் கல்வி வாரியத்திடம் தெரியப்படுத்துங்கள். அந்த வாரியம் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வுகளை முன்வைக்கும்."

இவ்வாறு துணுக்காய் வலய வாரிய நிர்வாகப் பிரிவு தெரிவித்தது.

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் வழிகாட்டலுடன் துணுக்காய் கல்வி வலயத்தின் தீர்மானம் மேற்கொள்ளும் புதிய அமைப்பாக துணுக்காய் வலயக் கல்வி வாரியம் செயற்பட்டு வருகின்றது. இது தொடர்பில் வாரியம் மேலும் தெரிவித்ததாவது:

2016ஆம் ஆண்டு தொடக்கம் வலய வாரியம் செயற்பட்டு வருகின்றது. இதனை வடக்கு மாகாண அமைச்சர்கள் வாரியத்தினரும் ஆளுநரும் அங்கீகரித்துள்ளனர்.

துணுக்காய் கல்வி வலையத்துக்குட்பட்டு 60 பாடசாலைகள் உள்ளன. போரின் பின்னர் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் கல்விச் செயற்பாடுகள் நடைபெறுகின்றன.

பாடசாலைகளின் தேவைகளைக் கண்டறிதல், பாடசாலைகளில் உள்ள பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றைத் தீர்த்தல், ஆசிரியர்கள் கற்பிக்கும் போது எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனம் காணல், ஆசிரியர் இடமாற்றம் தொடர்பாக ஆராய்தல், திறமையான நிர்வாகப் பிரிவை பாடசாலைகளில் அமைக்க வழிவகுத்தல், துணுக்காய் கல்வி வலயத்தில் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான சகல புதிய ஆள்சேர்ப்புக்கள், பணி நிறைவுறுத்தல்கள் போன்ற பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்தல், பாடசாலைகளின் தேவைகளை இனங்காணல், இதன் மூலமாகக் கல்வி வலயத்தின் செயற்பாடுகளைத் திறமையாக மேற்கொள்ளல் என்பவற்றுக்கு இந்த வலய வாரியம் உதவியாக உள்ளது.

இந்த வாரியம் கலைத்திட்டம், தேர்வுகள், ஓய்வூதியம் தவிர்ந்த ஏனைய விடயங்களில் தீர்மானங்களை எடுத்துச் செயற்படுகிறது.

கல்வியியலாளர்கள், பெற்றோர்கள் உட்பட 27 பேரை உள்ளடக்கியதாக இது செயற்பட்டு வருகின்றது. இதில் பாடசாலை மாணவர் அமைப்புக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட 6 மாணவ உறுப்பினர்களும், சமூகத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட 10 உறுப்பினர்களும், வலயக்கல்விப் பணிப்பாளர் உள்ளிட்ட 11 உறுப்பினர்களுமாக மொத்தம் 27 பேர் உள்ளடங்குகின்றனர்.

ஆகவே துணுக்காய் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் உள்ள தேவைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாக எமக்குத் தெரியப்படுத்துங்கள்.

அவர்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகள் உடனடியாக கிடைக்க வாய்ப்புள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (4,ரி)

### வடக்கு சித்த வைத்தியசாலைகளில்
## கட்டணம் செலுத்தும் விடுதிகளை அமைக்க செயற்குழு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 9

வடக்கு மாகாணத்திலுள்ள சித்த வைத்தியசாலைகளில் கட்டணம் செலுத்தும் விடுதிகளை ஆரம்பிப்பதற்கான செயற்பாட்டுக் குழு அமைக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருவதாக வடக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம் தெரிவித்தது.

'வடக்கு மாகாணத்திலுள்ள சித்த வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுவதற்காக உள்நாட்டு வெளிநாட்டு நோயாளர்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர். வெளிநாட்டு நோயாளர்கள் கட்டணம் செலுத்தி மேலதிக வசதிகளுடன் சிகிச்சை பெற்றுக் கொள்ள விரும்புகின்றனர். மாகாணத்திலுள்ள மாவட்ட சித்த வைத்தியசாலைகளில் கட்டணம் செலுத்தும் சிகிச்சைப் பிரிவு, விடுதிகளை ஆரம்பித்தல் தொடர்பான பிரேரணை 50ஆவது அமைச்சரவைக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டு அமைச்சரவை அனுமதியும் வழங்கப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் முதன் முறையாக இந்தச் சேவைப் பிரிவை ஆரம்பிப்பதால் பல்வேறு சவால்கள் எம்முன்னே எழுந்துள்ளன. இடத்தைத் தெரிவு செய்தல், சிகிச்சைக் கட்டணத்தைத் தீர்மானித்தல், சேவையை விரிவாக்குதல் போன்றவற்றை நாம் கருத்திற் கொள்ள வேண்டும். இதற்கு அமைவாக சேவைகளை ஒழுங்குபடுத்த செயற்பாட்டுக் குழு அமைக்கும் பணிகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன.

முதலில் யாழ்ப்பாண மாவட்டத்தில் கரவெட்டி, கொடிகாமம், கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் இந்தக் கட்டணம் செலுத்தும் சிகிச்சைப் பிரிவை ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளோம்.

எனினும் ஆளுநரின் அனுமதி இன்னும் கிடைக்கவில்லை. அவரது அனுமதி கிடைத்தவுடன் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என்று திணைக்களம் மேலும் தெரிவித்தது. (4,ரி)

## செஞ்சோலைப் படுகொலை நினைவேந்தல்

யாழ்ப்பாணம், ஓக. 9

செஞ்சோலைப்படுகொலையின்11ஆம்ஆண்டுநினைவேந்தல் வள்ளிபுனம் இடைக்கட்டுச் சாலையில் எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்தப் படுகொலைக்கு நீதிகோரியும், உயிரிழந்த மழலைகளின் ஆத்ம சாந்திக்காகவும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அறிவுறுத்தியுள்ளது.

செஞ்சோலை சிறுவர் காப்பகம் மீது 2006ஆம் ஆண்டு ஓகஸ்ட்மாதம்14ஆம்திகதி வான்படையினர்நடத்தியகுண்டுத்தாக்குதலில்பாடசாலைமாணவிகள்61பேர் உயிரிழந்தனர். 129 பேர் காயமடைந்திருந்தனர். (4)

### வடக்குப் பாடசாலைகளிலுள்ள
## ஒப்பந்த ஆசிரியர்களின் விவரங்கள் அமைச்சரவைக்கு

யாழ்ப்பாணம் ஓக. 9

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் ஒப்பந்த அடிப்படையில் ஆசிரியர்களாகப் பணிபுரிந்த சிங்கள ஆசிரியர்களின் விவரங்கள் கொழும்பு அமைச்சரவைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் வடக்கு மாகாண கல்வி அமைச்சு மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் நீண்ட காலமாகத் தொண்டர் ஆசிரியர்களாக, ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றியவர்கள்பலர் உள்ளனர். இவர்கள் போர்க்காலத்திலும், கடினமான சூழ்நிலைகளின்போதும் தமது சேவையைப் பாடசாலைகளுக்கு வழங்கியுள்ளனர். அவர்கள் சேவையாற்றிய பாடசாலைகளின் அதிபர்களது பரிந்துரையுடன் குறித்த ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்குவது தொடர்பில் ஆராய்ந்து அவர்கள் பற்றிய விவ ரங்களை அமைச்சரவைக்கு அனுப்பியுள்ளோம். ஆரம்பத்தில் அனுப்பப்பட்ட விவரங்களைவிட இரண்டாவது தடவையாகவும் இவர்களின் விவரங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. 173 ஆசிரியர்களின் விவரங்கள் இதில் உள்ளடங்குகின்றன.

> "இவர்கள் போர்க்காலத்திலும், கடினமான சூழ்நிலைகளின்போதும் தமது சேவையை பாடசாலைகளுக்கு வழங்கியுள்ளனர்.

இவர்களின் நியமனங்கள் தொடர்பாக உரிய தரப்பினர் கவனஞ் செலுத்தி வருகின்றனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (4, ரி)

### வடக்குப் போக்குவரத்து அதிகார சபையின்
# 63 வெற்றிடங்களை நிரப்ப அனுமதி கேட்டு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஓக. 9

வடக்கு மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையில் உள்ள 63 வெற்றிடங்களை நிரப்புவதற்கான ஆள் சேர்ப்புத் திட்ட விண்ணப்பம், ஆள் சேர்ப்பு முகாமைத்துவ திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

'வடக்கு மாகாணத்தில் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையில் முகாமைத்துவ உதவியாளர்கள், நேரக் கணிப்பாளர்கள் உள்ளிட்ட 63 பேருக்கு வெற்றிடங்கள் உள்ளன.

வெற்றிடங்களை நிரப்புவதற்கான ஆளணி அனுமதி ஆட்சேர்ப்பு முகாமைத்துவ திணைக்களத்தால் வழங்கப்பட்டுவருகிறது.

இதுவரை காலமும் உள்ள 63 வெற்றிடங்களை நிரப்புவதற்கும் வேலைகள் நடைபெறுவதற்குமாக 40 பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அவர்களில் நேரக் கணிப்பாளர்களாக 32 பேரும், முகாமைத்துவ உதவியாளர்களாக 8 பேரும் உள்ளனர்.

தற்போது எமக்குத் தேவையான ஆளணியைக் குறிப்பிட்டு ஆள்சேர்ப்புத் திட்டம் ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது. இதற்கான அனுமதி கிடைத்தவுடன் 63 வெற்றிடங்களும் நிரப்ப நடவடிக்கைகள் எடுக்கப்படும். தற்போது ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டுள்ள 40 பேருக்கும் ஒப்பந்தம் மேலதிகமாக 3 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது' - என்று வடக்கு மாகாணப் போக்குவரத்து அமைச்சு மேலும் தெரிவித்தது. (4,ரி)

# மகிந்த ஆட்சியிலிருந்தால் ஆவாக்குழுவை அடக்கியிருப்பார்

## சொல்லுகிறார் கம்மன்பில

கொழும்பு, ஒக. 9
மகிந்த தொடர்ந்தும் அரச தலைவராக இருந்திருந்தால் வடக்கில் ஆவா குழு வந்திருக்காது. போரை முடித்தது போல் வடக்கில் அனைத்து விதமான பயங்கரவாதச் செயற்பாடுகளுக்கும் முற்றுப் புள்ளி வைக்கப்பட்டிருக்கும். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் வரலாற்றில் மகிந்தவின் ஆட்சியைப் போன்றதோர் ஆட்சியை எம்மால் பார்க்க முடியாது. 30 வருடங்களாக இந்த நாட்டை அழித்துக் கொண்டிருந்த பயங்கரவாதத்தை மூன்று வருடங்களில் இல்லாதொழித்து வரலாற்றுச் சாதனை படைத்தவர். இலங்கைக்கு மட்டுமல்ல முழுத் தெற்காசியாவுக்குமே அவர் பெருமை சேர்த்ததுடன் வழிகாட்டியாகவும் திகழ்ந்தார்.

போர் முடிந்த பின் சிறு வன்முறைச் சம்பவங்கள்கூட இந்த நாட்டில் இடம் பெறவில்லை. அவ்வளவு தூரம் பயங்கரவாதத்தை வேரோடு பிடுங்கி எறிந்தார். தெற்கில் பாதாள உலகக் குழுவினரின் அட்டகாசம் அதிகரித்துள்ள அதேநேரம் வடக்கில் பயங்கரவாதக் குழுக்களின் அட்டகாசம் தலைவிரித்தாடுகின்றது. ஆவா என்றொரு குழு அங்கு செயற்படத் தொடங்கியுள்ளது. இவர்களை இயக்குபவர்கள் யார்? இவர்களின் நோக்கம் என்னவென்று தேடிப்பார்க்க வேண்டிய கடமை இந்த அரசுக்கு உண்டு. உண்மையில் மகிந்த தொடர்ந்தும் அரச தலைவராக இருந்திருந்தால் வடக்கில் ஆவா குழு வந்திருக்காது. போரை முடித்ததுபோல் வடக்கில் அனைத்துவிதமான பயங்கரவாத செயற்பாடுகளுக்கும் முற்றுப் புள்ளி வைக்கப்பட்டிருக்கும்.

நாடு அமைதியை இழந்து விட்டது. நாடு இப்போது ஆபத்தை நோக்கிச் செல்கின்றது என்றார். (5-3)



பன்னாலை திருவருள் மிகு வரத்தலம்
கற்பக விநாயகர் தேவஸ்தான
வருடாந்த மஹோற்சவம் – 2017

| | |
|---|---|
| 10.08.2017 | முற்பகல் 10.30 மணி கொடியேற்றம் |
| 17.08.2017 | பிற்பகல் 3.00 மணி வேட்டைத்திருவிழா |
| 19.08.2017 | சனிக்கிழமை இரவு 8.00 மணி சப்பைரதம் |
| 20.08.2017 | ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணி தேர் |
| 21.08.2017 | திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணி தீர்த்தம் |
| 22.08.2017 | செவ்வாய்க்கிழமை 9.00 மணி பிராயச்சித்தம் |
| | மாலை 3.00 மணி வைரவர் பொங்கல் |

*தினமும் காலை 8.30 மணியளவில் அபிஷேகத்துடன் பூஜைகள் ஆரம்பமாகும். மாலை 5.30 மணிக்கு மாலைத் திருவிழா ஆரம்பமாகும்.*

ம.மகேந்திரசர்மா
ஆதீனகர்த்தா.

யாழ் மாநகரில் முதன் முறையாக
சினிமா பாடல்களுடன்



பிரபல தென்னிந்திய பாடகர்
கலைமாமணி
உன்னிகிருஷ்ணன்
மற்றும் பாடகி உத்ரா உன்னிகிருஸ்ணன்
இணைந்து வழங்கும் மாபெரும் இசை நிகழ்ச்சி
இடம் : யாழ்/ஸ்ரான்லி வீதி , லிங்கம் கூல்பார் சந்தியில்
(வெலிங்டன் தியேட்டர் மைதானம்)
காலம் : இம்மாதம் 12 ஆம் திகதி (12.08.2017)
மாலை 6.00 மணிக்கு
300/=, 500/=, 1000/= டிக்கெட்

டிக்கெட்டுகளைப் பெற்றுக் கொள்ள
The Phone Shop
நெல்லியடி 077 285 0285
பூபாலசிங்கம் புத்தகசாலை 021 222 6693

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் : K.T. பிரசாத்
தொடர்பு 077 550 4910
Ceylon Art Creation

உளம் நிறைந்த வாழ்த்துக்கள்




திரு.சிவகுமாரன் பத்மசிறி
(இலங்கை நிர்வாக சேவை)
உதவி ஆணையாளர்
காணி உரித்து நிர்ணய திணைக்களம் - யாழ்ப்பாணம்.




திரு.ஞானகுரு கிருபைராஜன்
(இலங்கை கணக்காளர் சேவை)
கணக்காளர்
பிரதேச செயலகம், றம்பாவ, அ'புரம்

கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றி பதவி உயர்வு பெற்றுச் சென்ற எமது சங்க அங்கத்தவர்கள் இருவரையும் மென்மேலும் உன்னத உயர்வுகளைப் பெற உளம் நிறைந்து வாழ்த்துகின்றோம்.

Congratulations

கிராம அபிவிருத்தி
உத்தியோகத்தர்கள் தொழிற்சங்கம், வட மாகாணம்.

அன்பே சிவம்

உலக சைவ இளைஞர் மாநாடு
யாழ்ப்பாணம் - 2017
மகுட வாக்கு
தமிழ் எங்கள் மொழி
சைவம் எங்கள் வழி

தொனிப்பொருள்
சைவத்தமிழ் மறுமலர்ச்சியில்
இளைஞர்களின் பங்கும் பணியும்

இடமும் காலமும்
இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி
(யாழ். இந்துக்கல்லூரி அருகில் நீராவியடி. யாழ்ப்பாணம்)
11, 12, -08. 2017 வெள்ளி, சனி
இணுவை ஞானலிங்கேசுவரர் திருக்கோயில்
13.08.2017 ஞாயிறு 9.00 மணி

சைவத்தமிழ் ஆர்வலர்கள் அனைவரும் கலந்து கருத்துக்களை பகிர்ந்துகொள்ளுமாறு அன்போடு அழைத்து நிற்கின்றோம்.
"என் கடன் பணி செய்து கிடப்பதே"

முன்னிலை
சீர்வளர்சீர் சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமகா சந்நிதானம்
தவத்திரு அகத்தியர் அடிகளார்
கோணமாமலை தென்கயிலை ஆதீனகுருமகா சந்நிதானம்பெருந் தலைவர்,
அகில இலங்கை சைவ மகாசபை
தவத்திரு மருதாச்சலம் அடிகளார்
தமிழக பேரூர் ஆதீன இளையபட்டம்

சைவத்தமிழ் எழுச்சிப் பேரணி

மாநாட்டு ஆரம்ப நாளான வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிக்கு நல்லூர் ஆலய முன்றலிலிருந்து ஆரம்பித்து கையிலாய வாத்தியங்களான பறை. தப்பு. உடுக்கை. சங்கு போன்ற பழந் தமிழர் இசைக்கருவிகளையும் தெய்வத்தமிழ்த் திருமுறைகளையும் நூற்றுக்கணக்கான இளையவர்கள் இசைத்து வரும் சைவத் தமிழ் எழுச்சிப்பேரணி யாழ். நகர மைய வீதிகளூடாக மாநாட்டு மண்டபத்தை வந்தடையும்

தொடக்க நிகழ்வுகள்

11.08.2017 வெள்ளிக்கிழமை

நேரம்: 09.30 - 9.35 - இறைவணக்கம்
09.35 - 09.45 - சிவதாண்டவம்
09.45 - 10.15 - ஆசியுரைகள்
10.15 - 10.40 - அறிமுக உரை
10.40 - 11.00 - சிற்றுண்டி இடைவேளை

சைவத்தமிழ் மறுமலர்ச்சியில் இளைஞர்களின் பங்கையும் பணியையும் வலியுறுத்தும் அரங்குகள்

நேரம்: 11.00 - 1.00 நாயன்மார் அரங்கு
பேசு பொருள் " பக்தி இயக்க மீள் எழுச்சி"
நேரம்: 1.00 - 2.00 மதியபோசன இடைவேளை
2.00 - 4.00 - சுவாமி விபுலானந்தர் அரங்கு
பேசு பொருள் " அறநெறிக் கல்வியில் வெள்ளிக்கிழமைப் பிரகடனம்"

இவ்வரங்குகளின் இடையே இயல். இசை. நாடகம் எனும் முத்தமிழினால் இறை சிவனைப் போற்றும் நிகழ்வுகளும் இளைஞர்களின் மனதை ஒரு நிலைப்படுத்தும் யோகாசன. தியான நிகழ்வும் இடம் பெறும்

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன் தமிழோடு இசைபாடல் மறந்தறியேன்

12.08.2017 சனிக்கிழமை

நேரம்: 09.30 - 10.45 - குன்றக்குடி அடிகளார் அரங்கு
பேசு பொருள் " கோவிலைத் தழுவிய குடிகள்: குடிகளைத் தழுவிய கோயில் "

நேரம்: 10.45 - 11.00 - இடைவேளை
11.00 - 1.00 - ஆறுமுகநாவலர் அரங்கு

பேசு பொருள் " சிவபூமியில் சைவத் தமிழர்களின் நிலைபெறுகை"

நேரம்: 1.00 - 2.00 - மதிய போசன இடைவேளை
2.00 - 3.00 - அறப்பணி அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி அரங்கு

பேசு பொருள் " அறப்பணிகளூடாக சைவத்தமிழ் கிராமங்களை ஆற்றுப்படுத்துகை"

நேரம்: 03.00 - 4.00 யோகர் சுவாமி அரங்கு
" வாழையடி வாழையாய் சிவதொண்டராய் பணிசெய்ய வாரீர்"

13.08.2017 ஞாயிற்றுக்கிழமை

செந்தமிழ் திருக்கோயில் இணுவில் ஞானலிங்கேச்சுரத்தில் சிவத்தமிழ் குருமார்கள். சிவதொண்டர்கள் பங்குகொள்ளும் செந்தமிழ் யாகமும் மாநாட்டு தீர்மான உறுதியேற்பு வைபவமும் இறை சிவனின் திரு முன்னிலையில் இடம்பெறும்.

மாநாட்டுத் தொடர்புகளுக்கு : சிவத்திரு திருமூல தம்பிரான் - 077 173 1728
மருத்துவர் பரா. நந்தகுமார் - 077 220 8467
திரு.அருள்.சிவானந்தன் - 077 599 9822

அகில இலங்கை சைவ மகா சபை

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# பதவியிழந்த மாரப்பன அயலுறவு அமைச்சராவார்

## ரவியின் பதவி பறிபோகும் என்று கொழும்பு ஊடகம் ஆரூடம்



கொழும்பு, ஓக. 9

பிணைமுறிச் சர்ச்சை காரணமாக முன்னாள் நிதி அமைச்சரும், அயலுறவுத்துறை அமைச்சருமான ரவி கருணாநாயக்க பதவி விலக்கப்படுவார் என்றும், சர்ச்சையில் சிக்குண்டு ஏற்கனவே பதவியிழந்த திலக் மாரப்பன அந்தப் பதவிக்கு நியமிக்கப்படுவார் என்றும் கொழும்பு ஊடகம் ஆரூடம் கூறியுள்ளது.

அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

மத்திய வங்கி பிணை முறி விற்பனை முறைகேடு தொடர்பாக ரவி கருணாநாயக்கவுக்கு எதிராகக் குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. அவரைப் பதவி விலகுமாறு பல்வேறு தரப்புகளும் அழுத்தம் கொடுத்து வருகின்றன. அவருக்கு எதிராகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்படவுள்ளது. இந்த நிலையில் ரவி கருணாநாயக்க விரைவில் பதவி விலகுவார் என்று கூறப்படுகிறது.

இதையடுத்து, திலக் மாரப்பன அயலுறவுத்துறை அமைச்சராக நியமிக்கப்படுவார் என்றும் தகவல்கள் கசிந்துள்ளன. திலக் மாரப்பன முன்னாள் சட்டமா அதிபராவார். தற்போதைய அரசின் தொடக்கத்தில் இவர் சட்டம் ஒழுங்கு அமைச்சராக இருந்து, சர்ச்சையை ஏற்படுத்தியதையடுத்து அடுத்த பதவி விலகியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (5)

# திருடச் சென்ற இளைஞனுக்கு வாழ்வளித்த தமிழ்ப் பொலிஸ்

## கனடாவில் நெகிழ்ச்சியான சம்பவம்

கொழும்பு, ஓக. 9

கனடாவில் கடையில் திருடச் சென்ற இளைஞனுக்கு டொரொன்டோவில் உள்ள தமிழ்ப் பொலிஸ் அதிகாரி மறுவாழ்வு அளித்துள்ளார். இந்தச் செயலை கனடிய ஊடகங்கள் பாராட்டிச் செய்தி வெளியிட்டுள்ளன.

நடந்த சம்பவம் தொடர்பில் தமிழ்ப் பொலிஸ் அதிகாரி நிரன் ஜெயநேசன் தெரிவித்ததாவது:

திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக ஞாயிற்றுக்கிழமை இரவு தகவல் கிடைத்ததையடுத்து, சம்பவம் நடைபெற்ற கடைக்குச் சென்றேன். 18 வயது இளைஞன் நேர்முகத்தேர்வுக்குச் செல்வதற்கு ஆடை திருடியுள்ளதாகத் தெரியவந்தது. அவர் வறிய குடும்பத்தைச் சேர்ந்தவர். நேர்முகத்தேர்வுக்குச் சென்று வேலையைப் பெற்று குடும்ப வறுமையை போக்க நினைத்துள்ளார். கடை உரிமையாளருடன் பேசி இளைஞனை விடுவித்தேன். நேர்முகத் தேர்வுக்கு செல்வதற்குத் தேவையான உடைகளை நானே வாங்கிக் கொடுத்தேன் -என்றார்.

இந்தச் சம்பவத்தை கனேடிய ஊடகங்கள் பாராட்டியுள்ளன. (5)

## இளைஞர்கள் கடத்தல்

# போட்டுக் கொடுக்கிறார் தசநாயக்க சிக்கப்போகின்றார்கள் கடற்படையினர்

கொழும்பு, ஓக. 9

2008ஆம் மற்றும் 2009ஆம் ஆண்டு காலப் பகுதியில் கொழும்பில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பாக மேலும் 3 கடற்படை அதிகாரிகள் கைது செய்யப்படவுள்ளனர்.

இந்தச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில், கடற்படையின் முன்னாள் பேச்சாளர் கொமடோர் டி.கே.பி.தசநாயக்க கடந்த மாதம் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இவரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளின் போதே, இந்தக் கடத்தல்களுடன், தொடர்புடைய மேலும் மூன்று கடற்படையினர் பற்றிய விபரங்கள் தெரியவந்துள்ளன.

கொமடோர் தசநாயக்க அரசியல் ரீதியாக செல்வாக்குப் பெற்றிருந்தவர் என்பதால், அவர் பற்றிய தகவல்களை வெளியிட கடற்படையினர் பலரும் தயங்கி வந்தனர். அவர் கைது செய்யப்பட்டதை அடுத்தும், அவரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளின் போதும், பல விபரங்கள் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கத் தொடங்கியுள்ளன.

இவரிடம் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் மேலும் மூன்று கடற்படையினர் விரைவில் கைது செய்யப்படக் கூடும் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (5)

# மலையகத்தில் கடும் பனி அடைமழை

கொழும்பு, ஓக. 9


மலையகத்தில் இப்போது அடை மழை பெய்துவருவதுடன் கடுமையான பனி மூட்டமும் காணப்படுவதால் வாகனச் சாரதிகள் மிகுந்த அவதானத்துடன் நடந்து கொள்ளவேண்டுமென பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சிறிய ஓடைகளிலும் ஆறுகளிலும் நீர்மட்டம் அதிகரித்துள்ளதுடன், அட்டன்வெலிஓயா வீதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. கடும்காற்று வீசுவதால் இடைக்கிடையே மின்சாரம் தடைப்படலாம்.

கடும் மழையால் பாதைகள் வழுக்கக்கூடிய நிலையில் இருப்பதாலும் கடும் பனிமூட்டத்தால் வீதிகள் தெளிவாகத் தெரியாதபடியாலும் வாகனச்சாரதிகள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். (5)

## மரண அறிவித்தல்கள்

### இராசா முருகதாஸ் (அப்பன்)



மூளாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசா முருகதாஸ் (வர்த்தகர்) 07.08.2017 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசா பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும் சுதாமதி (அரசினர் வைத்தியசாலை இளவாலை) யின் அன்புக் கணவரும் கமலாம்பிகை, இராதா (உதவிக்கல்விப் பணிப்பாளர், தமிழ் வலிகாமம் கல்விவலயம்), ஸ்ரீதேவி, அரியதாசன் (லண்டன்), ரசனி, கலாரஞ்சினி(லண்டன்), கமலலோசினி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (08.08.2017) செவ்வாய்க்கிழமை நடைபெற்று பூதவுடல் மூளாய் பித்தனை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மூளாய் தெற்கு. குடும்பத்தினர்.

### திருமதி பாலராணி வேல்முருகு

(முன்னாள் இலங்கை மத்திய வங்கி ஊழியர்)



தோற்றம் 24.06.1944 மறைவு 06.08.2017

யாழ்.அரியாலையைப் பிறப்பிடமாகவும் கண்டியை வசிப்பிடமாகவும் லண்டனை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட திருமதி பாலராணி வேல்முருகு 06.08.2017 ஞாயிற்றுக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கவாசகர் தங்கலஷ்மி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி நமசிவாயம்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கலாநிதி வேல்முருகு (முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர் பேராதனைப் பல்கலைக்கழகம்) இன் அன்பு மனைவியும் அம்பிகை, மயூரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் மருத்துவக்கலாநிதி, நிர்மலன், சுமணா ஆகியோரின் அருமை மாமியாரும் காலஞ்சென்ற ஜெயராணி மற்றும் யசோதராணி, பிரேமராணி, பாலேந்திரா, நாகேந்திரா ஆகியோரின் அன்புச் சகோதரியும் வனஜாவின் அன்புச் சின்னம்மாவும் ஷெரின், கிருஷான், டிலன், அபிகேல் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.08.2017) வியாழக்கிழமை லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

அம்பி(மகள்) லண்டன் - +4416 89857380
செல்லிடப்பேசி - +44744 9639534 சிவலிங்கம் - 0777940219

## 31ஆம் நாள் நினைவு அஞ்சலி

10.07.2017 திங்கட்கிழமை அமரத்துவம் அடைந்த

### அமரர் சங்கரப்பிள்ளை கந்தசாமி




தோற்றம் 13.07.1960 மறைவு 10.07.2017

அவர்களின் குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வெள்ளெருவை பிள்ளையாரை பிரார்த்திக்கின்றோம்.

கோப்பாய் மத்தி. வெள்ளெருவை பிள்ளையார் சனசமூக நிலையம்.

## மரண அறிவித்தல்

### திருமதி மேரிஇராசாத்தி மாணிக்கம்



கீரிமலை வீதி, பண்டத்தரிப்பை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரிஇராசாத்தி மாணிக்கம் 07.08.2017 திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி மாணிக்கத்தின் (இளைப்பாறிய ஆசிரியர் - யாழ்ப்பாணக் கல்லூரி, ஊழியர் - தென்னிந்தியத் திருச்சபை) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான லூதர் பஸ்தியாம்பிள்ளை றோசலின் சின்னம்மா தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற ஜோன்தம்பி ஐயா, தங்கராசா (ஓய்வு பெற்ற ஆசிரியர்) காலஞ்சென்ற யோசவ் பாலச்சந்திரன் மற்றும் சூசின் தங்கரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான ஜெயராஜதேவி, ராஜக்கோன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் டயாளினி (U.S.A), கலாஜினி(U.K), தயாபரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் சுகந்தன் (U.S.A), றிச்சேட் விக்கிரமகுமார் (U.K),சுதர்ணா ஆகியோரின் அன்பு மாமியும் ஹனா(U.S.A), எட்றிச்(U.K),றொஷேல்(U.K), ஈடன்(U.K), தாரணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 12.08.2017 சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்று பண்டத்தரிப்பு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

# தனியார் வைத்தியசாலைகள் அறவிடும் கட்டணங்கள் பற்றி அமைச்சு விசாரணை

கொழும்பு, ஒக. 9

டெங்கு நோயாளர்களின் குருதிப் பரிசோதனைக்கு சுகாதார அமைச்சு நிர்ணயித்துள்ள கட்டணங்களுக்கு மேலதிகமாக அறவிடும் தனியார் மருத்துவமனைகள் மற்றும் ஆய்வு கூடங்கள் மீது விசாரணை நடத்துமாறு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன, தனியார் சுகாதார சேவைகள் அபிவிருத்திப் பணிப்பாளர் காந்தி சேனாரத்னவுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

தனியார் மருத்துவமனைகளும் ஆய்வுகூடங்களும் சாதாரண குருதிப் பரிசோதனைக்கு உச்சபட்சமாக 250 ரூபாவையும், டெங்கு பரிசோதனைக்கு உச்சபட்சமாக ஆயிரம் ரூபாவையும் மாத்திரமே அறவிடவேண்டும். குறைந்தபட்சம் நாட்டில் டெங்கு நோய் கட்டுப்பாட்டுக்குள் வரும்வரையிலாவது இந்தக் கட்டணங்கள் பின்பற்றப்படவேண்டும். இந்த அறிவுறுத்தல் ஜூன் மாதம் 19ஆம் திகதி சுகா



தார அமைச்சினால் கொடுக்கப்பட்டிருந்தது. பல தனியார் மருத்துவமனைகளும், ஆய்வு கூடங்களும் டெங்கு இரத்தப் பரிசோதனைக்கு மூவாயிரம் ரூபா வரை அறவிட்டு வருவதாக முறைப்பாடுகள் கிடைத்திருப்பதால் அத்தகைய மருத்துவமனைகள் மற்றும் ஆய்வு கூடங்கள் மீது விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார அமைச்சர் பணித்திருக்கின்றார் என்று சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (5)

## டெங்குக்கான குருதிச்சோதனை 2 மணிநேரத்தில் அறிக்கை

### வழங்கவேண்டும் என்கிறார் ரணில்

கொழும்பு, ஒக. 9

நாடு முழுவதும் டெங்கு நோயின் தாக்கம் தீவிரமடைந்துள்ளது. இந்த நிலையில் டெங்கு நோயாளர்களின் குருதிப் பரிசோதனை அறிக்கைகளை இரண்டு மணித்தியாலங்களில் வழங்குவதற்குத் தனியார் மருத்துவமனைகளும், தனியார் ஆய்வுகூடங்களும் ஏற்பாடு செய்யவேண்டும் எனத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

தனியார் மருத்துவமனைகள் மற்றும் ஆய்வு கூடங்களுடன் இந்த ஏற்பாடு குறித்து கலந்தாலோசிப்பதற்காக அமைச்சர்களான ராஜித சேனாரத்ன, மங்கள சமரவீர, மலிக் சமரவிக்கிரம ஆகிய மூவர் அடங்கிய குழுவொன்றைத் தலைமை அமைச்சர் நியமித்துள்ளார்.

தனியார் மருத்துவமனைகளிலும், ஆய்வு கூடங்களிலும் குருதிப் பரிசோதனை அறிக்கைகளை வழங்க 10 தொடக்கம் 12 மணித்தியாலங்கள் வரை தாமதமாகின்றன. இதனால் நோயாளர்களுக்கான சிகிச்சை தாமதமாவதால் அவர்களின் உயிர்களுக்கு ஆபத்து ஏற்பட இடமுண்டு. அந்த அறிக்கைகளை உச்சபட்சமாக இரண்டு மணித்தியாலங்களில் வழங்குமாறு தலைமை அமைச்சர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (5)


## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**விசுவலிங்கம் இரங்கநாதன்**
(ஓய்வுபெற்ற மின்சார அத்தியட்சகர்)

மலர்வு
11.04.1941

உதிர்வு
12.08.2014

திதி:- அபரபக்க துதியை

ஆண்டுகள் மூன்று ஆகியதே -உங்கள் ஆசை முகத்தைப் பார்த்து
பேசிட வார்த்தைகள் கோடி உண்டு - உங்கள்
தேறுதல் வார்த்தைகள் நாடி நிலையற்ற வாழ்வை எமக்குணர்த்தி
நிலையாகச் சென்றதேனோ? - உங்கள்
நினைவு தன்னை எமக்களித்து நீண்ட தூரம் சென்றதேனோ?
உங்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

சாத்தா கலட்டி,
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
**அருந்தவஈஸ்வரி இரகுநாதன்**



அன்னை மடியில்
07.04.1919

அரன் அடியில்
22.07.2005

திதி:- ஆடிமாத அபரபக்க துதியை (09.08.2017)

அன்புக்கும் பண்புக்கும் உறைவிடமாய் திகழ்ந்த என் அம்மாவே!
இனியமொழி பேசியே உன் பிள்ளையை அன்போடு வளர்த்தாய் அம்மா!
கண்ணீர் என்னும் கடல் தந்து ஆண்டு பன்னிரண்டு ஆனதம்மா!
உங்கள் நினைவில் நித்தமும் வாடும்

அன்பு மகள்
செல்வி செந்திற்செல்வம் இரகுநாதன்
(இளைப்பாறிய அதிபர்),
உற்றார், உறவினர், நண்பர்கள்.

"உடையார்" வீடு,
சங்கரத்தை, வட்டுக்கோட்டை.

## கண்ணீர் அஞ்சலிகள்



பிறப்பு: 27.08.1956
இறப்பு: 06.08.2017

இலங்கைத் திறந்த பல்கலைக்கழக முல்லைத்தீவுக் கற்கை நிலையத்தின் உதவிப்பணிப்பாளர் **ப.திவாகர்** அவர்களின் அன்புத்தந்தை

**தில்லைநாயகம் பவளகுமார்**

அவர்கள் விண்ணுலகடைந்த செய்தி கேட்டுத் துயரடைகின்றோம். அன்னாரது பிரிவினால் துயரடையும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**
பிராந்திய கல்விச்சேவைப் பிரிவு
நாவல, நுகேகொட.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**இராஜரட்ணம் இராஜேந்திரா (சுது)**
(அகில இலங்கை சமாதான நீதிவான்)

அன்னை மடியில்
27.02.1944

ஆண்டவன் அடியில்
22.07.2016

திதி:- துதியை

எமது குடும்பத்தின் குல தெய்வமே!
பாசத்தினால் எல்லோரையும் கட்டி வைத்தீர் உம்வசம்
பண்பினால் எல்லோர்க்கும் வழிகாட்டியாய் வாழ்ந்தீர்
என்றும் உம் நினைவில்....

243, பலாலி வீதி, கந்தர்மடம்.

குடும்பத்தினர்.

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 10.07.2017
திங்கட்கிழமை இறைவனடி
சேர்ந்த எமது
குடும்பத்தலைவி
அமரர்
**இரத்தினபூபதி (கிளி) சற்குணநாதன்**



அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் 08.08.2017 செவ்வாய்க்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 09.08.2017 புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்திலும் நடைபெறும் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

மீசாலை மேற்கு,
மீசாலை.

குடும்பத்தினர்.
077 666 0199

## பூ மணக்கும் விருட்சத்தின் முதலாமாண்டு நினைவில்...



திருமதி **புவனேஸ்வரி (பூமணி) இரங்கநாதன்**

உதயம்
04.11.1942

திதி: ஆடி மாத தேய்பிறைத்துதியை
திவச தினம் :- 09.08.2017 புதன்கிழமை

அஸ்தமனம்
21.07.2016

செம்மை நலம் அறியாத சிதடரொடுந் திரிவேனை
மும்மை மலம் அறுவித்து முதலாய முதல்வன் தான்
நம்மையும் ஓர் பொருளாக்கி நாய் சிவிகை ஏற்றுவித்த
அம்மையெனக் கருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே
- திருவாசகம் -

"கணநாதம்"
பிள்ளையார் கோயிலடி,
தாவடி கிழக்கு, கொக்குவில்.

இவண்
விருட்சத்தின் கிளைகள்

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## 20ஆவது திருத்தத்தின் மீது அக்கறை கொள்வது அவசியம்

வடக்கு மாகாண சபைக் குழப்பங்களுக்கு மத்தியில் மாகாணசபைவிடயத்தில்கொழும்புஅரசுஎடுத்திருக்கும் நடவடிக்கை ஒன்று கவனத்தை ஈர்க்காமல் அக்கறை செலுத்தப்படாமல் விடப்பட்டுவிட்டது. சகல மாகாண சபைத்தேர்தல்களையும் ஒரேதினத்தில் நடத்தும் நோக்கத்துடன் அரசமைப்புத் திருத்தத்தைக் கொண்டு வருவதற்கு கொழும்பு நடவடிக்கை எடுத்துள்ள விடயம்தான் அது.

இது தொடர்பாக மாகாணசபைத் தேர்தல்களை ஒரேநாளில் நடத்துவதற்கானஅரசமைப்பின்20ஆவதுதிருத்தத்துக்கான வர்த்தமானி அறிவித்தல் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவால் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் கடைசியாகத் தேர்தல் நடந்த மாகாண சபையின் பதவிக் காலம் முடிவடையும் திகதிக்கு முன்னதாக அனைத்து மாகாண சபைகளுக்கும் ஒரே நாளில் தேர்தல் நடத்தப்படவேண்டும். அந்தத் தேர்தல் திகதியை நாடாளுமன்றமே தீர்மானிக்கவேண்டும்.

அதனடிப்படையில் பார்த்தால், 2014ஆம் ஆண்டு ஊவா மற்றும் தென் மாகாணங்களுக்கே கடைசியாகத் தேர்தல் நடத்தப்பட்டது. அதன் பதவிக்காலம் 2019ஆம் ஆண்டே முடிவுக்கு வரும். எனவே அது வரையில் ஏனைய மாகாண சபைகளின் பதவிக் காலத்தை நீடிக்க முடியும்.

குறிப்பாகக் கிழக்கு மாகாண சபை உட்பட 3 மாகாணசபைகளின்பதவிக்காலம்சுமார்2வருடங்கள்நீடிக்கப்படுவதற்கும் வடக்கு மாகாணசபையின் பதவிக் காலம் ஒரு வருட காலம் நீடிக்கப்படுவதற்கும் வாய்ப்பு உள்ளது.

மேலோட்டமாகப் பார்த்தால் மாகாண சபைகளின் பதவிக் காலம் இப்படி ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகளுக்குநீடிக்கப்படுவதுஒன்றும்பெரியவிடயம்அல்லவேஎன்றேதோன்றும். ஆனால், இது தொடர்பானவர்த்தமானி அறிவித்தலில் காணப்படும்மற்றொருவிடயமேதமிழ்பேசும்மக்கள்கூர்ந்து அவதானிக்கவும்எச்சரிக்கையுடன்இருக்கவும்வேண்டியது.

இந்த நீடிப்புக் காலத்தில் ஏதாவது ஒரு மாகாண சபையில் ஆளும்கட்சிதோற்கடிக்கப்பட்டால்அல்லது ஆட்சிகவிழ்க்கப்பட்டால் அந்த மாகாண சபையின் எஞ்சிய காலப் பகுதியைக் கொழும்பு அரசே தனது நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துவிடும்.

உதாரணத்திற்கு வடக்குமாகாணசபையில்முதலமைச்சருக்கும் அவரைப் பதவிக்குக் கொண்டு வந்த கட்சிக்கும் இடையில்காணப்படும்முரண்பாட்டால்அவரது ஆட்சிகவிழ்க்கப்பட்டுவிட்டது என்றால் மாகாண சபையின் கட்டுப்பாடு நேரடியாகக் கொழும்பின் வசம் சென்றுவிடும்.

இது அதிகாரங்களைக்கோரிநீண்ட காலமாகப்போராடும்ஒரு சமூகத்திற்கு ஏற்புடையது அன்று. அதனை அனுமதிக்கவும் முடியாது.

மாகாணசபைகளின்பதவிக்காலம்நீடிக்கப்பட்டிருக்கையில் புதிய அரசமைப்புநிறைவேற்றப்பட்டுவிட்டால்பிரச்சினைகள்இல்லை. ஆனால்,அதற்கானவாய்ப்புகள்அறுதியும்உறுதியுமாகத்தெற்கில்தெரியவில்லைஎன்பதுபெரும்துரதிர்ஷ்டம்.

புதிய அரசமைப்பு ஒன்று நிறைவேற்றப்படாமல் போகும் பட்சத்தில் மாகாண சபைகளின் கால நீடிப்புக்கு அனுமதி வழங்கும் 20ஆவது திருத்தத்தை ஆதரிப்பது தமிழ் பேசும் மக்களுக்குத்தீங்காகவே முடியும். குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகளின் ஆட்சிகள் முரண்பாடுகளில் ஊசலாடிக் கொண்டிருக்கும்போதும் இந்தச் சட்டத் திருத்தத்தை ஏற்பது நம் தலையில் நாமே மண்ணை வாரிப் போடுவதற்கு ஒப்பானதாகிவிடக்கூடும்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின்தலைவர் மகிந்த தேசப்பிரிய கூட அரசின் இந்த முயற்சியைக் கண்டித்துள்ளார். "தனது விருப்பத்துக்குத்தேர்தல்களைத்தள்ளிப் போடுவதன்மூலம் அரசு ஜனநாயகத்தை மட்டுமன்றிப் பொதுமக்களின் அடிப்படை உரிமைகளையும் மீறி வருகிறது" என்று அவர் சாடியுள்ளார். 'கபே' உட்பட பல அரசசார்பற்ற பொது அமைப்புகளும்கூட அரசின் இந்தநடவடிக்கையைக்கண்டித்துள்ளன. ஆனால் அதில் அதிகம் அக்கறை காட்ட வேண்டிய தமிழ் பேசும் மக்களின் தரப்பிலிருந்து இதுவரையில் எதிர்ப்புக் குரல்கள் எவையும் பதிவாகவில்லை.

மேலதிக அதிகாரங்களைப் பெறுவதற்குப் போராடும் அதே வேளையில் இருக்கும் அதிகாரங்களைமீண்டும்கொழும்புக்குத் தாரை வார்க்காமல் இருப்பதை உறுதிப்படுத்துவதும் அவசியம்.



# தென்னாசிய வட்டகை ஆதிக்கப் போட்டியில் இந்தியாவும் சீனாவும்

சிங்களமூலம்: ஆதிபாத
(மவ்பிம)
தமிழில்: வீஎஸ்ரீ



1987ஆம் ஆண்டு ஜூலை மாதம் 24 ஆம் திகதிய நடாளுமன்ற அமர்வுகடும்வாதப்பிரதிவாதங்கள் மத்தியில் சூடு பிடித்திருந்தது. அந்த வேளைய அரச தலைவர்ஜே.ஆரின்தலைமையிலான ஐ.தே.கட்சி அரசு, இந்தியாவுடன் செய்து கொள்ள விருந்த ஒப்பந்தம்குறித்தவிவரங்களை நாடாளுமன்றத்துக்குத் தெரிவிக்க வேண்டுமென எதிர்க்கட்சியினர் சபையில் கடும் வற்புறுத்தல் மேற்கொண்டனர். நிலமையைச் சமாளிக்கும் நோக்கில் அரசு நாடாளுமன்ற அமர்வை ஒகஸ்ட் 18ஆம்திகதிவரை ஒத்திவைத்து எதிர்க்கட்சியினரது எதிர்ப்பைத்தற்காலிகமாகமுறியடித்தது.

நான்குநாள்கள்கழித்துஜூலை 28 ஆம் திகதி பிரபல பௌத்த தேரர்கள்மற்றும் எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ தலைமையிலான எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தலைமையில் சுமார் 20 ஆயிரம்பேர் வரையிலான சிங்கள மக்கள் கோட்டை அரசமரச் சந்தியில் இந்திய இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்குஎதிர்ப்புத்தெரிவித்துஅறப் போராட்டத்தைஆரம்பித்திருந்தனர். அவர்களைஅங்கிருந்து விரட்டியடிப்பதற்காக பொலிஸார்மேற்கொண்டதுப்பாக்கிச் சூட்டில் 21 பொது மக்கள் அந்த இடத்திலேயேஉயிரிழந்தனர். அதையடுத்து நாடுபூராகவும் தலைதூக்கிய குழப்பத்தில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினரின்துப்பாக்கிப்பிரயோகத்தில் 132 பொதுமக்கள் உயிரிழக்க நேர்ந்தது.

குறித்த ஒப்பந்தத்துக்கான எதிர்ப்புத் தொடர்பாக அரசதரப்பின் சார்பில் பதிலளித்த அந்த வேளைய நிதி அமைச்சர் றொனி டிமெல். குறித்த இந்திய இலங்கை ஒப்பந்தம் நாட்டின் இறைமைக்குஎந்தவிதத்திலும் பாதிப்பை ஏற்படுத்தாது என உறுதியளித்தார்.

இதற்கு அடுத்த நாள் அதாவது 1987 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29 ஆம் திகதியன்று. இந்திய -இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது

குறித்த ஒப்பந்தம் நாட்டின் இறைமைக்கு எந்த வகையிலும் பாதிப்பாக அமையாது எனத்தெரிவித்தறொனிடிமெல் கூட குறித்த ஒப்பந்தம் குறித்து வாசித்தறிந்திருப்பாரோ தெரியாது. அந்த வேளையில் இந்திய உயர்ஸ்தானிகராலய அரசியல் செயலாளர் ஹர்தீப் சின் பூரிஇந்தியஅரசின்தேவைக்கு ஏற்ற விதத்தில் தயாரித்த அந்த ஒப்பந்தம் இலங்கைக்குப் பாதிப்புஎதனையும்ஏற்படுத்தாது எனத் தெரிவிக்கப்பட்ட கருத்து கேலிக்குஉரியதொன்றே.

குறித்த ஒப்பந்தம் இலங்கையின் இறைமைக்குப் பாதிப்பானதொன்று என்பதைத் தெளிவாகக் கணிப்பிட்டிருந்த அந்த வேளையில் இலங்கையில் இந்திய அரசின் தூதுவராகச்செயற்பட்ட ஜே. என். டிக்சிற், வெளிநாட்டுத் தலைவர்களுக்கான மரியாதை அணிவகுப்பில் கலந்து கொள்வதைத் தவிர்க்குமாறு இந்தியத் தலைமை அமைச்சர் ராஜீவ் காந்திக்குஆலோசனைவழங்கியிருந்தார்.

இருப்பினும் இலங்கைக்கான இந்தியத்தூதுவரதுஅந்தஆலோசனையைப் புறக்கணித்து மரியாதைஅணிவகுப்பைஏற்றுக் கொண்ட இந்தியத் தலைமை அமைச்சர்ராஜிவ்காந்திஅணிவகுப்பில்ஒருஇராணுவவீரராகக் கலந்து கொண்ட விஜித ரோகண என்ற சிங்கள இராணுவ வீரரது 'ரைபிள்' தாக்குதலுக்கு உட்பட நேர்ந்தது.

### இலங்கையில் கால்பதித்த இந்திய இராணுவம்

இந்திய இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதையடுத்து உடனடியாகவேஇந்தியஅமைதி காக்கும்படையினர்எனஅடையாளப்படுத்தப்பட்ட இந்திய இராணுவத்தினர் பலாலி வானூர்தி நிலையத்தில் தரையிறக்கும்வரை பலாலியில் கடமையிலிருந்த இலங்கை அரசின் இராணுவக் கட்டளையிடும் அதிகாரி அது குறித்து அறிந்திருக்கவில்லை. இந்திய அமைதி காக்கும் படையினரை மாலை அணிவித்து வரவேற்ற எம்மவர்களில் பலர், ஓரிருவாரங்களில்நிலைமையின் தீவிர பாதிப்புக்குறித்துப் புரிந்து கொண்டனர். இந்திய அமைதி காக்கும் படையினரது பிரசன்னத்தை விரும்பாத விடுதலைப் புலிகள் இந்திய இராணுவத்தினருக்கு எதிராக ஒழிந்திருந்து தாக்கும் செயற்பாட்டை முன்னெடுக்க முயன்றதால் நாட்டின் தமிழர் பிரதேசம் குருதி ஆறு ஓடும் பிரதேசமாக மாறும் நிலை உருவாகியது. வடக்கும் தெற்கும் பற்றியெரியும்நிலைஏற்பட்டது.

இந்திய இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தான வேளையில் தலைமை அமைச்சர் பிரேமதாச நாட்டில் இருக்கவில்லை. அத்தோடு அரசில் அமைச்சராகச் செயற்பட்ட லலித் அதுலத்முதலி ஒப்பந்தவிடயத்தில்தமது வாயை இறுக மூடிக் கொண்டார். குறித்த ஒப்பந்தத்துக்கு ஆதரவாகக்குரல்கொடுத்தவர் அமைச்சர் காமினி திசநாயக மட்டுமே. கடைசியில் ஒப்பந்தத்தை நிறைவேற்றி முடித்ததோடு இலங்கை அரசு தான் நினைத்த விதத்திலேயே அதனை நடைமுறைப்படுத்தவும் செய்தது.

பின்னர்ஒருசந்தர்ப்பத்தில்இந்திய அமைதிகாக்கும் படையினர் இலங்கையில்செயற்பட்ட விதம் குறித்து இந்திய போர் விமர்சகரான ஆர். ஹரிகரன் கருத்து வெளியிடுகையில், இந்தியாவின் பலம் குறித்து பங்களாதேஷில் இந்தியா பெற்றவெற்றியைவேறுஎதனுடனும்ஒப்பிடஇயலாது. கிழக்கு பாகிஸ்தானில்இந்தியஇராணுவம் பாகிஸ்தான் இராணுவத்துடன் கடும் போரில் ஈடுபட நேர்ந்தது. இந்தியாபாகிஸ்தானுடன்மோதவேண்டிஏற்பட்டமை வங்காளி இனத்தவர்களுக்கு நாடொன்றை உருவாக்கிக் கொடுப்பதற்கே ஆகும். அதே போன்றுஇலங்கையில்தமிழ் மக்களுக்காகவே அமைதிப் படை நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது. இறுதியில் குழப்பம்நிறைந்த நாடாக இலங்கைஆனமையேகண்டமிச்சமாகும் எனத் தெரிவித்திருந்தார்.

### வரலாற்றுப் பெரும் திருப்பம் அரங்கேற்றம்

இந்திய இலங்கை ஒப்பந்தம் இடம்பெற்று 30 ஆண்டுகள் காலம் கழிந்த நிலையில்,

தற்போதுவரலாற்றில் முக்கியதிருப்பமொன்று ஏற்பட்டுள்ளது. இலங்கை இந்தியஒப்பந்தம்கைச்சாத்தானதன் முப்பதாவது ஆண்டுப் பூர்த்தித் தினத்தன்று, சீன - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இவற்றில் சம்பந்தப்பட்டமுக்கியபுள்ளிகளில்கூட ஒருஒற்றுமைஇருந்துள்ளது. அன்று ஜே.ஆர். இலங்கையின் அரசதலைவராக இருந்தார். இன்று அவரது மருமகன் முறையான ரணில் விக்கிரம சிங்க தலைமை அமைச்சராகச் செயற்படுகின்றார். அன்றுதலைமை அமைச்சர்பிரேமதாசஅரசுத்தலைவரான ஜே.ஆரின் இந்திய இலங்கை ஒப்பந்தத்துக்கு ஆதரவளிக்காது ஒதுங்கிக் கொண்டார். அதேபோன்ற இன்றைய அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும், இலங்கை - சீன ஒப்பந்தத்துக்குமுழுஆதரவுவழங்குவதாகக் கூறிக் கொள்ள இயலவில்லை. அன்று பதில் பாதுகாப்பு அமைச்சர் லலித் அதுலத்முதலி இலங்கைஇந்தியஒப்பந்தத்தை ஆதரிக்கவில்லை. அதேபோன்று இன்று துறைமுகங்கள்தொடர்பானஅமைச்சர் மகிந்த சமரசிங்க இந்திய சீன ஒப்பந்தத்துக்கு முழு ஆதரவு வழங்குவதாகக் குறிப்பிடமுடியவில்லை.

அன்று இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தான தினத்துக்கு முந்திய தினம் நாடாளுமன்றத்தில் கூச்சலும் குழப்பமும் இடம்பெற்றன. இன்றும் நிலைமை அதேதான். அன்றும் இன்றும் நாடாளுமன்றத்தில் பெரும் எதிர்ப்பை வெளிப்படுத்தியவர் தினேஸ் குணவர்த்தனவே. அன்று போல் இன்றும் மேற்குறித்த ஒப்பந்தங்கள்குறித்துநாட்டுமக்கள்எதனையும் தெளிவாக அறிந்து கொண்டிருக்கவில்லை. அன்றுஒப்பந்தம்இந்தியாவுக்குச்சாதகமானவிதத்தில்அமைந்திருந்ததுடன் தற்போதைய ஒப்பந்தமும் சீனாவுக்குப் சாதகமானதொன்றாகவே உருவாக்கப்பட்டுள்ளது.



இன்றைய கூட்டாட்சி அரசின் வரவு செலவுத்திட்டத்தின்படிஅரசுக்குமுக்கியத்துவமற்ற நிறுவனங்கள் முதல், கடும்முக்கியத்துவம்வாய்ந்தநுரைச்சோலை அனல்மின் நிலையம் போன்ற பெரியநிறுவனங்களையும் வெளிநாடுகளுக்கு குத்தகைக்கு விடவோவிற்பனைசெய்யவோஅரசு திட்டமிட்டு வருவதாகத் தெரிய வருகின்றது. அம்பாந்தோட்டைதுறைமுக விவகாரம் இதில் ஒரு ஆரம்பம் மட்டுமே. அடுத்ததாக மத்தள வானூர்தி நிலையம் வெளிநாடொன்றுக்கு வழங்கப்படவுள்ளதாக தலைமை அமைச்சர் இப்போதே பச்சைக் கொடி காட்டியுள்ளார். அதேபோன்று கொழும்பு கட்டுநாயக்க அதிவேகப் பாதை, தெற்கு அதிவேகப் பாதை, மின்சாரசபை என்பவற்றைத் தனியார் மயப்படுத்த அல்லது வெளிநாடுகளுக்குக் குத்தகைக்கு வழங்கவும் அரசு தயாராகி வருவதாகத் தெரியவருகின்றது.

இந்த விதம் அரச நிறுவனங்களை வெளிநாடுகளுக்குக் குத்தகைக்கு வழங்குவதைநியாயப்படுத்தஅவை நட்டத்தில் இயங்குவதாகக் காட்டிக் கொள்ள அரசு நடவடிக்கை மேற்கொள்ள முயல்வதாகத் தோன்றுகிறது. அம்பாந்தோட்டை துறை முகத்துக்கு வரும் கப்பல்களுக்கு எரிபொருள் விநியோகத்தை அரசு நிறுத்திக் கொண்டமைக்கான காரணம் இதுவே.

முன்னரெல்லாம் தென்னாசிய வட்டகையின் பலவான் இந்தியாவே. அதனால் இந்தியா தனக்கு விருப்பமான விதத்திலேயே செயற்பட்டு வந்தது. இன்றுஆசியவட்டகையின்பலவான் சீனாவே. எனவே இன்று சீனாவும் தனக்கு விருப்பமான விதத்திலேயே செயற்பட்டுவருகின்றது. முன்னரெல்லாம் இந்திய ஆதிக்க முயற்சி குறித்து விமர்சனங்கள் வெளியிடப்பட்டன. அதுஇன்றுசீனாவின்தலையில்சுமத்தப்பட்டு வருகின்றது.

**தென்னாசிய வட்டகையின் பொலிஸ்காரனாக ஆக முயலும் சீனா**

தற்போது சீனா தாய்லாந்தினூடாக சுரங்கப்பாதைஅமைத்துவருவதன் நோக்கம், எதிர்காலத்தில் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைத் தமது எல்லைக்குள் கொண்டு வரவிருப்பதே எனப் பலர் கூறிவருகின்றனர். அவ்வாறு இடம்பெறுமானால், கொழும்புத் துறைமுகத்தினூடான அரசின் வருமானம் பெருமளவில் குறைவடையும். சீனா.அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைத் தாம் கைப்பற்றி உலக வர்த்தகத்துறையைத் தனதுகைகளில்எடுத்துக்கொள்ளும். மேற்குறிப்பிட்ட வகையிலான கதை தற்போது பரவலாக உலாவருகிறது. அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை முன்னையஅரசுநிர்மாணித்தபோது ஐ.தே.கட்சிக்காரர்கள்"அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் பெரிய கற்பாறையொன்று இருக்கிறது: வரும் எனக்கூறிய கப்பல்கள் எங்கே? உலகிலேயே பெரிய நீச்சல் தடாகம் போன்றவார்த்தைகளால்கேலிசெய்தமை பலரும் அறிந்ததொன்றே. ஆனால் இந்தக் கூட்டரசு பதவிக்கு வந்து அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை சீனாவுக்குக் குத்தகைக்கு வழங்கியுள்ளதல்லவா? அதே போன்றுகொழும்புத்துறைமுகநகர்த் திட்டமும் முன்னர் எதிர்த்தரப்பினரது விமர்சனங்களுக்கு உள்ளாகியிருந்தது. ஆனால் கூட்டாட்சி அரசு பதவியேற்றதும் அந்தத் திட்டத்தை அதே விதத்தில்முன்னெடுக்கமுன்வந்தது. இந்தியாவால் 2011 ஆம் ஆண்டில் புதிதாக உருவாக்கப்பட்ட வல்லபடம் என்ற துறைமுகம் இரண்டு ஆண்டுகள் காலமாக கப்பல்கள் எதுவும்செல்லாததால் பெரும் நட்டத்தை ஏற்படுத்தியது.ஆனால்2014ஆம்ஆண்டுஏப்ரல் மாதத்தில் மட்டும் அம்பாந் தோட்டை மாகம்புரதுறைமுகத்துக்குவந்தகப்பல்கள் 204 ஆகும். அந்த ஆண்டில் அந்தத் துறைமுகம் 5 ஆயிரத்து 396 மில்லியன் ரூபாவை அரசுக்கு இலாபமாக ஈட்டிக் கொடுத்திருந்தது.

கொழும்புத்துறைமுகம் பன்னாட்டு கடல் மார்க்கத்தில் வெகுதூரத்தில் இருப்பதுடன் கிழக்குத்திசையிலிருந்து பயணிக்கும்கப்பல்கள்இலங்கைக்கு ஏதாவது பொருள் வழங்கல்களை மேற்கொள்வதற்குகொழும்புத்துறைமுகத்துக்கு வருவதற்கு அதிக செலவீனத்தை எதிர்கொள்ள நேர்கிறது. திருகோணமலைத் துறைமுகத்தை எடுத்துக்கொண்டால், மேற்குத்திசையிலிருந்து பயணிக்கும் கப்பல்கள் திருகோணமலைக்குவரவேண்டுமானால் நீண்ட தூரம் பயணித்ததாக வேண்டும். அந்தவகையில்அமைவிடம்தொடர்பில்பன்னாட்டுகடல்மார்க்கத்தில் பயணிக்கும் கப்பல்களுக்கு இலங்கையலி வசதியான துறைமுகமாக அமைவது அம்பாந்தோட்டை துறைமுகமே. அந்தவகையில்தற்போது எதிரணித்தரப்பின் குற்றச்சாட்டின்படி இலங்கையின் மிகப்பெரும் சொத்து சீனாவுக்கு ஏலமிடப்பட்டுள்ளது.

இதில் ஆச்சரியம் என்னவெனில் வரலாற்றில் இடம்பெற்ற சம்பவங்கள் மீண்டும் அதே விதத்தில் இடம்பெறுவதுதான்.


**மகிந்த உருவாக்கியதை மைத்திரி திறந்து வைக்க ரணிலோ சீனாவுக்கு தாரை வார்த்தார்**

மகிந்த துறைமுகத்தை உருவாக்கி வைத்தார்; மைத்திரி திறந்து வைத்தார்;ரணிலோஅதனைச்சீனாவுக்குத் தாரை வார்த்து விட்டுள்ளார். மேற்குறித்த குறிப்பு இந்த நாள்களில் சமூக வலைத்தளங்களில்உலாவருகின்றன. இந்தக்கூட்டாட்சிஅரசின்ஏலம்போடும் போக்கு, இத்தோடு முடிந்து விடவில்லை. அடுத்து மத்தள வானூர்தி நிலையம், அதற்கடுத்து சூரிய வெவ விளையாட்டு மைதானம் அதற்குப் பின்னர் நாட்டைச் சுற்றியுள்ள கடல் ஏலம் விடப்படும், அதுவும் நிறைவேறினால் நாட்டின் மனிதர்கள் தான் ஏலம் விடப்படுவர்.

கூட்டாட்சி அரசின் போக்குக் குறித்த மனக் கொதிப்பில் எவரோ ஒருவர் வெளியிட்டகருத்தேமேற்கண்டவாக்கியங்களாகும்.

இந்திய மாகடலின் பெரிய அண்ணனாக ஆவதற்குமுயலும்சீனா இலங்கையின் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை குத்தகைக்கு எடுத்ததைப் பார்த்துக் கொண்டு இந்தியா மௌனமாய் இருக்குமென எவராவது எண்ணினால்அதைவிடவேடிக்கைவேறு எதுவும் இருக்கமாட்டாது. அப்படியானால் இந்தியாவுக்கு நாம் செலுத்த வேண்டியநட்டஈடுஏதாவதுஉண்டா என இன்னமும்கூறஇயலாதுள்ளது. ஒரு சிலர் கூறுகிறார்கள், இலங்கை திருகோணமலைஎண்ணெய்க்குதத் தொகுதியை இந்தியாவுக்கு வழங்க வேண்டி ஏற்படக்கூடுமென்று. மற்றொரு புறம் சேது சமுத்திரத்திட்டம் அரங்குக்கு வராதென எவராலும் உறுதியாகக்கூறஇயலாது;போக்ஜல சந்தியூடாக கப்பல் போக்குவரத்து மேற்கொள்ளத்தக்க வகையில் அதனைச் ஆழப்படுத்தி அதனூடாக பன்னாட்டு பெரும் வர்த்தகக் கப்பல்கள் பயணிக்கவழிசெல்வதே சேது சமுத்திரத்திட்டமாகும். அது சாத்தியமானால்பன்னாட்டுவர்த்தகக்கப்பல்கள் அவற்றின் தேவைகளை இந்தியத் துறைமுகங்களில் நிறைவேற்றுவது இரு தரப்புகளுக்கும் இலாபகரமாக அமையும். அத்தகையதொரு நிலை ஏற்படுமானால், இந்தியாவும் சீனாவும் இந்தியமாகடலின் ஆத்திகத்துக்குப் போட்டி போடும் நிலை உருவாகும். இதனால் குழப்பமடையப் போவதுஉலகவரைபடத்தில்வெறும் கோழி முட்டை போன்ற அளவில் காணப்படும் இலங்கை நாடே.

தற்போது இந்தியப் பொருள்கள் ஏற்றுமதியில் 80 வீதமானதைக் கையாள்வதுகொழும்புத்துறைமுகமே. மீதி20 வீதம் சிங்கப்பூர் துறைமுகமூடாகக் கையாளப்படுகிறது. சேது சமுத்திரத் திட்டம் நிறைவேறினால், இந்தியா தனது வெளிநாடுகளுக்கான ஏற்றுமதிகளுக்குக் கொழும்புத்துறைமுகத்தை நம்பியிருக்கத் தேவையில்லை. அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைத் தமது எதிராளியான சீனாவுக்கு இலங்கை அரசு குத்தகைக்கு வழங்கியதால் கவலையுற்றிருக்கும் இந்தியாஎதிர்காலத்தில்எந்தவிதத்தில் செயற்படும் என்பதை ஆண்டவன் மட்டுமே அறிவான்.




## அப்பாவி மக்கள் பாதிக்கப்பட வேண்டாம்

குடநாட்டின் குறிப்பிட்டசிலபகுதிகளில் பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினரால் சுற்றிவளைப்புத் தேடுதல்கள் இடம்பெற்று வருகின்றன. இதன்போது சந்தேகத்தின்பேரில் பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனவும் சந்தேகத்திற்கிடமான வாகனங்கள் சில கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஒரு சிலரின் தவறான செயற்பாடுகள் காரணமாகவே தேடுதல் நடவடிக்கைகள் இடம்பெறுவதற்கான தேவை எழுந்துள்ளதாகக் கூறமுடியும்.

போர் ஓய்ந்த பின்னரும் யாழ்.குடாநாட்டில் அமைதி குலைந்து சட்டவிரோதச் செயற்பாடுகள் அதிகரிக்கத் தொடங்கிவிட்டன. வாள்வெட்டிச் சம்பவங்கள், திருட்டு, கொள்ளை, அடாவடித்தனங்கள், வன்செயல்கள் ஆகியவை எல்லை கடந்து இடம்பெற ஆரம்பித்துவிட்டன. அப்பாவி மக்கள் பயப்பீதியில் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு வாழ வேண்டிய அவல நிலையும் தோன்றிவிட்டது. பொலிஸாரினால் மக்களுக்கு உரிய பாதுகாப்பை வழங்க முடியவில்லை என்பதை ஒப்புக் கொண்டேயாக வேண்டும்.

இந்த நிலையில்தான், வன்செயல்களின் உச்சக்கட்டமாக நீதிபதி இளஞ்செழியன் மீதான தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுப் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இதன் விளைவாகவே சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

இதனால் குற்றவாளிகள் கைது செய்யப்படுவதற்கான சாத்தியம் உள்ளதாயினும் அப்பாவி மக்கள் பாதிப்புக்குள்ளாவதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். போர்க் காலம் போன்று தேடுதல் நடவடிக்கைகள் இடம்பெறுவதால் குறித்த பகுதிகளில் வாழும் மக்கள் அச்சத்தில் உறைந்து போவது வழக்கமாக ஆகியுள்ளது. அதிலும் இரண்டு மூன்று தினங்களாகத் தொடர்ந்து இடம்பெறுகின்ற தேடுதல் நடவடிக்கைகளால் அந்த மக்கள் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர். குடாநாட்டில் இடம்பெறுகின்ற குற்றச்செயல்களை ஒடுக்குவதற்கு எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளை மக்கள் ஆதரிக்கவே செய்கிறார்கள். இதில் மாற்றுக் கருத்துக்கே இடமில்லை. ஆனால் அப்பாவி மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தாத வகையில் இவை இடம்பெற வேண்டும்.

மக்கள் பிரதிநிதிகள் தேடுதல் நடவடிக்கைகள் இடம்பெறுகின்ற இடங்களுக்குச் சென்று மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும். மக்களின் அச்சத்தைப் போக்க வேண்டும்.

பா.தர்மராசா, புலோலி

# வெள்ளப்பெருக்கால் வியட்நாமில் துன்பம்


*26 பேர் பரிதாபச் சாவு*
*41 மில். டொலர் சேதம்*

ஹனோய், ஓக. 9

வியட்நாமில் கடந்த வாரம் முழுவதும் பெய்த கனமழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் சிக்கி 26 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும், 41 மில்லியன் டொலர்கள் அளவுக்கு பொருட் சேதம் ஏற்பட்டுள்ளது என்றும் பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் செய்தி வெளியிட்டது.

தென்கிழக்கு ஆசிய நாடான வியட்நாமில் கடந்த வாரத்தின் தொடக்கத்திலிருந்து கடுமையாக மழை பெய்து வருகின்றது. நான்கு மாகாணங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

மழை மற்றும் வெள்ளச் சேதம் தொடர்பாக அந்த நாட்டின் பேரிடர் மையம் அறிக்கையை வெளியிட்டுள்ளது. அதில், வெள்ளத்தில் சிக்கி 26 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும், சுமார் 41 மில்லியன் டொலர் அளவுக்கு பொருட்சேதம் ஏற்பட்டுள்ளது என்றும் தெரியவருகிறது. உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் என்றும் குறிப்பிடப்படுகிறது. (ம)



# ஐ.எஸ். ஆயுததாரிக்கு 20 ஆண்டுகள் சிறை

*சவூதி வழங்கியது*


ரியாத், ஓக. 9

சவூதியில் தாக்குதல் நடத்தத் திட்டமிட்ட குற்றச்சாட்டில் ஐ.எஸ்.ஆயுததாரி ஒருவருக்கு 20 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கித் தீர்ப்பிட்டது சவூதி அரேபிய நீதிமன்றம்.

சவூதி அரேபியாவில் உள்ள வெளிநாட்டுத் தூதரகங்கள், அதிகாரிகள் மற்றும் சவுதியின் வடக்கு எல்லையில் உள்ள அரார் வானூர்தி நிலையம் மீது தாக்குதல் நடத்த திட்டமிட்டார் என்ற குற்றச்சாட்டில் ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயதக் குழுவைச் சேர்ந்த ஒருவர் கடந்த சில தினங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்டார்.

இவர் மீதான குற்றங்கள் நிரூபிக்கப்பட்டதை அடுத்து, சுமார் 20 ஆண்டுகால சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பிட்டது ரியாத் நீதிமன்றம். (ம)





அயர்லாந்தின் வடக்குப் பகுதியில் உள்ள பெல் பாஸ்ட் என்ற இடத்தில் உலகின் மிகவும் பலமான மனிதருக்கான போட்டிகள் அண்மையில் நடைபெற்றன. உலகின் பல பாகங்களில் இருந்தும் நூற்றுக்கணக்கான போட்டியாளர்கள் இதில் கலந்து கொண்டனர். (ம)

# ஐ.நா.சபையின் தடை அறிவிப்பு ஒன்றும் செய்யா

*வடகொரியா இறுமாப்பு*



பியாங்யாங், ஓக. 9

"அமெரிக்காவினதும் ஐக்கிய நாடுகள் சபையினதும் கூடுதல் பொருளாதாரத் தடைகள் எம்மை ஒன்றும் செய்யா" இவ்வாறு தெரிவித்தது வடகொரியா.

உலக நாடுகளின் எதிர்ப்பையும், பன்னாட்டு விதிமுறைகளையும் மீறி வடகொரியா அவ்வப்போது ஆயுத மற்றும் அணுவாயுதச் சோதனைகளை நடத்தி வருகிறது. கடந்த மாதத்தின் இறுதிப் பகுதியில் சக்தி வாய்ந்த கண்டம்விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைச் சோதனையை நடத்தியது. இதையடுத்து அவசரமாகக் கூடிய ஐக்கிய நாடுகள் சபை வடகொரியாவுக்கு கூடுதல் தடைகளை விதித்தது.

2006ஆம் ஆண்டுக்குப் பின்னர் வடகொரியா மீது கொண்டுவரப்படும் ஏழாவது தடையுத்தரவாக இது அமைந்தது. வடகொரியாவின் முக்கிய மூன்று ஏற்றுமதிகளான நிலக்கரி, இரும்பு, கடலுணவு ஆகியன தற்போது முடக்கப்பட் டுள்ளன. இதையடுத்தே இவ்வாறு தெரிவித்தது வடகொரியா.

"எங்கள் அணு ஆயுதச் சோதனைகள் பற்றி எவரிடமும் பேச்சு நடத்த மாட்டோம். எத்தகைய எதிர்ப்பு வந்தாலும் எங்கள் முடிவிலிருந்து நாங்கள் பின்வாங்க மாட்டோம். மேலும் அமெரிக்கா எங்களிடமிருந்து அதிக தொலைவில் இருப்பதால் பாதுகாப்பாக இருப்பதாக நினைத்துக் கொண்டு இருக்கிறது. ஆனால் அது மிகப் பெரிய தவறு.


இந்த முடிவில் அமெரிக்காவும் அதற்கு உடந்தையாக உள்ள நாடுகளும் எமக்குப் பதில் சொல்ல வேண்டும்" என்று வடகொரியா மேலும் குறிப்பிட்டது. (ம)

## ஒரே நாளில் மலேசியாவில் 400 பேர் கைது!

கோலாலம்பூர், ஓக. 9

தீவிரவாதத் தடுப்புச் சோதனையில் ஈடுபட்ட மலேசியப் பொலிஸார்நேற்றுமுன்தினம் மட்டும் சுமார் 400 பேரைக் கைது செய்தனர்.

மலேசியத்தலைநகர் கோலாலம்பூரில் நேற்று தீவிரவாத தடுப்புச்சோதனையில் பொலிஸார் ஈடுபட்டனர். இந்தத்திடீர் சோதனையில் பங்களாதேஷ், பாகிஸ்தான் மற்றும் இந்தியாவைச் சேர்ந்த சுமார் 400 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் இருந்து போலி ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. ஈராக், மற்றும் சிரியா நாடுகளில் செயற்பட்ட ஆயுததாரிகள் ஊடுருவியுள்ளனர் என்றுகிடைத்த தகவலை அடுத்தே இந்தச் சோதனை நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)



## வடகொரியாவை மேலும் இறுக்க ஆஸி. வலியுறுத்தல்

கான்பெரா, ஓக. 9

வடகொரியா மீது விதிக்கப்பட்டுள்ள தடைகளை மேலும் இறுக்க வேண்டும் என்று ஆஸ்திரேலியா அயலுறவுத்துறை அமைச்சர் குறிப்பிட்டார். தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பான ஏசியானின் பாதுகாப்புக் கூட்டம் பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. ஆஸ்திரேலிய அயலுறவுத் துறை அமைச்சரும் கலந்து கொண்டார். கூட்டம்நிறைவடைந்த பின்னர் விடுத்த அறிக்கை ஒன்றிலேயே அவர் வடகொரியா விவகாரங்கள் பற்றிச் சுட்டிக்காட்டினார்.

வடகொரியா தற்போது கையாண்டு வரும் அச்சுறுத்தும் மற்றும் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளை உடனடியாகக் கைவிட அனைத்து நாடுகளும் அந்த நாட்டுக்கு அதிக நெருக்கடி கொடுக்க வேண்டும். வடகொரியா மீது கூடுதல் தடைகள் விதிக்கப்பட வேண்டும் என அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

புதன் பொய்கை
09 ஒகஸ்ட் 2017 புதன்கிழமை

**பொன் மொழி**

தனது மனதை மேம்படுத்தி பயன்படுத்த முடியாத ஒருவன், அதைப் பயன்படுத்துகின்ற மற்றொருவரின் அடிமைத்தனத்திற்கு கட்டுப்பட்டவனாக இருக்கிறான்.

– மார்கஸ் கார்வே

# பாரம்பரிய கலை வடிவங்கள்

## வாழ்வியலின் ஒழுங்குமுறைப் பதார்த்தங்கள்

செ.தமிழ்நம்பி

இசையும் நடனமும் மிகப் பழமையான காலங்கள் முதலே மனித உணர்வுகளின் வெளிப்பாடுகளாக விளங்கியும், வெளிப்பட்டும் வந்துள்ளன. இசைக்கு முந்தியது நடனம் என்றே கூறுகின்றனர்.

அனைவருமே பாடும் பொழுதும், ஆடும் பொழுதும் தங்களது நெஞ்சையழுத்தும் உணர்ச்சி நிலைகளில் இருந்து விடுதலை பெறுகின்றனர். ஆரம்பகாலத்தில்தொழில் முறையான ஆட்டக்காரர்கள்இருந்தார்கள் எனக் கூறமுடியாது. எல்லாமே 'சமூக நடனம்' என்ற அளவிலேதான் இருந்தது.

கிராமிய இசை என்பது நாட்டுப்புற மக்களால் காலம் காலமாக வளம்படுத்தப்பட்டு வருகின்றது.

கிராமப்புற மக்களின் வாழ்க்கை முறையோடுகிராமிய இசைபிரிக்கமுடியாதவாறு பின்னிப் பிணைந்துள்ளது.

கிராமப்புறமக்கள்தண்ணீர் சுமந்துசெல்கிற போதும், நெல் குற்றும் போதும், உழவு சம்பந்தமான செயல்களைச் செய்யும்போதும் கிராமிய இசையும், ஆட்டமும் இடம் பெறாமல் இருப்பதில்லை. அவர்கள் ஓய்வாக இருக்கும்போது தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்த 'புல்லாங்குழல்' வாசிக்கின்றனர்.

திண்ணையில் உட்கார்ந்துகொண்டு உடுக்கையடித்து தங்களுக்குப் பிடித்தமான கிராமியத் தெய்வத்தை நினைந்து பாட்டுப் பாடுகின்றனர். தப்பு, திடும், நகார், பம்பை, உறுமி, கிணுக்குச்சட்டி, கஞ்சிரா, மேளம், மண்மேளம்போன்ற இசைக்கருவிகளை வாசிக்கும் வழக்கத்தை இவர்கள் இன்றும்கொண்டுள்ளனர். கிராமிய இசையையும், நாட்டுப்புற இசைக்கருவிகளையும்அழியாமல்பாதுகாத்துவருகின்றனர்.







கிராமப்புற மக்கள் தண்ணீர் சுமந்து செல்கிறபோதும், நெல் குற்றும் போதும், உழவு சம்பந்தமான செயல்களைச் செய்யும் போதும் கிராமிய இசையும், ஆட்டமும் இடம் பெறாமல் இருப்பதில்லை. அனைவருமே பாடும் பொழுதும், ஆடும் பொழுதும் தங்களது நெஞ்சையழுத்தும் உணர்ச்சி நிலைகளில் இருந்து விடுதலை பெறுகின்றனர்.

### கிராமிய இசை

இசையில் இரு வகைப்பாடுகள் உண்டு. அவை கிராமப்புறம்சார்ந்த இசை எனவும் சாஸ்த்திரீய இசை எனவும்குறிப்பிடப்படுகின்றன.

கிராமிய இசை கிராமப் புறம் சார்ந்த மக்களிடம் தோன்றி வழங்கி வருவது எனலாம். மரபு வழியாகப் பரவி வரும் இசையையும், செவி வழியாகப் பரவி வரும் இசையையும் 'நாட்டுப்புற இசை' என்று பொதுவாகக் கூறிக்கொள்ள முடியும்.

இதற்கு மாறானதே சாஸ்த்திரீய இசை. இது கற்றோர் வழி மரபினது எனப்படுகிறது. திட்டமிடல் தன்மையும், கட்டுக்கோப்பும் கொண்டது. பாடுவோர், கேட்போர் என்ற நிகழ்த்துமுறையில் இது கற்றோரைத் தளமாகக் கொண்டது. சாஸ்த்திரீய இசை பெரும்பாலும் அரங்குகளில் நிகழ்கிறது. நாட்டுப்புற இசை பெரும்பாலும் திறந்த வெளி அரங்குகளில் நிகழ்த்தப் பெறுகின்றது. பாடுவோர், கேட்போர் என்ற நிலையில் இது கிராமப்புற மக்களைத் தளமாகக் கொண்டு விளங்குகிறது.

### கிராமிய நடனங்கள்

கிராமிய ஆட்டங்கள் கிராமப்புறமக்களால்உருவாக்கப்பட்டவை. அவர்கள் உழைப்பின் களைப்பிலிருந்து விடுபட கிராமிய நடனங்களை ஆடி வருகின்றனர்.

கரகம், காவடி, பொய்க்கால் குதிரை, கும்மி, ஒயிலாட்டம், முதலியன தமிழ்நாட்டின் பாரம்பரியக் கலை வடிவங்கள் ஆகும். கிராமியக் கலைகள் கிராமிய மக்களின் வாழ்க்கை எனலாம். அவை இன்ப துன்பங்களைக் தெளிவான மொழியில் விளக்குகின்றன. நடனங்கள் மிக எளிமையானவையாகவும், கலை மதிப்புடையவையாகவும் விளங்குகின்றன.



### கரகாட்டம்

சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்ற குடக்கூத்திலிருந்தே இன்றைய 'கரகம்' தோன்றியிருக்க வேண்டும். கிருஷ்ண பகவான் ஒருமுறை மண்ணாலும் உலோகத்தாலும் செய்யப்பட்ட குடத்தைத் தலையில் வைத்துக் கொண்டு நடனமாடினார் என்று புராணக் கதைகள் எடுத்துரைக்கின்றன.

கிராமப்புறங்களில் காளியம்மன், மாரியம்மன் முதலிய கிராமிய மணம் கமழும் தெய்வவிழாக்களின்போது ஆற்றங்கரைகளிலிருந்தோ, நதிக் கரைகளில் இருந்தோ சக்தி கரகத்தை மலர்களால் அலங்கரித்துக் கொண்டு வருவர். 'சக்திகரகம்'எடுத்துவருபவர் சாமியாட்டம் ஆடிக்கொண்டு வருவார்.

தொடக்க காலத்தில் 'கரகம்' வழிபாட்டோடும், சடங்கோடும் தொடர்புடையதாக இருந்தது. காலப் போக்கில் சடங்கு நிலை யிலி ருந்துவிடுபட்டு சமூக நடனமாக, தொழில்முறை ஆட்டமாக மாற்றம் பெற்றதுஎனலாம். ஏனையகிராமியக்கலைகளைப்போலவே கிராமப்புற மக்கள் தங்கள் உற்சாகத்தை வெளிப்படுத்தவும், பொழுது போக்கிற்காகவும் கரகாட்டத்தை ஆடி வருகின்றனர் எனச் சொல்லலாம்.

### கரகாட்ட அமைப்பு முறை

பெரும்பாலான கிராமப்புற ஆட்டங்கள் வட்ட வடிவ அமைப்பு முறையிலேயே நிகழ்த்தப் பெறுகின்றன. அதைப் போலவே கரகாட்டமும் வட்ட வடிவு அமைப்பு முறையிலேயே நிகழ்த்தப் பெறுகின்றது. கோவில் வளாகங்களிலும், திறந்த வெளி அரங்குகளிலும் கரகாட்டம் இடம் பெறுகின்றது. பார்வையாளர்கள் வட்டமாகச் சூழ்ந்துகொண்டுகரகாட்டத்தைக்கண்டுகளிக்கின்றனர்.

கரகாட்டத்தில் நையாண்டி மேளம் முக்கியம் இடம் வகிக்கின்றது. நையாண்டி மேளம் இசையைத் தொலை தூரத்தில் கேட்டாலே அங்கு கரகாட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பதை அறிந்து கொள்ளலாம்.

தற்காலத்தில் கரகாட்டத்தோடு பல துணை ஆட்டங்களும் சேர்ந்து நிகழ்த்தப்பட்டு வருகின்றன. கரகம், குறவன் குறத்தி, காவடியாட்டம், மயிலாட்டம், மாடாட்டம் என்ற முறையில் கரகாட்டம் கிராமப் புறங்களில் நிகழ்த்தப் பெற்று வருகின்றது.

ஆக, கலை வடிவங்கள் மக்களோடு ஒன்றித்துக் காணப்படுகின்றன. அவர்களின் அன்றாட செயல்நிலைகளை ஆத்மார்த்தமாக ஊடாடிக்கொள்கின்ற அமைதியின் வடிவங்களாக நிலைபெறுகின்றன. துணைநின்று வாழ்வியலைப் பதப்படுத்துகின்றன.

# வாழவைக்கும் வாழை மரம்!

பரமநாயகம் கேசவதாசன்



வாழை மரத்தின் அடி முதல் நுனி வரை அனைத்துமே எமது வாழ்வியலோடு கலந்தவை. அவற்றின் ஒவ்வொரு பாகங்களுமே மிகமிகச் சிறந்தவை. வீட்டு விழாக்களில் வாழைக்கன்று மற்றும் வாழைக்கம்பங்களை நடுவதில் தொடங்கி, விருந்து பரிமாற வாழை இலையைப் பயன்படுத்துவதுவரை அனைத்துக்குப்பின்பும் மருத்துவக்காரணங்கள் உண்டு. இதனை அறிந்த எமது முன்னோர்கள், வாழை மரத்தின் பயன்களை முழுதும் அனுபவித்தனர். நோயற்று வாழ்ந்தனர்.

### விருந்தோம்பலில் வாழையிலை...

வாழையிலையில் சாப்பிடுவதால் உடலுக்குப்பலநன்மைகள் ஏற்படுகின்றன. அதுமட்டுமல்ல, நாம் சாப்பிட்டு முடித்தபின் வாழையிலை கால்நடைகளுக்கு உணவாகவோ, நிலத்துக்கு உரமாகவோ மாறிவிடுகிறது. ஆகவே, வாழையிலையில் சாப்பிடுவதை நாம் வாடிக்கையாக்கிக்கொள்ள வேண்டும். உணவுச் சங்கிலியில், முதல் உணவே இலைகள்தான். எல்லாத்தாவரங்களும் இலைகளை உடையவை. இலைகள் உயிரினங்களின் முக்கிய உணவாக இருக்கின்றன. இலையில் உள்ள பச்சையம் சூரிய ஆற்றலைஉள்வாங்கிஅதனைஉயிராற்றலாகவும் உணவாகவும் மாற்றுகிறது. அந்த வகையில், தமிழர்தம் வாழ்வியலோடு



இணைந்த இலையாக வாழையிலை இருக்கிறது. ஆலய அன்னதானம் மற்றும் பொது விழாக்களில் விருந்தினருக்கு உணவு பரிமாற வாழை இலையைத்தான் இன்றளவிலும்பயன்படுத்திவருகின்றனர். எமது முன்னோர் உணவு பரிமாறுவதற்கு வாழையிலையைத் தேர்ந்தெடுத்ததற்கான காரணம், 'ஆன்டி ஆக்சிடன்ட்' அதில் அதிகளவில் இருப்பதேயாகும். இதனால் செல் (கலம்) சிதைவு ஏற்படாமல் இளமையுடன் இருக்க முடியும். அத்தோடு மன அழுத்தம், புற்றுநோய் மற்றும் இதய நோய்களும் தடுக்கப்படுகின்றன. வாழையிலையில் இருக்கும் Polyphenol, செல்களில் உள்ள டி.என். ஏவை கதிர்வீச்சுகளிலிருந்து பாதுகாக்கிறது.

சிறுநீரகக் கல்லுக்கு வாழைத் தண்டுசாறுஉகந்ததுஎன்பதுபோல, வாழையிலையும் சிறுநீர கம் மற்றும் விதைப்பை தொடர்புடைய பிரச்சினைகளிலிருந்து எம்மைப் பாதுகாக்கிறது. வாழையிலையில் உள்ள பச்சையம் நோய் எதிர்ப்பு சக்தியாகவும் விளங்குகிறது.

சூடான சாப்பாட்டை வாழை இலையில் பரிமாறும்போது அந்த சூட்டில் இலை லேசாக வெந்து இலையின் பச்சையத்தில் உள்ள Polyphenol சாப்பாட்டில் கலந்துவிடும். இதன் மூலம் அதிலுள்ள உயிர்ச்சத்துஏ, சிட்ரிக் அமிலம், கல்சியம் மற்றும் கரோட்டின் ஆகியவை எமக்குக்கிடைக்கின்றன.

### வாழையிலையின் சிறப்பம்சம்...

வாழையிலையின் சிறப்பம்சமே அதன் குளிர்ச்சித் தன்மைதான். மரத்தில் இருந்து அறுத்தெடுக்கப்பட்ட பின்பும் கூட வாழையிலை ஒட்சிசனை வெளியிட்டுக்கொண்டே இருக்கும். வாழையிலையில் வைக்கப்படும் கீரைகள், காய்கள், பழங்கள், பூக்கள் ஆகியவை விரைவில் வாடாது. பூமாலைகள் கூட வாழையிலை யில் சுற்றிவைக்கப்படுவதை நாம் அறிவோம்.

அதேபோன்று, தீக்காயங்களுக்கு ஆளானவர்களை வாழையிலையில்தான் படுக்க வைப்பார்கள். வாழையிலையின் குளிர்ச்சியும் அது வெளியிடும் ஒட்சிசனும் தீப்புண்ணுக்கு இதமாகவும் விரைவாகக் காயங்களை ஆற்றக்கூடியதாகவும் இருக்கிறது. வாழையிலை சருமத்தில் ஒட்டாது. அத்துடன், நோய்த் தொற்றும் ஏற்படுத்தாது. இதனால், தீக்காயங்கள் ஏற்பட்டவர்களுக்கு இது அருமருந்தாகப் பயன்படுகிறது.

### வேலியாக வாழையிலை...

கிராமத்து மக்களின் வாழ்வியலில் முதன்மையிடம் பிடிக்கும் வாழையிலை, வேலி அடைப்பதற்கும் பயன்படுவது அதன் மற்றொரு சிறப்பம்சம்.

வாழை குலைகளை ஈன்றதும், குலையை வெட்டிய பின் அதன் ஏனைய பாகங்களை ஒவ்வொரு தேவைக்காகவும் பயன்படுத்துவோம். அதில் ஒன்றுதான் இலைகளின் வேலிப் பயன்பாடு. இது சூழலுக்குப் பாதுகாப்பானதுடன், செலவும் குறைந்தது. நேர்த்தியாக அடைத்தால், வேலியும் அழகாக இருக்கும். வாழையிலை மட்டுமல்லாது, வாழை மடல்களைக் கொண்டும் சிலர் வேலி அடைப்பதுண்டு. இதுவும் சூழலுக்குப் பாதுகாப்பானதுடன், அழகானதும் கூட.பொருட் செலவும் இல்லை.

### பூ, காய், கனி இவற்றின் பயன்பாடுகள்...

பூ முதல் கனிவரை மனிதர்களால் உணவுக்காகப் பயன்படுத்தப்படும் தாவரம் வாழை மரம். வாழையில் பல இனங்கள் இருந்தாலும், அந்தந்த இனத்துக்கேற்ப அவை தரும் பூக்களும் சிறப்பானவை. பொதுவாக, வாழைப்பூவில் உயிர்ச்சத்து 'பி' உண்டு. பெண்களின் கர்ப்பப்பைக்கு இது மிகுந்த பலமளிக்கிறது. நீரிழிவு நோயாளிகளுக்கும் இது சிறந்தது. மலட்டுத் தன்மையை நீக்க வல்லது. மாதத்தில் இரண்டு, மூன்று தடவைகள் இதனை உணவில் சேர்த்துக்கொள்வது பயனளிக்கும்.

இதேபோன்றுவாழைக் காயும் கறியாக்க, பொரியல் செய்ய, சம்பல் செய்ய என்று உணவில் பயன்படுகிறது. இது விசேட தினங்களில் உணவில் சேர்த்துக்கொள்ளப்டும். இதிலும் பலவகைச் சத்துக்கள் உண்டு. அதேபோன்று, 'ஏழைகளின் அப்பிள்' என்று அழைக்கப்படும் வாழைப் பழமும் மிகுந்த பயனளிக்கும் உணவுப்பொருள். இது மிகக் குறைந்த விலையில் கிடைக்கும். வாழையின் ஒவ்வொரு இனத்திலுள்ள பழங்களும் ஒவ்வொரு போசனையைக் கொண்டிருந்தாலும், இதில் பொதுவாக உயிர்ச்சத்து 'ஏ' உள்ளது. பொட்டாசியம் சத்தும் இதில் செறிவாக உள்ளது. இரண்டு நாட்களுக்கு ஒருமுறை இதனை உட்கொண்டு வந்தால், சிறப்பு.

### வாழை மடலின் பயன்பாடுகள்...

வாழையிலையைப் போன்றே வாழை மடலும் பல தேவைகளுக்காகப் பயன்படுகின்றது. குறிப்பாகப் பச்சை வாழை மடல் அல்லது தண்டு, பூமாலை வாடாமல் இருப்பதற்கு இது பயன்படுகின்றது. அத்துடன், கற்பூர தீபம் ஏற்றுவதற்கும் இது பயன்படுகின்றது. இது காய்ந்தவுடன், விருந்தோம்பலுக்குப் பயன்படுத்தப்படுகிறது. இதில் உணவுண்பதும், வாழையிலையில் உண்பது போன்று சுவையாக இருக்கும். உடலுக்கும் அநேக நன்மை பயக்கும்.

இதன் மூலம் பெறப்படும் வாழைநார்கள், பூமாலை கட்டுவதற்கும் ஏனையவற்றைக் கட்டுவதற்குக் கயிறாகவும் பயன்படுகிறது. கிராமத்துப் பெண் பிள்ளைகள், தலைவாரிப் பின்னி வாழை நாரினால் கட்டுவது வழக்கம். அவ்வாறு செய்தால், நீண்ட கருங்கூந்தல் வளரும் என்ற நம்பிக்கை அவர்கள் மத்தியில் இருந்தது. இன்றும் இந்த நம்பிக்கை கிராமப்புறங்களில் இருப்பதைக் காண முடிகிறது.



### பயிர்களின் களமாக மரணித்த வாழை...

நகர்ப்புறங்களில் போதிய நிலவசதி இருப்பதில்லை. அத்தகையவர்கள், சாடிகளிலும் மேல்மாடிகளிலும் அலங்காரச் செடிகளையும் பயன்தரு செடிகளையும் நடுகை செய்கின்றனர். மேல் மாடிகளில் பார்த்தால், அநேகமான செடிகள் தொங்கு நிலையில் காணப்படும். இவை அழகைக் கொடுப்பதுடன், சூழலுக்கு வளத்தையும் அளிக்கின்றன. இவற்றைப் போலவே, குலை ஈன்றபின் வெட்டப்படும் வாழை மரத்தினை இரண்டாக்கி அதில் மண்ணிட்டு நிரப்பி சிறு சிறு தாவரங்களை நடுகை செய்யலாம். குறிப்பாககத்தரி, வெண்டி, மிளகாய் முதலான பயன்தரு செடிகளை நடுகை செய்யலாம். வாழை மரத்தில் நடுகை செய்யப்படும் தாவரங்களுக்குத் தண்ணீரும் அதிகளவில் ஊற்றத் தேவையில்லை. ஏனென்றால், அந்த மரம் மிகுந்த ஈரலிப்பைக்கொண்டது. அத்துடன், ஊற்றும் தண்ணீரையும் சேமித்து வைத்திருந்து செடிகளை வாடவிடாது பாதுகாக்கும்.


### எதுவும் கழிவல்ல...

இவ்வாறு வாழவைக்கும் வாழை மரத்தின் பாகங்கள் எதுவுமே கழிவல்ல. மனிதப் பயன்பாடு தவிர்ந்த ஏனையவை அனைத்தும் சிறந்த பசளைகளாகப் பயன்படுகின்றன. இந்தப் பசளைகள் சூழலுக்குத் தீங்கு பயக்காதவை. தலை முதல் இலை வரை தலைமுறை தலைமுறையாய் மனிதர்களை வாழவைத்துக்கொண்டிருக்கும் வாழை மரத்தின் அநேக பயன்பாடுகளை இன்றைய இயந்திர உலகம் மறந்து வருகின்றது. ஆதலால், இதனை நினைவுறுத்த வேண்டியது எமது கடமை.

> பூ முதல் கனி வரை மனிதர்களால் உணவுக்காகப் பயன்படுத்தப் படும் ஒரே தாவரம் வாழை மரம். வாழையில் பல இனங்கள் இருந்தாலும், அந்தந்த இனத்துக்கேற்ப அவை தரும் பூக்களும் சிறப்பானவை. நீரிழிவு நோயாளிகளுக்கும் இது சிறந்தது. மலட்டுத் தன்மையை நீக்க வல்லது. மாதத்தில் இரண்டு, மூன்று தடவைகள் இதனை உணவில் சேர்த்துக் கொள்வது பயனளிக்கும்.

# இலக்குமணன்

## இராமனின் மறுவடிவம் கூடிய தியாகத்தின் அர்த்தப் படிகம்



இரா. நிஷாந்தன்

இராமாயணத்தில் பல கதாபாத்திரங்கள் தனித்துவம் பெற்றிருந்தாலும் தியாகத்தின் திருவுருமாக சித்தரிக்கப்படும் அர்த்தத்தின் வடிவங்களைப் பெற்று விளங்கியவன் இலக்குமணன். சிறு வயது முதலே இராமனின் நிழல் உருவம் போல இணைபிரியாது கலந்திருந்தான்.இதன் காரணம் கொண்டே இராமனின் வெளியே நடமாடும் உயிர் என இலக்குமணன் சிறப்பிக்கப்படுகிறான்.சகோதர பாசத்தின் மேலாண்மை என்பது திருமணத்தின் பின்பான காலத்தில் பொதுவாகக்குறையும்என்றேஆன்றோர்குறிப்பிடுகின்றனர். ஆனாலும் திருமணத்துக்குப் பின்பும் இலக்குமணனின் சகோதர பாசம் குறைவடையாத தன்மைகளைக் காணலாம். தசரதன் கைகேயிக்குத் தந்த வரத்தால் இராமன் வனவாசம் செல்ல ஆயத்தமான போது "நின் பிரிவினும் சுடுமோ பெருங்காடு" என்று கூறி சீதையும் இராமனுடன் இணைந்து வனவாசம் செல்கிறாள். இலக்குமணனும் அவர்களுடன் இணைந்து செல்லத் தயாராகிறான்.

**வன வாசம்**

வனத்திற்குத் தன்னுடன் வர வேண்டாமென்று இராமன் சொன்னதற்கு இலக்குமணன் "நீயில்லாத இடத்தில் நான் எப்படி இருக்க முடியும்" என்று அண்ணனிடம் கேட்கிறான். "நீர் இருந்தால் தான் மீன் இருக்க முடியும். அதே போல் நானும் சீதையும் நீ இருந்தால் தான் இருக்க முடியும்" என்று கூறுகிறான்.

*"நீர் உள எனில் உள மீனும் நீலமும்*
*பார் உள எனில் உள யாவும் பார்ப்புறின்*
*நார் உள தனு உளாய் நானும் சீதையும்*
*ஆர் உளர் எனில் உளேம் அருளுவாய்"* என்கிறான்.

திருமணமாகி அதிக நாள்கள் ஆகவில்லை. பிரியக் கூடிய காலம் சில நாள்கள் அல்ல. பதினான்கு வருடங்கள். அப்படி இருந்தும் மனைவியை விட்டு அண்ணனைப் பின் தொடர்ந்து இலக்குமணன் காட்டுக்குச் சென்றான். அப்படிச் சென்றவன் ஒரு இளவரசனைப் போல் இருந்து விடவில்லை. அவன் செய்து கொண்ட சேவைகள் சாதாரணமானதல்ல. பர்ணசாலை அமைக்கவும்,காட்டில் பாதைகள் ஏற்படுத்தவும் அவன் உழைத்ததைப் பார்த்து இராமனே வியந்து போனான்.


**இலக்குமணன் கொண்ட இயல்பின் புதுமை**

"தம்பி நீ என்னோடு இணைபிரியாமல் இருந்தவனாயிற்றே. சாலையமைத்தல் முதலியவற்றை எனக்குத் தெரியாமல் என்றைக்குப் பழகினாய்" என்று கண்ணீர் சொரிய இராமன் இலக்குமணனைக் கேட்கிறான். இவைதவிர வனவாச காலம் முழுவதும் இராமனுக்கு இலக்குமணன் ஒரு சேவகனாகவே இருந்தமை குறிப்பிடத்தக்கது. பதின் நான்கு வருடங்களும் தன் தூக்கத்தை தியாகம் செய்து அண்ணன், அண்ணியாரின் நலனைக் காத்திருந்தான். அவர்களுக்குக் காவலாக இருந்தான்.

இராமனைக் காண வந்த பரதன் குகனிடம் உரையாடிக்கொண்டிருந்த போது இலக்குமணனைப் பற்றி குகன் பெருமையாகச் சொல்கிறான். "இராமபிரானும் சீதையும் உறங்கும் போது வில்லை ஊன்றிக் கொண்டு இரவெல்லாம் கண்களைக் கூட இமைக்காமல் காவல் காத்து நின்றான்" என்று தெரிவிக்கிறான்.

*"அல்லை ஆண்டு அமைந்த மேனி அழகனும் அவளும் துஞ்சவில்லை ஊன்றிய கையோடும் வெய்து உயிர்ப்போடும், வீரன்*
*கல்லை ஆண்டு உயர்ந்த தோளாய்*
*கண்கள் நீர் சொரியக் கங்குல் எல்லை காண்பளவும் நின்றான் இமைப்பிலன் நயனம்"* என்று குறிப்பிடுகிறான்.

"இமைப்பிலன் நயனம்" என்ற இரு சொற்களின் ஊடு இலக்குமணனின் காவலைப் பற்றி கம்பன் சொல்கின்ற நயம் அற்புதமானது.



**கீழ்படிவுடைய பணியாளன்**

இலக்குமணன் தன் அண்ணனின் ஆணையினை வேத வாக்காகக் கருதி செயலாற்றுபவன். சீதை இருக்கும் இடத்தை அறிந்து சீதையை மீட்பதற்கு உதவி புரிவேன் எனக் கூறிச் சென்ற சுக்ரீவன் அதனை மறந்து காலம் கடத்தியமை கண்டு இராமன் தன் தம்பி இலக்குமணனிடம் அவன் உளக் கருத்தினை அறிந்து வா என அனுப்புகின்றான்.அவனும் செல்கிறான்.கிஷ்கிந்தைக்கு வந்த போது அனுமனின் உபாயப்படி வாலியின் மனைவி தாரை இலக்குமணனை நாடி "நீ உன் அண்ணன் திருவடி களை சிறிது நேரமும் பிரிந்திருக்காதவன். இன்று இராமனைப் பிரிந்து இவ்விடம் வரக் காரணம் யாது" என வினவு கின்றாள். இதனை "ஐய நீ ஆழி வேந்தன் அடியிணை பிரிகிலாதாய் எய்தியது என்னை என்றாள்" எனக் கம்பர் குறிப்பிடுகின்றார்.

இராமனுக்கும் தன் தம்பி இலக்குமணன் மேல் இருந்த பாசம் அலாதியானது. இந்திரஜித்துடன் போர் புரிய இலக்குமணனை அனுப்பிய போது அவன் மனதில் ஏற்பட்ட வேதனை என்பது முன்பு விஸ்வாமித்திரனுடன் இராமனை அனுப்பும் போது தசரதன் மனதில் ஏற்பட்ட வேதனையை ஒத்திருந்தது என்கிறான் கம்பன்.

> பிறந்தது முதல் பருவநிலை அடைந்து திருமணம் முடிந்த பின்னரும் சகோதர பாசத்தின் உயர்வாய்,தனித்துவப் பேறாய் இலக்குமணன் விளங்கினான். இராம,இராவணப் போர் முடிந்து அயோத்தி திரும்பும் வரையில் புதிய மண வாழ்க்கையையும்,அரண்மனை வாழ்க்கையின் சௌகரியங்களையும், தனதான நலன்கள் அனைத்தையும் இலக்குமணன் தியாகம் செய்து கொண்டான்.அண்ணனின் காவலனாய், ஏவலனாய்,நிழலாய் இருந்தான் இத்தகு சிறப்பு நிலைகளை கண்டுகொண்ட இலக்குமணன் இணையற்றவன். சகோதர பாசத்தின் வழியே தனித்துவ இயல்புகளின் கனிவினை பேறு செய்கிறான்.

**இராமன் கொண்ட கரிசனை**

இந்திரஜித்தின் நாகாஸ்திரத்தால் மூர்ச்சையாகி விழுந்த இலக்குமணனை பார்த்து வால்மீகியின் இராமன் இப்படிப் புலம்புகிறான் "தேடிப் பார்த்தால் சீதையைப் போன்ற மனைவி கிடைக்கலாம். ஆனால் இலக்குமணனைப் போன்றமகாவீரனானசகோதரன்எப்படிக்கிடைப்பான்...?" "என்னை ஓய்வெடுக்க வைத்து எனக்குச் செய்ய வேண்டியதை எல்லாம் செய்து நீ ஓய்வில்லாமல் இருந்தாயே. வெயில் என்று பார்க்காமல் காவலுக்கு நின்று களைத்துப் போனாயே. அந்தக் களைப்புக்காகத் தான் இப்போது உறங்குகின்றாயா..? இந்த உறக்கத்தைத் துறந்து எழ மாட்டாயா..?" என கம்பனின் இராமனும் மூர்ச்சையாகி விழுந்த இலக்குமணனைக் கண்டு உருக்கமாகப் புலம்புகிறான்.

தவிர. "தந்தை இறந்த போதும் மனதிடத்தோடு இருந்தேன். அரசபதவியைத் துறந்த போதும் கவலையற்று இருந்தேன். நீ இருப்பதால் நான் தனியன் அல்லேன் என்றும் இருந்தேன். இப்போது நீயும் போய் விட்டாய். எனக்குச் சொல்ல வார்த்தைகள் இல்லை. இனி நான் வாழ மாட்டேன். நானும் உன்னுடன் வருகிறேன்" என்று இராமன் மனம் வருந்துகின்றான்.இலக்குமணன் மூர்ச்சை நிலையினின்றும் தெளிந்து எழுந்த போது இராமன் தன் உயிரையே திரும்பப் பெற்றது போல உணர்ந்தான்.

இவ்வாறு பிறந்தது முதல் பருவநிலை அடைந்து திருமணம் முடிந்த பின்னரும் சகோதர பாசத்தின் உயர்வாய்.தனித்துவப் பேறாய் இலக்குமணன் விளங்கினான். இராம.இராவணப் போர் முடிந்து அயோத்தி திரும்பும் வரையில் புதிய மண வாழ்க்கையையும்.அரண்மனை வாழ்க்கையின் சௌகரியங்களையும் தனதான நலன்கள் அனைத்தையும் இலக்குமணன் தியாகம் செய்து கொண்டான்.அண்ணனின் காவலனாய். ஏவலனாய் நிழலாய் இருந்தான் இத்தகு சிறப்பு நிலைகளை கண்டு கொண்ட இலக்குமணன் இணையற்றவன். சகோதர பாசத்தின் வழியே தனித்துவ இயல்புகளின் கனிவினை பேறு செய்கிறான்.





# 1983ஆம் ஆண்டுக்குப் பின்னர் களனிப் பல்கலைக்கழகத்தில் வீசியது தமிழ்க்காற்று...

களனிப் பல்கலைக்கழக மாணவர்களால் ஒழுங்கமைக்கப்பட்டிருந்த 'மதுகை' எனும் கலாசார நிகழ்வு அண்மையில் கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் களனிப் பல்கலைக்கழக மொழியியல் துறை பேராசிரியர் எஸ்.ஜே.யோகராசா, யாழ்பாணப் பல்கலைக்கழக நுண்கலைத் துறைப் பேராசிரியர்.திருமதி.ஏ.என். கிருஸ்ணவேணி, கலாபூசணம். வசந்தா வைத்தியநாதன், மூத்த எழுத்தாளர் கலாகீர்த்தி தெளிவத்தை ஜோசப், கொழும்புப் பல்கலைக்கழக விரிவுரையாளர் எஸ்.அதிரதன், களனிப் பல்கலைக்கழக மொழியியல் துறை விரிவுரையாளர் சேமமடுவூர் சிவகேசவன் முதலானோரும், கல்வியலாளர்கள், பழைய மாணவர்கள், ஆர்வலர்கள் உள்ளிட்ட நூற்றுக்கணக்கானவர்களும் கலந்து கொண்டனர்.

**தமிழ் மொழியில் கற்கை நெறிகள்**

களனிப் பல்கலைக்கழகத்தில் 1983ஆம் ஆண்டுக்கு முன்னர் தமிழ்த் துறை, இந்து நாகரிகத்துறை உள்ளடங்கலான தமிழ் மொழி மூலமான கற்கை நெறிகள் இருந்தன. யாழ். பல்கலைக்கழகத்தில் சிங்கள மொழி மூலமான கற்கைகள் நிறுத்தப்பட்டதன் பிரதி பலிப்பாக களனிப் பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழி மூலமான கற்கைகள் நிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. 1983 களின் பின்னர் கடந்த வருடம் ஆங்கில மொழியில் கற்றலைத் தொடருகின்ற குறைந்தளவிலான மாணவர்களின் ஒன்றிணைவில் 'களனியின் சாரல்' என்ற இலக்கிய சஞ்சிகை வெளியிடப்பட்டது. அந்தச் சஞ்சிகை வெளியீட்டுடன் கலை நிகழ்வுகளையும் நடத்தத் தீர்மானித்த மாணவர் சமுதாயம், அந்த நிகழ்விற்கு 'மதுகை' எனும் தூய தமிழ்ப் பெயரைச் சூட்டி நிகழ்வைச் சிறப்பாக நடத்தியிருந்தது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய பேராசிரியர்.எஸ்.ஜே.யோகராசாவின் உரை காத்திரமானதாக அமைந்திருந்தது. சுமார் 38 வருடங்களுக்கு மேலாகக் களனிப் பல்கலைக்கழக மொழியியல் துறையில், விரிவுரையாளராக,பேராசிரியராக, துறைத்தலைவராகப் பணியாற்றிவரும் இவரது உரை அவரது அனுபவம்சார்ந்து அமைந்ததுடன், தமிழ்ச் சமுதாயம் குறித்த ஏக்க நிலையையும் அது பிரதிபலித்தது. இலங்கைத் தமிழ் கலாசாரம், தமிழ் மொழி முதலானவை சவால்களிற்கு முகங் கொடுப்பதாகக் குறிப்பிட்டார். அத்துடன்,சமகாலத்தில் இலங்கையில் தமிழ் மொழியைக் கற்பித்தலில் காணப்படும் பிரச்சினைகளைச் சுட்டிக் காட்டினார். இரண்டாம் மொழியாகத் தமிழ் மொழியைக் கற்பித்தலில் காணப்படுகின்ற குறைபாடுகளைத் தெளிவுபடுத்திய பேராசிரியர், பொருத்தமற்றவர்களும், காத்திரமான தமிழ் அறிவினைக் கொண்டிராதவர்களும் தமிழ் மொழியைக் கற்பிப்பதனால் மாணவர்களிற்கு தகுந்த உச்சரிப்பும், விளக்கமும் கிடைப்பதில்லை எனச் சுட்டிக் காட்டினார். இதுவும் ஒருவகையில் தமிழ் மொழியின் பின்னடைவுக்குக் காரணியாக அமையக்கூடும் என்றார். இலங்கைப் பேச்சு வழக்குத் தமிழ் கொண்டிருக்கின்ற தனித்துவக் கூறுகள் ஆய்வுகளினூடாகக் கண்டறியப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட பேராசிரியர், அவற்றைச் சபையில் தெளிவுபடுத்தியிருந்தார். ஆங்கில மொழி மூலத்தில் கற்கும் மாணவர்களது ஒன்றிணைவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வைப் பாராட்டிய பேராசிரியர், "தமிழ் கலாசாரத்தை,விழுமியங்களை, தமிழ் மொழியைப் பாதுகாக்க வேண்டும்" என்ற உணர்வுபூர்வமான கோரிக்கையுடன் தனது உரையை நிறைவு செய்தார்.



**விருந்தினர்களின் உரைகள்**

இந்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்த பேராசிரியர்.திருமதி. ஏ.என்.கிருஸ்ணவேணி உரையில், தமிழ் மொழி மூலமான கற்றல் நடவடிக்கைகள் களனிப் பல்கலைக்கழகத்தில் தொடரப்பட்ட காலத்தில் களனிப் பல்கலைக்கழகத்தில் தாமும் பட்டம் பெற்ற மாணவர்களில் ஒருவர் என்பதனை உணர்வுபூர்வமாகச் சபையில் தெரிவித்தார். நீண்ட கால இடைவெளியின் பின்னர், தமிழ் மாணவர்கள் களனிப் பல்கலைக்கழகத்தில் தமிழ் நிகழ்ச்சிகளை ஒழுங்கமைத்திருப்பதைப் பாராட்டுவதாகக் கூறிய பேராசிரியர், மாணவர்களால் அரங்கேற்றப்பட்ட நிகழ்ச்சிகளின் சிறப்புக்களையும் சுட்டிக் காட்டினார்.



இந்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்த, கலாபூசணம் அருள்மொழி அரசி வசந்தா வைத்தியநாதன் அம்மையார், தமது உரையில்,'மதுகை' என்ற தமிழ்ச் சொல்லைத் தேர்ந்தெடுத்து மாணவர்கள் இந் நிகழ்வுக்கு சூட்டியிருப்பதனைப் பாராட்டியதுடன்,களனிப் பல்கலைக்கழக மாணவர்கள் அரங்கேற்றிய நிகழ்வுகளின் தனித்துவத்தைப் பாராட்டியிருந்தார்.

களனிப் பல்கலைக்கழகத்தின் பழைய மாணவியும், தற்போது வருகைதரு விரிவுரையாளராகக் கடமையாற்றுகின்றவருமான, திருமதி.எம்.ஜே.கைர்நிஷா தனது உரையில், மாணவர்களது நிகழ்ச்சியைப் பாராட்டியதுடன், மீண்டும் களனிப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறை உருவாக வேண்டும் என்று உணர்வு பூர்வமாகக் கூறினார்.







**சஞ்சிகை வெளியீடு**

கலாகீர்த்தி தெளிவத்தை ஜோசப் தலைமையில் 'களனியின் சாரல்' சஞ்சிகை வெளியிடப்பட்டது. தெளிவத்தை ஜோசப்பின் உரையானது,அவர் கொண்டிருந்த ஆழ்ந்த தமிழப் புலமையயைச் சபைக்குத் தெளிவுபடுத்தியது. பல்வேறுபட்ட இலக்கியச் செயற்பாடுகளில் தன்னை அர்ப்பணித்துள்ள இவர்,தான் சிறந்த சஞ்சிகைகளாகக் கருதும் சஞ்சிகைகளுள் 'களனியின் சாரல்' சஞ்சிகையும் உள்ளடங்கும் என்றார். அத்துடன் இந்தச் சஞ்சிகையின் தனித்துவம் குறித்தும் தெளிவுபடுத்தினார்.

சஞ்சிகையின் நயப்புரையைக் கொழும்புப் பல்கலைக்கழக விரிவுரையாளர்,எஸ்.அதிரதன் நிகழ்த்தியிருந்தார். இந்தச் சஞ்சிகை காத்திரமான முறையில் வெளிவந்துள்ளது என அவர் சுட்டிக் காட்டினார். கவிதை,சிறுகதை,கட்டுரை, நேர்காணல் என பல்வேறுபட்ட ஆக்கங்களைச் சுமந்து வெளியான இந்தச் சஞ்சிகையின் சிறப்பம்சங்கள் யாவற்றையும் தெளிவாக எடுத்துரைத்திருந்தார். பேராசிரியர்.சி.மௌனகுருவின் நேர்காணலும், இந்தச் சஞ்சிகையில் உள்ளடங்கியிருப்பது சிறப்பம்சமாகும். பேராசிரியரது பதில்கள் காத்திரமானவையாகவும், இளந் தலைமுறையினர்க்கு வழிகாட்டுவதாகவும் அமைந்துள் ளன. தொழிலதிபர் ஐ.ஏ.என் கரன், முத்து நெடுமாறன், தினேஷ் கனகரட்ணம் ஆகியோரது நேர்காணல்கள் சஞ்சிகையில் இடம்பெற்றுள்ளமை பல்வேறுபட்ட ஆளுமைகளை இளைய சமுதாயம் அறிவதற்கு பேருதவியாய் அமைந்துள்ளது. அத்துடன்,'அமானுஸ்யப் புனைவுகளி லிருந்து நாகர்களை விடுவித்தல்' என்ற விரிவுரையாளர், சேமமடுவூர் கேசவனது ஆய்வுக் கட்டுரை இதுவரை காலமும் நாகர்களை ஓரங்கட்டிய புனைவுகளைக் களைந்து அவர்களைத் தமிழர்களாகக் கட்டமைக்க முயற்சிப்பது டன், அவர்களை ஓரங்கட்டிய படைப்புக்களது இருட்டடிப்பை வெளிச்சம் போட்டுக் காட்டுவதாய் அமைவதும் குறிப்பிடத்தக்கது என்றார்.

பரத நாட்டியம், கவிதை, குழுப்பாடல், நாட்டிய நாடகம், பட்டிமண்டபம் முதலான பல நிகழ்வுகள் இந்ந நிகழ்வினை அணி செய்திருந்தன. ஒட்டு மொத்தமாக மீண்டும் தமிழ்க் கலாசாரத்தைக் களனிப் பல்கலைக் கழகத்தில் நிலை கொள்ளச் செய்யும் குறிகாட்டியாக இந்த நிகழ்வு அமைந்திருந்தது.

# ஓகஸ்ட் மாத பலன்

## கடகம்

புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயில்யம்

அடுத்தவர் செய்யும் இடையூறுகளையும் உங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் சாமர்த்தியம் உடைய கடக ராசியினரே! இந்த மாதம் எடுத்த காரியத்தை எப்படியும் செய்து முடித்து விடுவீர்கள். சுப செலவுகள் ஏற்படும். வேலை காரணமாக வீட்டை விட்டு வெளியில் தங்க நேரலாம். திட்டமிடுவதில் பின்னடைவு ஏற்படும். பணவரவு எதிர்பார்த்தபடி இருக்கும். பெரியோர் நேசம் கிடைக்கும். வாகன யோகம் உண்டாகும்.

தொழில் வியாபாரம் வாக்கு வன்மையால் சிறப்பாக நடக்கும். பழைய மீதிகள் கிடைக்கும். புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பார்கள். உத்தியோகம் தொடர்பான பயணங்கள் செல்ல நேரலாம்.

**உத்தியோகஸ்தர்கள்:** புத்தி சாதூரியத்தால் மேல் அதிகாரிகள் கொடுத்த வேலையைச் சிறப்பாகச் செய்து முடிப்பார்கள். குடும்பத்தில் இருந்த குழப்பம் நீங்கும். கணவன், மனைவிக்கிடையே இருந்த மனவருத்தம் நீங்கும். பிள்ளைகளுக்கு தேவையான பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள்.

**பெண்களுக்கு:** காரியங்களில் இருந்த பின்னடைவு நீங்கும். எதிர்பார்த்த பணவரவு இருக்கும்.

அரசியல்வாதிகள் கட்சி ரகசியங்களை வெளியிட வேண்டாம். தொகுதியில் மதிப்புக் கூடும். கோஷ்டிப் பூசலையும் தாண்டிச் சாதிப்பீர்கள்.

**கலைத்துறையினர்:** யதார்த்தமான படைப்புகளால் அனைவரின் கவனத்தையும் ஈர்ப்பார்கள். வேற்றுமொழி வாய்ப்புகளால் புகழடைவார்கள். சம்பள மீதி கைக்கு வரும்.

மாணவர்களுக்கு புத்திசாதூரியம் வெளிப்படும். கல்வியில் இருந்த தொய்வு நீங்கும்.

**புனர்பூசம் 4ஆம் பாதம்:**
இந்த மாதம் உடற்சோர்வு உண்டாகலாம். பூர்வீகச் சொத்துக்கள் மூலம் வரும் வருமானம் தாமதப்படும். திருமணம்தொடர்பானமுயற்சிகளில் சாதகமான நிலை இருக்கும். தொழில், வியாபாரம் தொடர்பான காரியங்களில் எதிர்பாராத தடை ஏற்பட்டு நீங்கும். பணவரத்து அதிகரிக்கும். எதிர்பார்த்த பண உதவி வந்து சேரும். உத்தி யோகத்தில் இருப்பவர்கள் மேல் அதிகாரிகளை அனுசரித்துச்செல்வது நல்லது.

**பூசம்:**
இந்த மாதம் அலுவலகம் தொடர்பான பணிகள் தாமதப்படும். எதிலும் கவனம் தேவை. குடும்பத்தில் இருப்பவர்களுடன் வீண் வாக்கு வாதங்களைத் தவிர்த்து சாதாரணமாகப் பேசுவது நல்லது.. வாழ்க்கை துணையுடன் இருந்த மனஸ்தாபங்கள் விலகும். நண்பர்கள், உறவினர்கள் வருகை இருக்கும். பிள்ளைகள் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**ஆயில்யம்:**
இந்த மாதம் வீண் வாக்கு வாதங்களைத் தவிர்ப்பது நல்லது. கடும் முயற்சிகள் பலன் தரும். செலவு அதிகரிக்கும். சாதகமான சூழ்நிலை காணப்படும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் உண்டாகும். விட்டுச் சென்ற நண்பர் மீண்டும் வந்து சேர்வார். அதனால் மகிழ்ச்சி உண்டாகும்.

**பரிகாரம்:** அம்மனுக்கு அரளிப்பூ அர்ப்பணித்து அர்ச்சனை செய்து வணங்க எல்லா காரியங்களும் கைகூடும். எதிர்ப்புகள் நீங்கும்.




இராசினிதேவி சிவலிங்கத்தின் 'தடம் மாறும் பாதைகள்' சிறுகதைத் தொகுப்பு வெளியீட்டு விழா அதிபர் சி.வேலழகன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. ஜீவநதி ஆசிரியர் க.பரணீதரன் நூலை வெளியிட்டு வைத்தார். எழுத்தாளர் த. அஜந்தகுமார் கருத்துரையாற்றினார்.

# வரலாற்றில் இன்றைய தினம் 09.08.2017



*40 ஆயிரம் பேரைக் காவு கொண்ட 'பற் மன்' எனும் பெயரிடப்பட்ட அணுகுண்டு நாகசாகியில் வீசப்பட்ட தினம் இன்று.*

1810–நெப்போலியனால் பிரான்ஸுப் பேரரசின் ஒரு பகுதியாக, முதன்முதலாக வெஸ்ற் பலியா இணைக்கப்பட்டது.

1892–இருவழித் தந்திக்கான காப்புரிமம் தோமஸ் எடிசனுக்கு வழங்கப்பட்டது.

1902–ஏழாம் எட்வட் மற்றும் அலெக்ஸான்ரா ஆகியோர் ஐக்கிய இராச்சியம் மற்றும் அயர்லாந்தின் அரசன், அரசியாக முடிசூடினர்.

1942–ஒத்துழையாமை இயக்கம் தொடங்கியமைக்காக பிரிட்டிஷ் படைகளால் மும்பையில் வைத்து மகாத்மாகாந்தி கைது செய்யப்பட்டார்.

1945–இரண்டாம் உலகப்போரில் அமெரிக்காவால் ஜப்பானின் துறைமுக நகரான நாகசாகியில் 'பற் மன்' எனும் பெயரிடப்பட்ட அணுகுண்டு வீசப்பட்டதில் சுமார் 40 ஆயிரம் பேர் வரை கொல்லப்பட்டனர்.

1965–சிங்கப்பூர் மலேசியாவிலிருந்து வெளியேற்றப்பட்டது. விருப்பின்றிச் சுதந்திரம் பெற்ற நாடாக இன்று வரை விளங்கும் நாடு இதுவாகும்.

1974–வோட்டர் கேற் ஊழல் காரணமாக அமெரிக்க அரசதலைவர் றிச்சாட் நிக்சன் பதவி விலக உதவி அரச தலைவரான ஜெரால்ட் போட் அரச தலைவரானார்.

1987–பூசா இராணுவ முகாமிலிருந்து விடுதலையான 291 பேர் வீடு திரும்பினர்.

1995–யாழ். நகரில் மிகப் பெரிய அரச எதிர்ப்புப் பேரணி இடம்பெற்றது.

2006–மூதூரில் இடம் பெயர்ந்த மக்கள் மீது வானூர்தித் தாக்குதல். 5 போர் சாவு.

## நாளை

**10.08.2017**
வியாழக்கிழமை

**ஆடி - 25**

திதி: திருதியை பி.இ. 12.26 வரை
நட்சத்திரம்: சதயம் கா.06.38
சுபநேரம்: 07.34–09.04 வரை
ராகுகாலம்: 01.34–03.04 வரை

# செம்மொழி வல்லான் மானுட நேயன் முதுநிலைத் தமிழ் விரிவுரையாளர் எஸ். வை.ஸ்ரீதர்



உலகப் பல்கலைக்கழகங்களின் வரலாற்றில் இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் மட்டுமே ஏறக்குறையக் கால் நூற்றாண்டுகளாக பல்கலைக்கழகப் பட்டப் படிப்புக் கலைமானிப் பரீட்சைக்கு சிங்களமொழி மூல மாணவர்களுக்குத் தமிழும், தமிழைச் சிறப்புப் பாடமாகப் பயிலும் தமிழ் சிறப்புக்கலைப் பட்டதாரிகளுக்குச் சிங்களமொழியும் கற்பிக்கப்பட்டு வருகின்றன.

சப்ரகமுவ பல்கலைக்கழக மொழிகள் துறையிலே கடந்த 22 வருடங்களாக ஒன்றாகப் பணிபுரியும் முதுநிலைத் தமிழ் விரிவுரையாளனாகவும், ஆப்த நண்பனாகவும் விளங்கிய குழந்தையுள்ளம் கொண்ட மானுடநேயன் கலாநிதி எஸ். வை.ஸ்ரீதர் திடீர் சுகயீனமுற்று எம்மைவிடடுப் பிரிந்தமை ஆறாத் துயரை ஏற்படுத்தியுள்ளது. தமிழைப் போதிப்பதனையே தமது வாழ்வில் இலட்சியமாகக் கொண்ட முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி ஸ்ரீதர், சப்ரகமுவ பல்கலைக்கழகத்திலேயே சிங்களமொழி மூல மாணவர்களுக்குத் தமிழ் மொழியை விரிவுரையாற்றிக் கொண்டிருந்த போது வகுப்பில் திடீரென சுயநினைவிழந்து மயக்கமுற்றார். அவரை மாணவர்களும் விரிவுரையாளர்களும் முதலுதவிச் சிகிச்சைக்கென அண்மையிலுள்ள பம்பஹின்ன அரசினர் மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். பின்னர் மருத்துவ நிபுணரின் பணிப்பின் பேரில் பலாங்கொடை அரசினர் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். பின்னர் கொழும்பு அரசினர் மருத்துவமனைக்கும் கொண்டு செல்லப்பட்டு தலையில் அறுவைச் சிகிச்சை இடம்பெற்றது.




ஆனால் அவரது உயிரைக் காப்பாற்ற முடியவில்லை.

பேராதனைப் பல்கலைக்கழகத்திலேயே தமிழ் மொழியைச் சிறப்புப் பாடமாகப் பயின்று சிறப்புப் பட்டம் பெற்று இதன் பின் முதுகலைமாணிப் பட்டம் பெற்றுள்ளதுடன் கலாநிதிப்பட்டத்தையும் பெற்றுக் கொண்ட இவர் மாணவர்களாலே பாராட்டுப் பெற்ற நல்லதோர் தமிழாசான் ஆவார்.

பல்கலைக்கழகத்துக் கல்விமான்கள், குறிப்பாகத் தமிழ்த்துறைசார் புலமையாளர்களது அன்புக்குப் பாத்திரராய் விளங்கியவர் இவர். எவர் எவ்வுதவியைக் கேட்டாலும் மனங்கோணாது செய்துதவுவார். பரோபகாரி, பண்பன், சப்ரகமுவ பல்கலைக்கழகத்திலே பயின்ற பயிலுகின்ற பட்டதாரிகள் மத்தியில் கீர்த்திமிக்கவர், காரியங்களையும் நிதானமாகவும் நேர்மையாகவும் உண்மையாகவும் நேர்த்தியுடனும் செய்ய வேண்டும் என்பதிலே அதீத அக்கறையும் கவனமும் மிக்கவர். பாசமும் நேசமுமுள்ள அருமைத் தந்தை. குடும்பத்திலே பொறுப்புடன் செயற்பட்ட வனவான். அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் உறவுகளுக்கும், தமது குருவை இழந்து நிற்கும் பல்கலைக்கழக பட்டதாரி மாணவர்களுக்கும் கூறுவதற்கு ஆறுதல் கூறவார்த்தைகள் இல்லை. உலகின் நிய தியை மாற்றவல்லவர் யார்? என்ற வினா மனதில் எழுகிறது. மனத்திடச் சித்தத்தை இறையருள் நல்க வேண்டிப் பிரார்த்திக்கிறோம்.

கனகசபாபதி நாகேஸ்வரன்




# பழந்தமிழ் இலக்கியத்தில்

எஸ்.மல்லிகா

சங்க இலக்கியம் மற்றும் இரட்டைக் காப்பியங்கள் ஊழின் மீது அசையாத நம்பிக்கை கொண்டுள்ளன. அவற்றைப் போன்றே அற இலக்கியங்களில் ஒன்றான திருக்குறளும் ஊழ் பற்றி அழுத்திக் கூறுகின்றது. இந்த ஊழை விட வலியது எதுவும் இல்லை என்றும் கூறுகின்றது.

**திருக்குறளில் ஊழ்**

திருக்குறள் அறத்துப்பாலிலுள்ள ஊழ் என்னும் அதிகாரத்தில் 10 குறட்பாக்கள் உள்ளன. அவற்றில் ஊழைக் குறிக்க இயற்கை, உண்மை, வகுத்தான்.

வகுத்த வகை என்னும் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன், ஊழானது ஆகூழ்- போகூழ் எனவும், இழவூழ்- ஆகலூழ் எனவும் வகைப்படுத்திக் காட்டப்பட்டுள்ளது.

திருக்குறளிலுள்ள 10 குறட்பாக்களிலும் சொல்லப்பட்டுள்ள செய்திகளாவன

01.ஆகூழால் உள்ளத்தில் அசையாத் தன்மை பிறக்கும்; போகூழால் சோம்பல் தோன்றும்.

02.இழவூழ் அறிவில்லாத முட்டாளாகவும், ஆகலூழ் அறிஞனாகவும் மாற்றும்.

03.எவ்வளவுதான் படித்தாலும் ஊழ்த்த உண்மை அறிவுதான் எஞ்சிநிற்கும்.

04.இயற்கை திருவையும் தெளிவையும் இணையவிடாது.

05.திரு சேர்க்கும் ஊழ் தீயனவற்றையும் நல்லவையாக மாற்றும். இவ் ஊழ்இல்லாவிட்டால் நல்லனவும் தீயனவாய் முடியும்.

06.ஒருவனிடம் பகுதி பட்டுப் பாலாய் இருக்கும் ஊழ் விலக்கினும் விலகாது.

இல்லாத ஊழ் அழைக்கினும் வராது.

07.கோடிக் கணக்கில் பணம் சேர்த்தாலும் அதனைத் துய்ப்பதற்கு ஊழ் வேண்டும். இந்த ஊழ்தான் 'வகுத்தான் வகுத்த வகை'.

08.பாடுபட்டதற்கு ஏற்ற பலன் கிட்டாவிட்டால், மனவலிமை இல்லாதவர் அதனை விட்டு விலகிவிடுவர்.

09.நல்லது நிகழும் போது துய்த்து மகிழ்பவர், தீயது நிகழும் போது அதனை விட்டு விலகுவது ஏன்?

10.ஊழைக் காட்டிலும் வலிமை உடையது வேறொன்றும் இல்லை. ஊழின் தாக்கத்திலிருந்து தப்ப வேறொன்றைத் தேடினாலும் ஊழ் அதற்கு முன் வந்து நின்று தேடுவதைத் தடுத்துவிடும். (சோராமல் உழைப்பவர் ஊழை ஒதுக்கி வைக்க முடியும்.)

குறட்பாக்கள்

01. ஆகூழால் தோன்றும் அசைவின்மை கைப்பொருள் போகூழால் தோன்றும் மடி (371)

விளக்கம்:

ஆவதற்குரிய ஊழ் வந்தால் சோர்வில்லாத முயற்சிகள் தோன்றும்; கைப்பொருள்போவதற்குரிய ஊழ்வந்தால் சோம்பல் தோன்றும்.

02.பேதைப் படுக்கும் இழவூழ் அறிவகற்றும் ஆகலூழ் உற்றக் கடை (372)

விளக்கம்:

இழப்பதற்கான ஊழ் ஒருவனைப் பேதையாக்கும் (அறிவற்றவனாக்கும்); ஆவதற்கான ஊழ் வந்தால் ஒருவனது அறிவை விரிவாக்கி அவனுக்குப் பல நன்மைகளைத் தரும்.

03.நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந் தன் உண்மை அறிவே மிகும் (373)

விளக்கம்:

நுண்மையான நூல்கள் பலவற்றை முயன்று கற்றாலும், ஊழின் நிலைமைக்குத் தகுந்தபடி உள்ளதாகும் அறிவே மேம்பட்டுத் தோன்றும்.

04.இருவேறுலகத் தியற்கை திருவேறு தெள்ளிய ராதலும் வேறு(374)

விளக்கம்:

ஊழின் காரணத்தால் உலகத்து இயற்கையானது இருவேறு வகைப்படும்; செல்வராதல் (செல்வந்தர்) வேறு ஊழ்; தெளிவான அறிவினராதல் வேறு ஊழ் ஆகும்.

05.நல்லவை எல்லாஅம் தீயவாம் தீயவும் நல்லவாம் செல்வம் செயற்கு(375)

விளக்கம்:

செல்வம் தேடும் முயற்சிக்கு, நல்லூழால் தீயவும் நல்லவையாவதும், தீயூழால் நல்லவைகளும் தீயவை தருகின்ற தன்மையாவதாலும் உண்டு.

06.பரியினும் ஆகாவாம் பாலல்ல உய்த்துச் சொரியினும் போகா தம (376)

விளக்கம்:

வருந்திக் காப்பாற்ற முயன்றாலும் நல்லூழ் இல்லாதபோது எதுவுமே ஆகாது;

கொண்டுபோய் வெளியே சொரிந்தாலும் நல்லூழிருந்தால் நம் பொருள் போகாது.

07.வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி தொகுத்தார்க்கும் துய்த்தல் அறிது (377)

விளக்கம்:

ஊழை வகுத்தவன் வகுத்துவிட்ட வகைப்படி அல்லாமல், கோடியாகப் பொருள் தொகுத்தவர்க்கும் அவற்றைத் துய்த்தல் என்பது அரிதாகும்.

08.துறப்பார்மன் துப்புரவு இல்லார் உறற்பால ஊட்டா கழியும் எனின்(378)

விளக்கம்:

வந்தடைவதான இன்பங்கள் வந்து சேராமற் போகுமானால், துய்க்கும் பொருள் இல்லாதவர்கள் தம்முடைய ஆசைகளைத் துறப்பார்கள்.

09. நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால் அல்லற் படுவதெவன்(379)

விளக்கம்:

ஊழால் நன்மைகள் விளையும்போது, அவற்றை நல்லவையாகக் காண்பவர்கள், அஃது

இல்லாத கேடுகாலத்தில் துன்பப்படுவதுதான் எதற்காக?

10. ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று சூழினும் தான்முந் துறும்(380)

விளக்கம்:

ஊழைக் காட்டிலும் பெரிதும் வலிமையானவை யாவை உள்ளன? மற்றொன்றை வலியதுஎன்று கருதினாலும், அங்கும் ஊழே முன்வந்து நிற்கும்.

இந்தப் பத்துக் குறட்பாக்களிலும் திருவள்ளுவர் ஊழ் பற்றி மிகத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளதுடன், ஊழை விட வலிமையானது ஒன்று இல்லை என்றும் அழுத்திக்கூறுகின்றார். நமது வாழ்க்கையில் அன்றாடம்நடக்கின்ற கருமங்கள் கூட, வகுத்தவன் வகைப்படிதான் நடக்கும் என்றும் அவர் கூறுகின்றார். (தொடரும்...)

**காணிவிற்பனைக்கு**

திருநெல்வேலி.
பாற்பண்ணை முருகன் வீதி
ஒழுங்கையில்
பரப்பு 07- குளி 5.06
விற்பனைக்குண்டு.

077 631 5662, 077 635 9284

**மரண அறிவித்தல்**

**திருமதி சாந்தநாயகி செல்லத்தம்பி**



மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், சங்கத்தார்வயல், இயக்கச்சியை நிரந்தர முகவரியாகவும், உசன், மிருசுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சாந்தநாயகி செல்லத்தம்பி 07.08.2017 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - பறுபதம் தம்பதிகளின் புதல்வியும், காலஞ்சென்ற செல்லத்தம்பியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கார்த்திகேசு - தங்கம்மா தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற முத்துத்தம்பி, பரிமளம், செல்லையா, கதிரவேலு, சிவக்கொழுந்து, காமாட்சி மற்றும் பகவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்வகுமார், ஜெயந்தினி (லண்டன்), சாந்தகுமார், ஜீவகுமார் (லண்டன்), சாந்தகுமாரி (லண்டன்), வசந்தகுமாரி, தவக்குமாரி (ஆசிரியை - வவுனியா திருவள்ளுவர் வித்தியாலயம்), ஜெயக்குமாரி (பெண் பரிசாரகர் - பிரதேச வைத்தியசாலை - வரணி), ராஜகுமாரி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெகதீஸ்வரி, திருஞானச்சந்திரன், புஸ்பவதி, யசோதாதேவி (லண்டன்), செல்வநாயகம் (லண்டன்), லக்ஸ்மணராஜ், குகநேசன், பாலகிருஸ்ணராஜா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், நிறோஜன் (பிரதேசசெயலகம் - கிளிநொச்சி), வின்ஜிகன், ஜன்ஷா, ஜெசிந்தா, திசாளினி, முருகானந்தன், கஜன், நிஜாந்தி, றோமிதன், றேனுகா, விதுஜனன், கனஜா, பவித்திரா, பிரதீபன், பிரதீபா, மயுமிகா, வினோசாந்த், அபிஷா, அட்ஷிதா, விஸ்வா, மகிழன், தயாளன், தினேஷ், பிரசாத், பிரதீபன் ஆகியோரது பேர்த்தியும், அஸ்வின், அனோஷ்கா, ஆர்த்திகா, ஆதவன், ஆரபி, ஆரூஸ், ஆதிஷ் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.08.2017) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மதியம் ஒரு மணியளவில் ஈச்சங்காட்டு இந்து மயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உசன், மிருசுவில். தகவல்: குடும்பத்தினர்.

**அபிவிருத்தி லொத்தர் சபை**
**விற்பனை முகவர்களை நியமித்தல்**

**யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்கள்**

சந்தையில் முதலிடம் வகிக்கும் லொத்தரகளாகிய " சனிக்கிழமை அதிர்ஷ்டம்", " ராசி அதிர்ஷ்டம்", "ஜயோதா", "கலக்ஸி ஸ்டார்", "நியத்தஜய", "சுப்பர்போல்", "கோடிபதி சனிதா", "தசலக்ஷபதி கார் ப்லஸ்", " அபிவிருத்தி அதிர்ஷ்டம்", மற்றும் " உடனடி லொத்தர்" டிக்கெட்டுக்களை விற்பனை செய்வதற்காக யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலிருந்து பின்வரும் நகரங்களில் விற்பனை முகவர்களாக செயற்பட விரும்பும் நிறுவனங்கள் மற்றும் நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| யாழ்ப்பாண மாவட்டம் | மன்னார் மாவட்டம் | கிளிநொச்சி மாவட்டம் | முல்லைத்தீவு மாவட்டம் |
|---|---|---|---|
| ஊரகாவற்றுறை | பேசாலை | பரந்தன் | மல்லாவி |
| குறிகட்டுவான் | தலைமன்னார் | பூநகரி | மாங்குளம் |
| பண்டத்தரிப்பு | நானாட்டான் | முழங்காவில் | நெடுங்கேணி |
| நெல்லியடி | வங்காலை | முருகண்டி | முள்ளியவளை |
| பருத்தித்துறை | முருங்கன் | பளை | முல்லைத்தீவு நகரம் |
| யாழ். நகரம் | மடு | | உடையார்கட்டு |
| கைதடி | | | தர்மபுரம் |

மேலும் கொழும்பு தலைமை அலுவலகத்திலிருந்தும் மேற்கூறப்பட்ட மாவட்டங்களில் நியமிக்கப்பட்டுள்ள எமது விநியோகஸ்தர்களிடமிருந்தும் லொத்தர்களை பிரதான அலுவலக விலைக்கே கொள்வனவு செய்ய முடியும்.

விற்பனை முகவருக்கு 17.5% கமிஷன் தொகை வழங்கப்படும். அதாவது ரூ.20/- லொத்தருக்கு ரூ.3/50 கமிஷன் வழங்கப்படும்.

மேற்கூறப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய நபர்கள் அல்லது நிறுவனங்கள் 15.08.2017ஆம் திகதிக்கு முன்னதாக சுயமாகத் தயாரித்த விண்ணப்பப்படிவம் மூலம் விண்ணப்பிக்கவும்.

மேலதிக விவரங்களுக்கு தொலைபேசி 077 105 4884, 011 239 0928, 011 482 4829 அல்லது 011 482 4854 ஊடாக சந்தைப்படுத்தல் பிரிவினை தொடர்புகொள்ளவும்.




தலைவர்,
அபிவிருத்தி லொத்தர் சபை.
இல.356,கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வா
மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு -02.

**வீட்டுப்பணிப்பெண் தேவை**

நவாலி றோட், ஆனைக்கோட்டையில்
உள்ள ஒரு வயோதிபரை பராமரித்துக்
கொள்ளக்கூடிய நீதி நேர்மையுடன் கூடிய
பெண் (35-40) தேவை.
(வன்னி மாவட்டம் விரும்பத்தக்கது)

077 295 7984

**தேவை**

**உணவக உபகரணங்கள் தேவை.**

1. Hot Cupboard
2. Tea Pentre
3. D.Freezer
4. றொட்டி மேசை

077 465 2860

**மாபிள் வேலை செய்து தரப்படும்**

ஒரு சதுர அடி
45 ரூபா
(CS 6467) (14)

தொடர்பு: நிமல் நெல்லியடி
077 334 1281

**பழமை வாய்ந்த ஏழு தலைமுறைகளாக செய்து வரும்**
**ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்**



01. ஆண்/பெண் வசியம்
02. பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும் படி செய்யமுடியும்.

Note: (உங்களால் நேரில் வரமுடியாவிட்டால் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

03. வியாபார முன்னேற்றம்.
04. வீட்டில் ஒற்றுமை உண்டாக
05. போலியானவர்களிடம் ஏமாந்து விட்டீர்களா ?

ஒருமுறை எம்மை வந்து சந்தித்துப் பாருங்கள் !!

**றெங்கசாமி காளியம்மா**
**மாத்தளை வீதி, கண்டி.**
**077 327 2302/ 075 509 5887**

# 'மருத்துவர்களின் மரணம்'

## (சிறுகதைத் தொகுப்பு)

## வாழ்தல் என்பது உடன் வாழ்தல் மட்டுமல்ல

அபி கார்த்தி




படைப்புக்கள் காலத்தின் இடைவெளிகளை நிறைத்து வாழ்வின் உணர்வுகளைக் காலங்க்ள் கடந்தும் பேசுகின்றன. நல்ல படைப்புகள் நாம் கடந்து செல்லும் தருணங்களின் அழகையும், வலிகளையும், துயரையும், அவமானங்களையும் மொழியின் கரங்களினுள் வசப்படுத்துகின்றன. பேச முடியாத பொழுதுகளிலும் நல்ல படைப்புக்களால் பேச முடியும். ஒரு தூய வார்த்தையின் ஆற்றலின் முன் பொய்மைகள் எரிந்துபோக முடியும்.

ஈழத்து எழுத்துலகில் நன்கறியப்பட்டவரான இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதனுடைய 'மருத்துவர்களின் மரணம்' சிறுகதைத் தொகுதி அண்மையில் வெளிவந்திருந்தது. இந்தத் தொகுப்பு அவரது துணைவியார் நினைவாக வெளியிடப்பட்டிருந்தது.

படைப்பாளர் சிதம்பர திருச்செந்திநாதனின் எழுத்துக்கள் எப்போதும் நேர்த்தியும், சிந்தனையை ஈர்க்கும் கதை சொல்லும் பாங்கும் கொண்டவை. இவர் வார்த்தைகளை அழகோடும், எளிமையோடும் கையாளும் திறன் பெற்றவர். எம் சமூக வாழ்வியலின் ஆழமும், நடைமுறைகளும் அதிகம் அறிந்தவர். இன்று வரை தன்னுடைய படைப்புப் பயணத்தில் இடைவெளிகள் அதிகமின்றித் தொடர்ச்சியாக இயங்கி வருபவர்.

இவருடைய நான்காவது சிறுகதைத் தொகுப்பாக இந்தத் தொகுப்பு அமைந்துள்ளது. தொகுப்பில் பத்துச் சிறுகதைகள் அடங்குகின்றன. தலைப்புடன் பொருந்தும் விதமான அர்த்தம் பொதிந்த அட்டைப்படம் எம்மிடையேயான இன்றைய வாழ்வின் நெருடலான உண்மை நிலை ஒன்றைத் துயருடன் சிந்திக்க வைக்கிறது. உள்ளே திருமதி தி. இராஜநாயகியின் புன்னகை கனிந்த முக மலர்வின் வருகையைத் தொடர்ந்து உரைகள் மற்றும் கதைகளுக்கான களம் விரிகிறது. எழு வெளியீட்டகத்தினரின் அக்கறை சேர்ந்த பதிப்புரையுடன், நட்பின் உரிமையோடான முன்னுரையும், ஆசிரியரின் என்னுரையும் இயல்புடன் ஒன்றிணைந்து கொண்டு நூலின் அழகாகின்றன.

தொகுப்பிலுள்ள கதைகள் வேறுபட்ட உணர்வு நிலைகளை, வாழ்வின் தரிசனங்களைக் கடந்து செல்கின்றன. எல்லாத் தளங்களிலும் படைப்பாளர் அதே உணர்வு நிலையோடு பயணித்து எம்முள்ளும் அதே உணர்வலைகளைப் பயணிக்கச் செய்வதில் அதிக வெற்றி பெறுகின்றார். 'பெறுமதி', 'அன்புள்ள அப்பா நாங்கள் நலம்' ஆகிய கதைகள் அதிகளவில் பேசவரும் உணர்வை மனதுள் பாரமாக இறக்குகின்றன. முதுமையின் தனிமையும், இயலாமையும், ஏக்கங்களும், நுண்ணிய இரசனைகளும், விருப்புகளும் என அவர்களின் உலகம் பற்றியதான உணர்வின் பகிர்வாக இக்கதைகள் அமைந்துள்ளன.

வாழ்வின் ஆரவாரித்த ஓட்டத்தோடு அள்ளுண்டு செல்வதால் முதிய உறவுகளுடன் நின்று பேசவோ, விருப்பங்கள் அறியவோ அனேகருக்கும் பொழுதிருப்பதில்லை. வேண்டுமென்றே வஞ்சிக்கும் வக்கிர மனங்கள் சிலதைத் தவிர அதிகமானோரின் நிலை இதுதான். இந்தக் கதைகள் அவர்களை நின்று நிதானித்துத் தம் கடமைகள் தொடர்பாக மீளச் சிந்திக்க வைக்கும். பழகிய உணவுப் பழக்கமும், அது இல்லாத போதான ஏக்கமும் என முதியவரின் மெல் உணர்வின் நிலைகளின் உள்ளோடித் திரிந்து அவற்றை வார்த்தைகளாகியுள்ளமை அற்புதம்.

நாளைய சமூகம் நல்வழிப்படவும், செல்லும் திசைகள் சரியானதாக அமையவும் எவற்றை முதன்மைப்படுத்துகிறோம் என்பது முக்கியம். முதியவர்களைப் பேணுவதும், அவர்கள் மகிழ்ந்திருக்கக் காண்பதும் பண்பாடுள்ள சமூகம் ஒன்றின் நல்லடையாளம். எம் கடமைகளைசரி செய்து, எம்மை, எமது பண்பாட்டை மேலுயர்த்த இந்தக் கதைகள் சிந்திக்க வைக்கின்றன.

**கண்முன் வருகின்றன இறுதிப் போரின் துன்பியல்**

இறுதிப்போரின் நினைவழியா நாட்களை 'புதையல்' கதை பேசுகின்றது. போரினுள் வாழ்வானாலும் அதன் உயிர்ப்பும் அழகும், அது தந்த அன்பும் நிறைவும் என எல்லாம் அந்த மணல் வெளியில் கானலாகிப்போன கதை இது. வாழ்ந்து தீர்த்த பொழுதுகளின் வலியும் அவலமும் வார்த்தைகளாகியுள்ளன. மொழியின் எல்லைகளுக்குள் வசப்படுத்த முடியாத காலமென்றை தன் உணர்வின் வழி தரிசனப்படுத்தியுள்ளார்.

'மருத்துவர்களின் மரணம்' எனும் தொகுப்பின் தலைப்புக்கான கதை ஆசிரியரின் வாழ்வினை ஒன்றித்த கதை. ஆனால், உணர்வின் தளம்பல் எதுவுமின்றி நிகழ்வின் சாட்சியாக வார்த்தைகள் நகர்கின்றன. ஓசையெழுப்பாத அந்தச் சொற்களின் ஆழத்துள் உடைந்துபோன ஒரு பெரு நம்பிக்கையின் ஏக்கமும், துயரமும் நிறைந்துள்ளன. 'அது' என்பது விதியா? பொறுப்பானவர்களின் மதியை மயக்கும் அலட்சியமா? அதனைக் கையாண்ட விதம் படைப்பாளரின் முதிர்ந்த ஆளுமையின் சான்று.

காலமாற்றங்களின் திசையில் சாமானிய மனிதரின் வாழ்வும் அலைவுறுவதை 'இத்தால் சகலரும் அறியவேண்டியது என்னவென்றால்' எனும் கதை விபரிக்கிறது. எதுவும் நிலையானதல்ல. உயிர் வாழ்வின் இருப்புக்காக தம் நம்பிக்கைகளினதும் முடிவுகளினதும் மீது ஏறி மிதித்தபடி சுயத்தின் முகமழித்து வாழும் நிர்ப்பந்தத்தின் பரிதாபம். பரிதாபத்துக்குரியவன் அந்த மனிதன் மட்டுமல்ல நாமும் தான். இது ஒரு தனி மனிதனின் கதை மட்டுமல்ல. ஒரு இனத்தின் கதையும் தான். கதை சொல்லப்பட்டுள்ள விதமும், மாறுபட்ட பார்வை முறையும் கவனிப்போடு வாசிக்கத் தூண்டுகின்றன. புதிய கண்ணாடிகளினூடாக புதிய கருத்து நிலை மாற்றங்கள் சொல்லப்பட்ட விதமும் கவனிப்புக்குரியது.

'அம்மா வழியில் அல்ல', மற்றும் 'வாழ்தல்' ஆகியவை எமது நடைமுறைச் சமூக வாழ்வின் உண்மைச் சித்திரங்கள். ஆழ வேரோடிய சுயநலச் சிந்தனைகளின் விம்பங்கள். அதனின்று மேலெழ முயலும் இரு பெண் மனங்களின் உணர்வுகள் கதைகளின் கருவாகியுள்ளன. 'கண்கள் இரண்டும் விற்று' ஒரு அழகிய நேசத்தை இயல்பு நிலையோடு பேசுகிறது. 'அட' கதைக் காட்சி மாற்றங்கள் எவ்வளவு இயல்பாகி விட்டன எம் நாள்களில் என்பதையும் இடப்பெயர்வையும், இடந்தந்த நல்ல உள்ளங்களின் மனிதாபிமானம் மறக்கப்பட்டதையும் கூறுகின்றது. புழுதி படிந்து நெடிதாய் நீண்ட புதுக்குடியிருப்பு பரந்தன் வீதியும், பசுமை போர்த்திப் பனியில் சிலிர்த்திருக்கும் வயல் வெளிகளும், கடந்து சென்ற காலமென்றைக் கண்களினுள் காட்சிப்படுத்துகின்றன.

இன்றைய எமது வாழ்வின் சூழல் இன்னும் அதிகமான சரியான பார்வையையும், தெளிந்த சிந்தனையையும் கொண்ட படைப்புக்களை வேண்டி நிற்கின்றது. நவீன வாழ்வியல் முறையின் சூழலினுள் சிக்குண்டு தொலை நோக்கையும், தெளிவையும், வரலாற்றையும் தொலைத்த எம் இன்றைய நாள்களிற்கு பொறுப்புணர்வோடு உண்மை நிலையைப் பேசக்கூடிய படைப்புக்கள் அவசியம்.

உணர்வுகளைப் புரிந்து கொள்ளும் திறனும், மொழியாளுமையும், எழுத்தைத் தொய்வின்றி நகர்த்தும் ஆற்றலும் கொண்ட இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதனிடமிருந்து எமக்கான கதைகளைப் பேசும் இன்னும் பல படைப்புக்களைக் காலம் வேண்டி நிற்கிறது. இதனையே பதிப்புரையிலும் எழு வெளியீட்டகத்தினர் தம் கருத்தாக முன் வைத்துள்ளனர்.

கடினமான காலங்களின் பயணத்தில் தன் ஒளி சிந்தும் புன்னகையுடன் துணை வந்த அவர் மனைவி இன்னும் மீதி நாட்களின் பணிகளுக்கும் துணையிருப்பார். வாழ்தல் என்பது உடன் வாழ்தல் மட்டுமல்ல. உள்ளத்துள் வாழ்தலும் தான்.






'கந்தர்மடம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பண்டிதர்' எனும் நூல் வெளியீட்டு நிகழ்வுகள் பேராசிரியர் மா.வேதநாதன் தலைமையில் யாழ். வைத்தீஸ்வரக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது. (ஐ)

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 3 | 2 | | 1 |
| | 9 | | | 2 | | | | |
| | 7 | | 4 | 5 | | | | |
| | 4 | | | | | 5 | | 7 |
| | | 8 | 5 | | 6 | 9 | | |
| 6 | | 9 | | | | | 8 | |
| | | | | 6 | 5 | | 1 | |
| | | | | 4 | | | 2 | |
| 5 | | 3 | 1 | | | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 1 | 7 | 2 | 5 | 8 | 4 | 9 | 6 |
| 9 | 2 | 4 | 6 | 3 | 1 | 5 | 8 | 7 |
| 6 | 5 | 8 | 9 | 4 | 7 | 2 | 3 | 1 |
| 1 | 7 | 2 | 8 | 9 | 6 | 3 | 5 | 4 |
| 5 | 9 | 3 | 4 | 1 | 2 | 7 | 6 | 8 |
| 8 | 4 | 6 | 5 | 7 | 3 | 1 | 2 | 9 |
| 4 | 3 | 5 | 7 | 6 | 9 | 8 | 1 | 2 |
| 2 | 6 | 1 | 3 | 8 | 4 | 9 | 7 | 5 |
| 7 | 8 | 9 | 1 | 2 | 5 | 6 | 4 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைக்களையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண் கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங் கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக் கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



# ரசிகர்களை சந்திக்கிறார் ஓவியா

பிக் பாஸ் நிகழ்ச்சியின் மூலம் திடீரெனப் பிரபலமாகியுள்ள நடிகை ஓவியா, தனக்கு ஆதரவு தெரிவித்த ரசிகர்களை தொடர்ச்சியாகச் சந்தித்து வருகிறார்.

தமிழ் திரையுலக முன்னணி நடிகர் கமலகாசன் தொகுத்து வழங்கும் பிக் பாஸ் நிகழ்ச்சி வடக்கு மாகாணத்திலும் வீட்டுக்குவீடு வாசல்படி என்றாகி விட்டது. எம்மவர்களின் சமூக வலைத்தளங்களும் ஓவியா தொடர்பான பதிவுகளால் நிரம்பி வழிகின்றன. அந்தளவுக்கு அவருக்கு ரசிகர்கள் பட்டாளம் அதிகரித்துள்ளது. இங்கே நிலைமை இப்படியென்றால் தமிழகத்தின் நிலைமையை சொல்லித்தான் தெரியவேண்டுமா.

பிக் பாஸ் நிகழ்ச்சியில் இருந்து சுய விருப்பின் அடிப்படையில் வெளியேறியிருந்த ஓவியா, தனக்கு ஆதரவு தந்த ரசிகர்களை தொடர்ந்து தற்போது சந்தித்து வருகிறாராம்.

ஓவியா போற போக்கைப் பார்த்தால் அ.தி.மு.க. நான்காக உடைந்தாலும் ஆச்சரியப் படுவதற்கு ஒன்றுமில்லை போலும்.




# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** பேச்சிலும், செயலிலும் நேர்மை நிறைந்திருக்கும். குடும்பத்தினரின் ஒத்துழைப்பு கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் இலாபம் அதிகரிக்கும்.

**இடபம்:** சொந்த விடயம் பற்றி பிறரிடம் பேச வேண்டாம். கூடுதல் உழைப்பால் தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி காண்பீர்கள். வாகன பயணத்தில் மிதவேகம் பின்பற்றுவது நல்லது.

**மிதுனம்:** போட்டிபந்தயத்தில் ஈடுபட வேண்டாம். தொழிலில் குறுக்கிடும் குளறுபடியை சரி செய்வது அவசியம். இலாபம் சுமார். பெண்கள் வீட்டுச் செலவுக்காகக் கடன் வாங்குவர்.

**கடகம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். எதிர்ப்புக்களை சாதுர்யமாக வெல்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணி சிறப்பாக நிறைவேறும்.

**சிங்கம்:** ஆன்மிக சிந்தனையுடன் செயற்படுவீர்கள். பெற்றோரின் அன்பும், ஆசியும் கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். சேமிப்பு உயரும்.

**கன்னி:** இடையூறு செய்தவர்களை இனம் கண்டு விலகுவீர்கள். தொழில், வியாபாரம் மந்த கதியில் இருக்கும். இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர்.

**துலாம்:** முக்கிய பணி நிறைவேற தாமதம் ஆகலாம். இல்லறத்துணையின் ஆலோசனை நிம்மதிக்கு வழிவகுக்கும். தொழில், வியாபாரத்தில் சீரான வருமானம் கிடைக்கும்.

**விருச்சிகம்:** புதிய விடயங்களை அறிவதில் ஆர்வம் காட்டுவீர்கள். தாமதித்த பணி நிறைவேற வாய்ப்புண்டு. இலாபம் சுமார். பிள்ளைகள் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள்.

**தனுசு:** தாமதித்த பணி மளமளவென நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற புதிய வாய்ப்பு கிடைக்கும். வருமானம் உயரும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.

**மகரம்:** தனித்திறமையுடன் செயற்பட்டு வருவீர்கள். முயற்சிக்கு உரிய பலன் முழுமையாக வந்து சேரும். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும்.

**கும்பம்:** உறவினரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் உழைப்பினால் பணவரவு சீராகும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**மீனம்:** இடையூறு விலகி நன்மை உண்டாகும். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் படிப்படியாக அதிகரிக்கும். காணாமல் தேடிய பொருள் கை வந்து சேரும்.







ஒருவன் தன் மனைவியை விவாகரத்துச் செய்த பிறகு தன் வீட்டிற்கு வந்தான். தன் அறையின் ஒரு மூலையில் ஒரு பெட்டியில் கொஞ்சம் வெற்று மதுப் போத்தல்கள் இருப்பதை அவன் பார்த்தான். அதில் இருந்து ஒரு போத்தலை எடுத்து கோபத்தில் தூர எறிந்துவிட்டு அவன் கூறினான் :

"என் மனைவி என்னை விட்டு போகக் காரணம் நீ தான்"

மீண்டும் அடுத்த போத்தலை எடுத்து எறிந்து விட்டு அவன் கூறினான்:

"எனக்கு குழந்தைகள் இல்லாதத்துக்கு காரணம் நீதான்"

மறுபடியும் அடுத்த போத்தலை எடுத்து எறிந்துவிட்டு அவன் சொன்னான் :

"என் வேலை போகக் காரணம் நீ தான்"

மீண்டும் அவன் அடுத்த போத்தலை எறிய எடுத்ததும் அவனுக்கு புரிந்தது. அது மதுவுடன் உள்ள போத்தல்.

அப்போது அவன் சொன்னான்:

"நீ இந்தப் பக்கம் ஒதுங்கி நில்லு...

எனக்குத்தெரியும், உனக்கு இந்தச் சம்பவத்தில் ஒரு பங்கும் இல்லை என்று...!"

நீதி: ஆயிரம் குற்றவாளிகள் தப்பினாலும் ஒரு நிரபராதி கூட தண்டிக் கப்படக்கூடாது.





## ரவிகரனிடம்...

யில், முல்லைத்தீவு மாவட்டத்துக்கு அமைச்சுப் பதவி கொடுக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டு வருகின்ற நிலையிலுமே, முதலமைச்சர் மேற்கண்ட நடவடிக்கையை எடுத்துள்ளார்.
ரவிகரனுக்கு எதிராக அந்த மாவட்டத்திலுள்ள சில அமைப்புக்களால் முதலமைச்சரிடம் மனுக் கொடுக்கப்பட்டிருந்தது. நிதிக் கையாடல்களில் ஈடுபட்டார் என்று அதில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பதிலளிக்குமாறும் தன்னிலை விளக்கத்தை வழங்குமாறும் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் சில தினங்களுக்கு முன்னர் ரவிகரனுக்குக் கடிதம் எழுதியுள்ளார். (உ-5)

## பிரேரணை...

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைமையுடன் கலந்தாலோசித்த பின்னரே பிரேரணையை எப்போது விவாதத்துக்கு எடுத்துக்கொள்வது என்பது தொடர்பில் முடிவு எடுக்கப்படும் என்று அறிய முடிகின்றது.
வடக்கு மாகாண முதலமைச்சர் உள்ளிட்ட 5 அமைச்சுக்களிலும் இடம்பெற்றதாகக் கூறப்படும் நிர்வாக முறைகேடுகள், மோசடிகள் தொடர்பில் தெரிவுக் குழு அமைத்து விசாரணை செய்யக் கோரும் பிரேரணை, ஆளும் கட்சி உறுப்பினர் அ.பரஞ்சோதியால் மாகாணசபையில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.
இந்தப் பிரேரணையை சபை அமர்வில் எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், அவைத் தலைவரிடம் கோரியிருந்தார். மாகாணசபை உறுப்பினர்களே அது தொடர்பில் முடிவெடுப்பர் என்று அவைத் தலைவர் பதிலளித்திருந்தார். இல்லை அவைத் தலைவரே அந்த முடிவை எடுக்கலாம் என முதலமைச்சரும் பதிலளித்திருந்தார்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுக்கும், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கும் இடையேயான சந்திப்பின் பின்னர் இந்தப் பிரேரணையைக் கையாள்வது என்று தீர்மானிக்கப்பட்டுக் கடந்த சபை அமர்வில் விவாதத்துக்கு எடுக்கப்படவில்லை.
இருப்பினும் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்கள், முதலமைச்சர் இடையேயான சந்திப்பில் தமிழ் அரசுக் கட்சி அதிருப்தியடைந்ததை அடுத்து தெரிவுக்குழுவைக் கோரும் பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படக்கூடும் என்று ஊகங்கள் வெளியாகியிருந்தன.
ஆனால் மாகாணசபையின் நாளைய அமர்வுக்கான நிகழ்ச்சி நிரலில் பிரேரணை சேர்க்கப்படவில்லை. ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை, கைவிடப்பட்டதாகியுள்ளதால் மீளவும் அந்தப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று வடக்கு மாகாண பேரவைச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-5)

**வீடு வாடகைக்குத் தேவை**
திருநெல்வேலி, கந்தர்மடம், நல்லூர் விரும்பத்தக்கது.
076 447 2090

**பதவி வெற்றிடம்**
திருநெல்வேலியில் இயங்கும் முன் பள்ளிக்கு முன்பள்ளி ஆசிரியை, கணக்கு பதிவாளர். (கணினி அறிவு அவசியம்) தொடர்பு - 077 386 7458

**வேலையாள்கள் தேவை**
கொழும்பில் இயங்கும் பிரபல வர்த்தக நிறுவனத்துக்கு Bill Clerk மற்றும் உதவியாள்கள் உடன் தேவை.
தங்குமிடம் / உணவு } இலவசம்
077 386 6250

கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 173
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 08.08.2017
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 97,380,408/-
C 14 34 40 43
08 29 68 75
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB LOT ... 1919

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம்: 589 வர்ணம்: மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 08.08.2017
வெற்றி இலக்கங்கள்
06 38 48 61 Q
04 37 52 55
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ.31,915,395/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB LOT ... 1919

ராசி அதிர்ஷ்டம்
திகதி: 08.08.2017
வெற்றி வாரம்: 2169
வர்ணம்: நீலம்
மகரம்
வெற்றி இலக்கங்கள்: 22 33 38 47
வெள்ளிக்கிழமை வெற்றிப் பொதி: ரூ. 20, 00, 000/=
இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள்
03 34 56 60
11.08.2017 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு: 1919

# மரண அறிவித்தல்கள்

## பழனியப்பா அருளார்அமலன்



வேலணை, கரம்பொன், கொன்றையைப் பிறப்பிடமாகவும் சுவிஸ் Zurich, zumikon ஐ வசிப்பிடமாகவும் கொண்ட பழனியப்பா அருளார் அமலன் கடந்த (05.08.2017) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பழனியப்பா சிவபாக்கியம் தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை கனகமணி தம்பதியரின் மருமகனும் கனகாம்பிகை (ராணி சுவிஸ்) இன் கணவரும் அருளார் அமுதன் (U.K.), அருளாரூரன்(U.K.), அருளார் நிமலன் (சுவிஸ்), அருளார் அகிலன் (சுவிஸ்), அருள்கௌரி (U.K.) ஆகியோரின் அன்புச்சகோதரரும் இராசரத்தினம் (ஆசிரியர்), சித்திராதேவி (U.K.), சுகந்தி (U.K.), ஜெயராணி (சுவிஸ்), சந்திரிக்கா (சுவிஸ்), கிஷ்ணகுமார் (U.K.) ஆகியோரின் மைத்துனரும் சுமதியின் சகலனும் ரஜீவ் (U.K.), ரமேஷ் (U.K.), ரூபேஷ் (U.K.) ஆகியோரின் சிறிய தந்தையும் கிருசாந்த் (U.K.), கீர்த்தனா (U.K.), சங்கவி (U.K.), யதுர்சா (சுவிஸ்), யர்னிதன் (சுவிஸ்), அபிராம் (சுவிஸ்), அக்ஷயன் (சுவிஸ்) ஆகியோரின் பெரியப்பாவும் பிரவீனா, பிரணாஷ், திருஜன், மயூரதன் ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.08.2017) புதன்கிழமை பிற்பகல் 5.30 மணிக்கு (இலங்கை நேரம்) ZURICH, SWITZERLAND இல் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

WALTIKON 5
8126, ZUMIKON,
ZURICH, SWTZERLAND.
சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.

தகவல்: குடும்பத்தினர்.
இராசரத்தினம் - 077 304 8253,
கனகாம்பிகை (சுவிஸ்) - 0041 443 922 148

---

மலர்வு
17 . 08 . 1923



உதிர்வு
08 . 08 . 2017

## திருமதி இலட்சுமிப்பிள்ளை கணபதிப்பிள்ளை

08.08.2017 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் மனைவியும் பூபாலசிங்கம், கௌசலாதேவி, கோப்பெருந்தேவி ஆகியோரின் பாசமிகு தாயும் விஜயலக்குமி, அருட்செல்வம், கேதீஸ்வரநாதன் ஆகியோரின் மாமியும் வினோதினி, அருள்வேல், கிரிந்தினி, தவநிதி, பிரணவன், உமாவதனி, சிவாந்தி, மோகனதாஸ், கவிதா, கிசோக்குமார், கலைச்செல்வி, சாந்தகுமார், ஐங்கரன், அனுசா, குருபரன், பானதி ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் அரன், நிஷா, மதுஷன், வருண், பிரவின், சகாஷ், பிரிசா, ரிகிசா, வரிஷ்ணவன், காசினி, தியானா, துசானா, கஜோன், ஹேசிகயா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.08.2017) புதன்கிழமை மு.ப. 9 மணிக்கு ஆனைவிழுந்தான் மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மகன் (077 670 9928)

---

# வடமாகாண முதலமைச்சரின் அமைச்சின் அறிவித்தல்

வடமாகாண சபையின் கௌரவ முதலமைச்சர் தலைமையில் நடைபெற்ற யாழ். மாவட்ட சிவில் பாதுகாப்புக் குழுக்கூட்டத்தில் இலங்கை பொலிஸ் திணைக்களத்தினால் பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டதாகவும் எனினும் தமிழ் பேசும் விண்ணப்பதாரர்களிடமிருந்து போதிய விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாமையினால் இவ்விண்ணப்ப முடிவுத் திகதி நீடிக்கப்பட்டுள்ளதாகவும் வடமாகாண பிரதி பொலிஸ்மா அதிபரினால் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

இதனை இலகுபடுத்தும் நோக்கில் தற்போது வடமாகாணத்தில் உள்ள வேலையற்ற திருமணமாகாத இளைஞர் யுவதிகள் இப்பதவிகளுக்கு விண்ணப்பிப்பதன் மூலம் வேலைவாய்ப்பினைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன் எமது மாகாணத்தில் தமிழ் பேசும் காவற்துறையின் (பொலிஸ்) ஆளணியினை அதிகரித்து மக்களுக்கு சட்டத்தையும் ஒழுங்கினையும் பாதுகாக்கும் உன்னத சேவையினை வழங்கமுடியும் என்பதனாலும் பொருத்தமான கல்வித் தகைமை மற்றும் ஏனைய கல்வித் தகைமைகளைக் கொண்ட இளைஞர், யுவதிகள் இப்பதவிக்கு விண்ணப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

இதற்கென முதலமைச்சர் அமைச்சில் உருவாக்கப்பட்டுள்ள விசேட அலகில் இது தொடர்பான விரிவான விவரங்களையும் விண்ணப்பப் படிவங்களையும் 31.08.2017 வரை பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன், பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை முதலமைச்சர் அமைச்சுக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பிவைக்க முடியும் என்பதையும் அறியத் தருகின்றேன்.

| | | |
|---|---|---|
| 01 | பொலிஸ் உப பரிசோதகர் | • வயது 18 – 28 வருடங்கள்<br>• ஆகக்குறைந்தஉயரம் 5' 6''<br>• ஆகக் குறைந்த நெஞ்சு சுற்றளவு 32''<br>• ஆகக்குறைந்தகல்வித் தகைமைகள்<br>1) ஒரே அமர்வில் க.பொ.த(சா/த) பரீட்சையில் கணிதம் மற்றும் மொழி உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்தி அடைந்திருப்பதுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br>2) ஒரே அமர்வில் க.பொ.த(உ/த) பரீட்சையில் (பொதுப் பரீட்சை மற்றும் ஆங்கிலம் தவிர்ந்த) 03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் |
| 02 | பெண் பொலிஸ் உப பரிசோதகர் | • வயது 18 – 28 வருடங்கள்<br>• ஆகக்குறைந்தஉயரம் 5' 4''<br>• ஆகக்குறைந்தகல்வித் தகைமைகள்<br>1) ஒரே அமர்வில் க.பொ.த(சா/த) பரீட்சையில் கணிதம் மற்றும் மொழி உட்பட 04 பாடங்களில் திறமைச்சித்தி அடைந்திருப்பதுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br>2) ஒரே அமர்வில் க.பொ.த (உ/த) பரீட்சையில் (பொதுப்பரீட்சைமற்றும் ஆங்கிலம் தவிர்ந்த) 03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| 03 | பொலிஸ் கான்ஸ்டபிள் | • வயது 18 – 28 வருடங்கள்<br>• ஆகக்குறைந்தஉயரம் 5' 4''<br>• ஆகக்குறைந்த நெஞ்சுசுற்றளவு 30''<br>• ஆகக்குறைந்தகல்வித் தகைமை<br>1. இரு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் க.பொ.த (சா/த) பரீட்சையில் கணிதம் மற்றும் மொழி உட்பட 06 பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் முதல் அமர்வில் ஆகக் குறைந்தது 05 பாடங்களில் சித்தியடைந் திருத்தல் வேண்டும். |
| 04 | பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் | • வயது 18 – 28 வருடங்கள்<br>• ஆகக்குறைந்தஉயரம் 5' 2''<br>• ஆகக்குறைந்தகல்வித் தகைமை<br>1. இரு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் க.பொ.த (சா/த) பரீட்சையில் கணிதம் மற்றும் மொழி உட்பட 06 பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் முதல் அமர்வில் 05 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் |
| 05 | பொலிஸ் கான்ஸ்டபிள் சாரதி | • வயது 19 – 28 வருடங்கள்<br>• ஆகக்குறைந்தஉயரம் 5' 3''<br>• ஆகக்குறைந்த நெஞ்சுசுற்றளவு 30''<br>• ஆகக்குறைந்த கல்வித் தகைமை<br>1. இரு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் க.பொ.த (சா/த) பரீட்சையில் கணிதம் மற்றும் மொழி உட்பட 06 பாடங்களில் சித்தி யடைந்திருப்பதுடன் முதல் அமர்வில் ஆகக் குறைந்தது 05 பாடங்களில் சித்தியடைந் திருத்தல் வேண்டும்.<br>• தொழிற் தகைமைகள்<br>1) வாகனசாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருத்தல் (Light & Heavy vehicles)<br>2) வாகனசாரதி அனுமதிப்பத்திரம் பெற்றதன் பின்னர் ஆகக் குறைந்தது ஒருவருட சாரதி அனுபவம். |

இவ்வறிவித்தல் வடமாகாணசபையின் கௌரவ முதலமைச்சர் அறிவுறுத்தலுக்கு அமைவாகவும் அவரது அனுமதியுடனும் வெளியிடப்படுகின்றது.

**திருமதி ரூபினி வரதலிங்கம்,**
**செயலாளர், முதலமைச்சரின் அமைச்சு,**
**வடமாகாணம்.**

## ஆசியாவிலேயே...

இந்த இரும்புக் கனிமத்தைத் தோண்டியெடுப்பதற்காக ஒருசில உள்நாட்டு, வெளிநாட்டு நிறு வனங்கள் மேற்கொண்ட முயற்சி பிரதேசவாசிகளின் கடுமையான எதிர்ப்பால் ஏற்கனவே முறியடிக்கப்பட்டது. இலங்கை அரசு இந்தத் திட்டத்தில் நேரடியாக ஈடுபடுவதன் மூலம் தங்களுக்குஏராளமானதொழில்வாய்ப்புகள்கிடைக்குமென அவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

(உ)

**Lecturers Wanted (In Jaffna)**

| Course | Subjects |
|---|---|
| CIMA | Management Accounting (BA2 & P1) |
| | Organizational Management (E1) |
| CIM | All Subjects |


Call - 076 850 8894, 021 722 3444

## பதவி...

ரணையைக் கண்டு ஒடி ஒளியவில்லை.
நான் எனது பதவியிலிருந்து விலகவேண்டிய தேவை இல்லை. பதவி விலகல் கடிதமும் கொடுக்கமாட்டேன். முதலமைச்சருக்கு அதிகாரம் இருந்தால் அதைப் பயன்படுத்தி என்னை அமைச்சர் பதவியிலிருந்து நீக்கலாம்.
அவர் அவ்வாறு செய்தால் அதற்குரிய சட்டரீதியான பதிலடியை நான் கொடுப்பேன். அவர் நீதியரசர் என்றால் நான் சட்டத்தரணி என்பதை நினைவில் கொள்ளட்டும்" என்றார் அமைச்சர் டெனீஸ்வரன்.

(உ-5)

# மரண அறிவித்தல்



## பொன்னையா ஜெரேமியாஸ் நவரெட்ணம் (ஜெயம்)

யாழ்ப்பாணம் பாண்டியன்தாழ்வைப் பிறப்பிடமாகவும், குருசோ வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா ஜெரேமியாஸ் நவரெட்ணம் (ஜெயம்) 07.08.2017 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - பூரணம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான எஸ்தாக்கி (செல்லத்துரை) அந்தோனியாப்பிள்ளை (நேசம்) தம்பதியரின் அன்புமருமகனும் எலன்யசித்தாவின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான டேவிட், மொறிஸ் மற்றும் மாகிறேற், இரட்ணசிங்கம், ஆகியோரின் அன்புச்சகோதரனும் குயின், ஆன், மனோகரன், கருணாகரன், குலேந்திரன், பொளின், மன்ராணி, றூபா காலஞ்சென்ற கோமகன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் டேவிட், யேசுதாசன், ராணி, குமுதினி, சகாயதேவி, ஸ்சனிஸ்லொஸ் ஆகியோரின் சகலனும் றொபேட், றெஜினோல்ட், றேணுகா, சுரேஸ், அனோஜா, சுட்டி, வத்சலா, றொஷாணி, தயானி, றிச்சேட், அமலினி ஆகியோரின் சித்தப்பாவும் ஸ்ரெபானியா, ஸ்செபோன் ஆகியோரின் பெரியப்பாவும் யூடிற்றா, ஜெனிற்றா, யூட், அஜித், யூவியா, ஜயனன், மெலீற்றல், மெலீற்றா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக இன்று (09.08.2017) புதன்கிழமை பி.ப. 3 மணியளவில் இல. 206 குருசோ வீதயில் உள்ள அவரின் இல்லத்திலிருந்து இரங்கல் திருப்பலிக்காக தூய மரியன்னை பேராலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு பின்பு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**206, குருசோ வீதி.**
**யாழ்ப்பாணம்.**


**தகவல்: குடும்பத்தினர்.**
**077 765 7852, 077 391 5036**

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர்

## பொ. கிருஸ்ணகுமாரன்

அஞ்சலர் (குபாலகம் - நெடுந்தீவு)



தாய் மடியில் 27.03.1965 — கர்த்தரின் மடியில் 10.07.2017

உம் நிமிர்ந்த நடையும் கம்பீர தோற்றமும்
வாய்க்குள் பதுங்கி முகத்தில் மிளிரும் உம்
அழகான புன்சிரிப்பை இனி நாம் யாரிடம்
சென்று பார்ப்போம் ?

கண்டிப்பான நேரத்தில் தந்தையாகவும்
பாசமான உரையாடலில் தோள் கொடுக்கும்
தோழனாகவும் இருந்தீரே....
இனி எங்கு சென்று
ஈடு செய்ய உம் இழப்பை ?

எம்மை தவிக்க விட்டு பாதியிலே
கர்த்தர் ஏன் எடுத்தார்?
விடை தெரியாது தவிக்கின்றோம்...
உங்களை முகம் முகமாய் சந்திக்கும் வரை

ஆறுதல் அடைய முடியாது உங்களோடு நாம்
கதைத்த அந்த இறுதி நாளில் உங்கள் முகம்
முழுதும் மலர்ந்து நாம் கண்ட உம் சிரிப்புடன்
நெஞ்சில் நிறைந்துள்ள நினைவுகளுடன்
உங்கள் ஆன்ம இளைப்பாற்றிற்காக
ஆண்டவரை வேண்டி நிற்கின்றோம்...

அன்பு அப்பா குட்டி,
மனைவி, பிள்ளைகள்.

அன்னாரின் பிரிவுச் செய்தியறிந்ததும் உடன் வந்து துக்கம் பகிர்ந்து ஆறுதல் செய்தி அளித்து ஆக வேண்டிய காரியங்களை முன்னெடுத்தாற்றிய நண்பர்கள் உறவுகள், அயலவர்கள், குருமார்கள், பாடசாலை சமூகத்திற்கும் மரணச்சடங்கில் கலந்து கொண்டவர்கள் மலர்வளையங்கள், பெனர்கள், அஞ்சலி பிரசுரங்கள் மூலம் தங்கள் ஆதங்கங்களை வெளியிட்டோர், தூரதேசங்களிலிருந்து தொலைபேசி மூலம் ஆறுதல் வார்த்தை அளித்தோர் சகல சபை அத்தியட்சகர்மார், குருமார், உடுவில் மகளிர் கல்லூரி பாடசாலை சமூகம், நெடுந்தீவு அஞ்சல் சமூகம், நெடுந்தீவு வாழ் மக்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் இன்று (09.08.2017) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். நன்றி செலுத்தும் வழிபாட்டிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.


**தயவு செய்து இவ்வறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.**

**51/29, ஆலய வீதி, உடுவில்.**
**021 224 2849**

**குடும்பத்தினர்.**

# 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 19.10.1921 — ஆண்டவன் அடியில் 02.09.2008



அமரர் **அப்புத்துரை வைரமுத்து**

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில் 23.04.1924 — ஆண்டவன் அடியில் 10.07.2017



அமரர் **நாகரத்தினம் வைரமுத்து**

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

பாசத்தின் உறைவிடமாய் அன்பின் திருவுருவமாய் கருணையின் இருப்பிடமாய் குடும்பத்தின் ஒளிவிளக்காய்
எங்கள் அனைவரையும் வழிநடத்திய எங்கள் அன்பு தெய்வங்களே
எத்தனை காலங்கள் போனாலும் உங்கள் நினைவுகள் எம்மைவிட்டு விலகாது
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**நீர்வேலி மேற்கு,**
**மாசிவன் றோட், நீர்வேலி.**

**குடும்பத்தினர்.**

## கலாவிடம்...

அனுமதி கிடைத்ததும் அவர்களிடம் வாக்குமூலம் பெறப்படும் என்று அரச சட்டவாதி நாகரத்தினம் நிஷாந்த் ஊர்காவற்றுறை நீதிவான் மன்றில் நேற்று அறிவித்தார்.

இந்த வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஏ.எம்.எம். றியாழ் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

அரச சட்டவாதி நாகரத்தினம் நிஷாந்த் மற்றும் சந்தேகநபரான மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஜயசிங்க சார்பில் மூன்று சட்டத்தரணிகள் மன்றில் முன்னிலையாகினர். சந்தேகநபர் மன்றில் முற்படுத்தப்பட்டார். வழக்கு விசாரணைகள் ஆரம்பமானது.

**சுவிஸ்குமாரை சிறிகஜன் தடுத்து வைத்திருந்தார்**

"அந்தக்காலப் பகுதியில் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய உப பொலிஸ் பரிசோதகர் இரானிடம் புங்குடுதீவு மாணவி கொலை வழக்கின் முதன்மைச் சந்தேகநபரான சுவிஸ்குமார் என அழைக்கப்படும் மகாலிங்கம் சசிக்குமார் என்பவரை கைது செய்ய வேண்டும் எனவும், அவர் வெளிநாடு தப்பிச் செல்ல முடியாதவாறு கட்டுநாயக்க வானூர்தி நிலையப் பொலிஸாருக்கு தகவல் வழங்க வேண்டும் எனவும் சந்தேகநபரான மூத்த பொலிஸ்மா அதிபர் உத்தரவிட்டவர். சுவிஸ்குமார் என்பவரை தேடப்படும் சந்தேகநபராகக் குறிப்பிட்டு அவரை கைது செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரியவர்தான் லலித் ஏ ஜெயசிங்க . அந்தக் காலப் பகுதியில் யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய உப பொலிஸ் பரிசோதகரான சிறிகஜன் என்பவரே சுவிஸ்குமார் என்பவரை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்திருந்தார்.

**காணொலி தொடர்பில் 2 வருடமாக ஏன் விசாரணை நடத்தவில்லை?**

அந்தக்காலப் பகுதியில் பிரதி அமைச்சராக இருந்த விஜயகலா மகேஸ்வரன் சுவிஸ்குமார் என்பவரை பொது மக்கள் பிடித்து வைத்து இருந்த இடத்துக்கு சென்றிருந்தார். அது தொடர்பான காணொலிகள் இணையங்களில் கடந்த இரண்டு வருட காலமாக உள்ளன. அவை பற்றி குற்றப் புலனாய்வு துறையினர் இதுவரை விசாரணைகளை முன்னெடுக்கவில்லை.

அதேவேளை லலித் ஏ ஜெயசிங்க கடந்த இரண்டு வருடங்களில் வெளிநாடுகள் சென்று வந்துள்ளார். தப்பிச்செல்ல விரும்பியிருந்தால் அவர் வெளிநாடுகளில் தங்கியிருந்திருக்க முடியும். அது மட்டுமின்றி குற்றப்புலனாய்வுத் துறையினர் வாக்குமூலம் பெற அழைத்த போதிலும் தாம் கைது செய்யப்படலாம் எனத் தெரிந்திருந்தும் அவர் வாக்குமூலம் வழங்கச் சென்றிருந்தார்.

எனவே லலித் ஏ ஜெயசிங்க மீது குற்றச்சாட்டுக்கள் இல்லாத காரணத்தால், அவரைப் பிணையில் விடுவிக்க வேண்டும்" என்று அவர் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணிகள் மன்றில் விண்ணப்பம் செய்தனர். சந்தேகநபரின் சட்டத்தரணிகளால் முன்வைக்கப்பட்ட விண்ணப்பத்துக்கு கடும் ஆட்சேபனையை அரச சட்டவாதி நாகரத்தினம் நிஷாந்த் தெரிவித்தார்.

**சுவிஸ்குமார் தப்பிச்செல்ல வைக்கப்பட்டார்**

"புங்குடுதீவு மாணவி கொலை வழக்குடன் தொடர்புடைய 9ஆவது எதிரி யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் இருந்து தப்பிச் சென்றார் என்பதனைவிட தப்பிச் செல்ல வைக்கப்பட்டார் என்பதே சரியான வார்த்தை ஆகும் என நினைக்கிறேன்.

சுவிஸ்குமாரைத் தப்பிச் செல்ல வைத்தவர் அந்தக் காலப் பகுதியில் வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஏ ஜெயசிங்க எனும் இந்தச் சந்தேகநபர் என நியாயமான சந்தேகத்தால், அவர் மாணவி கொலை வழக்கில் தலையீடு செய்யக் கூடிய சந்தர்ப்பம் இருக்கலாம் எனும் காரணத்தால் சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைவாக, வடக்கு மாகாணத்திலிருந்து இடமாற்றம் செய்யப்பட்டார்.

சுவிஸ்குமார் தப்பிச் செல்ல வைக்கப்பட்டமைக்கு உதவினார் என இந்த வழக்கின் சந்தேகநபர் மீது நியாயமான சந்தேகம் எழுந்தமையால், அவரை நீதிமன்றில் முற்படுத்தி வாக்குமூலம் பெற்று சாட்சியங்களைப் பெறுமாறு 2017ஆம் ஆண்டு ஜுலை மாதம் 17ஆம் திகதி சட்டமா அதிபர் கடிதம் மூலம் குற்றப்புலனாய்வுத் துறையினருக்கு ஆலோசனை வழங்கினார்.

எனவே இந்த வழக்கில் சந்தேகநபராக உள்ளவர் குற்றப் பகிர்வுப் பத்திரம் தாக்க செய்யப்படுவதற்கு நியாமான சந்தேகம் உள்ளதாலும், இந்த வழக்குத் தொடர்பில், சாட்சியங்கள், ஆதாரங்களில் தலையீடு செய்வதற்கு உரிய நியாயமான சந்தேகம் உள்ளமையாலும் இவரை கைது செய்து குற்றப் புலனாய்வு துறையினர் நீதிமன்றில் முற்படுத்தியுள்ளனர்.

**விளக்கமறியல் காலம் தண்டனைக் காலமல்ல**

அத்துடன் இந்தச் சந்தேகநபர் இலங்கை பொலிஸ் தர வரிசையில், நான்காம் கட்ட அதிகாரிகளுக்குள் ஒருவர். எனவே சாட்சியங்களில் அவரின் தலையீடு இருக்கும். இந்த வழக்குத் தொடர்பில் பொலிஸ் சாட்சியங்களும், சிவில் சாட்சியங்களும் உண்டு. அந்தச் சாட்சியங்களின் வாக்குமூலங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

விளக்கமறியல் காலத்தை தண்டனைக் காலமாகக் கருதாது, விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காகவும், சமூகத்தில் இருந்து ஒதுங்கி இருப்பதற்காகவும், சாட்சி ஆதாரங்களில் தலையீடு செய்யாமல் இருப்பதற்காகவுமான காலப் பகுதியாகக் கருதலாம்.

**புதிய சாட்சியங்கள் இணைக்கப்படும்**

கடந்த தவணையின் போது மன்றினால் இடப்பட்ட கட்டளைகள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டுள்ளன. அதேவேளை இந்த வழக்கில் மேலும் சாட்சியங்கள் ஆதாரங்கள் சட்டமா அதிபரால் புதிதாக இணைக்கப்படவுள்ளன.

எனவே வழக்கு விசாரணைகள் தொடர உள்ள நிலையில் , சந்தேகநபருக்கு பிணை வழங்குவதற்கு ஆட்சேபனை தெரிவிக்கிறேன்" என அரச சட்டவாதி மன்றில் விண்ணப்பம் செய்தார்.

**இராஜாங்க அமைச்சர், எம்.பியிடம் விசாரணை**

இந்த வழக்குத் தொடர்பில் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரிடம் குற்றப் புலனாய்வுத் துறையினர் வாக்குமூலம் பெறுவதற்கு சபாநாயகரிடம் அனுமதி கோரியுள்ளனர். சபாநாயகரின் அனுமதி கிடைத்ததும் அவர்கள் இருவரின் வாக்குமூலங்களும் பதிவு செய்யப்படும் எனவும் அரச சட்டவாதி மன்றில் தெரிவித்தார்.

**சிறையிலுள்ள சிந்தக்கவிடம் வாக்குமூலம் பெற அனுமதி**

இந்த வழக்குடன் தொடர்புடைய கொடிகாமம் பொலிஸ் நிலைய முன்னாள் பொறுப்பதிகாரி சிந்தக்க பண்டாரவிடம் சிறைச்சாலையில் வைத்து வாக்குமூலம் பெற நீதிமன்ற அனுமதியைக் குற்றப் புலனாய்வுத் துறையினர் கேட்ட போது, நீதிவான் அதற்கு அனுமதி வழங்கினார்.

அந்தப் பொலிஸ் அதிகாரி சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய போது பொலிஸ் நிலையத்தில் சுமணன் எனும் இளைஞனை சித்திரவதை செய்த குற்றத்துக்காக அவருக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் 10 வருட கடூழிய சிறைத் தண்டனை விதித்துள்ளது.

**நியாயாதிக்கம் உண்டா ?**

"இந்த வழக்கை விசாரணை செய்யும் நியாயாதிக்கம் ஊர்காவற்றுறை நீதிவான் மன்றுக்கு உண்டா? எனும் நியாயமான சந்தேகம் மன்றுக்கு எழுந்துள்ளது.

இந்த மன்றின் நியாயாதிக்கத்துக்குட்பட்ட பகுதியில் குற்றச்செயல் நடைபெற்றதா? அல்லது இந்த வழக்குடன் தொடர்புடைய குற்றசெயலின் பாகங்கள் ஏதேனும் இந்த மன்றின் நியாயதிக்கத்துக்குள் நடைபெற்றதா?என்பது தொடர்பில் விரிவான அறிக்கை ஒன்றை அடுத்த தவணையில் குற்றப்புலனாய்வுத் துறையினர் மன்றில் சமர்ப்பிக்க வேண்டும்" என்று நீதிவான் உத்தரவிட்டார்.

**முன்னாள் டிஐஜி வாக்குமூலமளிக்க விருப்பம்**

புங்குடுதீவு மாணவி கொலை நடந்த காலப் பகுதியில் யாழ்.மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபராக இருந்தவரும் தற்போது சப்பிரகமுவர் பிரதி பொலிஸ்மா அதிபராகக் கடமையாற்றும் பெரேரா தானாக முன் வந்து சுவிஸ்குமார் தப்பிச் செல்ல உதவியமை தொடர்பான வழக்கு விசாரணையில் சாட்சியம் வழங்கப் போவதாக மன்றில் அனுமதி கோரினார்.

அதற்கு சந்தேகநபர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் கடும் ஆட்சேபனை தெரிவித்தனர். இந்தச் சாட்சியம் ஏற்கனவே தயாரிக்கப்பட்ட வாக்குமூலத்தை மன்றில் வழங்க உள்ளார் என தெரிவித்து சந்தேகநபர் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணிகள் ஆட்சேபனை தெரிவித்தனர். அத்துடன் சாட்சியமளிக்க வந்துள்ளவர் பொலிஸ் சீருடையில் கடமை நேரத்தில் சப்பிரகமுவவில் இருந்து நீதிமன்றுக்கு வந்துள்ளார் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள்.

அதற்கு அரச சட்டவாதி ஆட்சேபனை தெரிவித்து, குறித்த சாட்சி தானாக முன்வந்து சாட்சியமளிக்க வந்துள்ளார். எனவே அவர் சாட்சியமளிக்க மன்று அனுமதிக்க வேண்டும் என விண்ணப்பம் செய்தார்.

**வாக்குமூலம் வழங்க உரிமை உண்டு**

இந்த வழக்கை விசாரணை செய்யும் நியாயாதிக்கம் இந்த நீதிமன்றுக்கு உண்டு என நீதிமன்றம் முடிவு செய்த பின்னரே இந்த வழக்குத் தொடர்பில் வாக்குமூலங்களை நீதிமன்றம் பதிவு செய்யும்.

குற்றச் சம்பவம் தொடர்பில் நீதிமன்றில் முறைப்பாடாகவோ , வாக்குமூலமாகவோ தெரிவிக்கும் உரிமை அனைவருக்கும் உண்டு. அந்த உரிமையை நீதிமன்றம் தடுக்காது. அதேவேளை நீதிமன்றுக்கு வாக்குமூலம் வழங்க வருபவர் இவ்வாறான உடையில்தான் வர வேண்டும் எனும் சட்ட வரையறை இல்லை. எனவே இந்த வழக்குத் தொடர்பில் வாக்குமூலம் வழங்க விரும்புபவரின் சாட்சியம் பதிவு செய்யப்படும். ஆனாலும் இந்த வழக்கை விசாரணை செய்வதற்கு நீதிமன்றுக்கு நியாயாதிக்கம் உண்டு எனும் முடிவை எட்டிய பின்னரே வாக்குமூலங்கள் பதிவு செய்யப்படும்.

**22ஆம் திகதி வரை விளக்கமறியல்**

அதனைத் தொடர்ந்து சந்தேகநபரை எதிர்வரும் 22ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் கட்டளையிட்டார்.

**இரண்டு மணிநேர விசாரணை**

இந்த வழக்கு விசாரணை ஊர்காவற்றுறை நீதிவான் மன்றில் நேற்று சுமார் 2 மணிநேரம் நடைபெற்றது. சந்தேகநபரை பிணையில் விடுவிக்க வேண்டும் என சந்தேகநபர் சார்பில் முன்னிலையான மூன்று சட்டத்தரணிகளும் கடும் வாதங்களை முன்வைத்தனர்.

**சிறிகஜன் முற்படுத்தப்படவில்லை**

இந்த வழக்கில் மற்றுமொரு சந்தேகநபரான யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் முன்னர் உப பொலிஸ் பரிசோதகராகக் கடமையாற்றிய சுந்தரேசன் சிறிகஜன் நேற்று மன்றில் முற்படுத்தப்படவில்லை.

அவருக்கு எதிராக நீதிமன்றால் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதுடன் அவர் பொலிஸ் சேவையிலிருந்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

**சந்தேகநபருக்கு சிறப்பு ஒழுங்கு**

இந்த வழக்கின் முதன்மைச் சந்தேகநபரான லலித் ஏ ஜெயசிங்க நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட வேளை அவருக்கு நீதிமன்றக் காவலில் தடுத்து வைக்கப்பட்டிருந்த வேளை ஏனைய விளக்கமறியல் கைதிகளுடன் நீதிமன்றச் சிறை கூடத்தில் தடுத்து வைக்கப்படாமல், நீதிமன்ற சிறை கூடத்துக்கு வெளியில் கதிரை ஒன்றில் அமர வைக்கப்பட்டிருந்தார். அதேவேளை அவரை நேற்று நீதிமன்றில் பார்வையிட வந்திருந்த மூன்று இளைஞர்கள் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் முன்னிலையில் சந்தேகநபரின் காலில் விழுந்து ஆசிர்வாதம் பெற்றுக் கொண்டனர். (வ-37,26,106)

## கடலில்...

இந்தியாவின் ஜெகதாப்பட்டினம் மற்றும் நாகப்பட்டினம் பகுதிகளைச் சேர்ந்த மீனவர்களே கைது செய்யப்பட்டனர். நேற்றுமுன்தினம் இரவு 10 மணி முதல் அதிகாலை 2 மணிவரையிலான நேரத்தில் இவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கைது நடவடிக்கையின்போது கடற்படைச் சிப்பாய் ஒருவர் மீனவர்களால் பிடித்துச் செல்லப்பட்டார் என்று சொல்லப்பட்டபோதும் கடற்படையினர் அதனை மறுத்தனர். அவ்வாறு ஒருசம்பவம் இடம்பெறவில்லை என்று தெரிவித்தனர்.

தம்மை கைது செய்யும் நடவடிக்கையின் போது கடற்படையினரின் படகில் இருந்து மீனவர் படகுக்குள் குதித்த இரு கடற்படையினரில் ஒருவர் தவறிக் கடலில் வீழ்ந்தார் என்றும் அவரையே தமது மீனவர்கள் கடத்திச் சென்றுவிட்டனர் என்று கடற்படையினர் தவறாகக் கருதிவிட்டனர் என்றும் இந்திய மீனவர்கள் தெரிவித்தனர்.

காணாமற்போன கடற்படைச் சிப்பாய் கிடைக்காவிட்டால் மீனவர்கள் யாரும் கரை திரும்ப முடியாது என்று கடற்படையினர் தம்மை மிரட்டினர் என்றும் அவர்கள் தெரிவித்தனர். காணாமற்போன தமது சிப்பாயை மீட்பதற்காக கடற்படையினர் நீண்டநேரம் தேடுதல் நடத்தினர். அவரை மீட்ட பின்னரே படகுகளையும் மீனவர்களையும் கரைக்குக் கொண்டு வந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதனால் அதிகாலையில் கைது செய்யப்பட்ட மீனவர்கள் நேற்றிரவே மீன்பிடி மற்றும் நீரியல் வளத் திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டனர். ஆனால், அதிகளவான மீனவர்கள் என்பதனாலேயே தாமதம் ஏற்பட்டது என்று கடற்படையினர் தெரிவித்தனர்.

கைது செய்யும்போது தம்மைக் கடற்படையினர் பலமாகத் தாக்கினர் என்று மீனவர்கள் குற்றஞ்சாட்டினர். அவர்களின் கை, கால்களில் வீக்கங்களையும் சிறு காயங்களையும் நேரில் அவதானிக்க முடிந்தது என்று உதயன் செய்தியாளர் தெரிவித்தார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் ஊர்காவற்றுறை பதில் நீதிவானிடம் முற்படுத்தப்பட்டு 14 நாள்கள் விளக்க மறியலில் வைக்கப்பட்டனர். (உ-101)

## முகமூடி...

திருந்த 89 பவுண் தங்க நகைகளைக் கொள்ளையடித்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். இரவு 8.30 மணியளவில் வரணி, கரம்பைக்குறிச்சியில் சம்பவம் இடம்பெற்றது. வெளிநாட்டிலிருந்து வந்த குடும்பத்தினரைப் பார்த்து அளவளாவ அவரது உறவுப் பெண்ணும் குடும்பத்துடன் வந்திருந்தார். நேற்று முன்தினம் மாலை ஆண்கள் அனைவரும் கொடிகாமம் சென்றிருந்தனர். இரவு 8.30 மணிக்கு வாசல் கதவு தட்டப்படவே வீட்டிலிருந்தவர்கள் சென்று கதவைத் திறந்தனர். முகத்தை மூடி மறைத்துக் கட்டிய நிலையில் உள்நுழைந்த இருவர் அங்கிருந்த இருபெண்களின் கழுத்தில் கத்தியை வைத்துப் பயமுறுத்தி அவர்கள் அணிந்திருந்த நகைகளைக் கொள்ளையிட்டதுடன் வீட்டுக்குள்ளிருந்த நகைகளையும் அபகரித்துக் கொண்டு தப்பியோடியுள்ளனர். திருட்டுப்போன நகைகளின் பெறுமதி 40 லட்சம் ரூபா வரை இருக்கலாமெனத் தெரிவிக்கப்பட்டது.

திருட்டுச் சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (உ-9)

## 12 மணி...

தமது படகில் ஐவர் இருந்தனர் என்றும் கடற்படைப் படகு மோதியதில் தாம் இருவரும் கடலில் வீழ்ந்தனர் என்றும் அவர்கள் உதயன் பத்திரிகையிடம் தெரிவித்தனர்.

"நாங்கள் கடலில் வீழ்ந்துவிட்டோம் என்று தெரிந்தும் எம்மைக் காப்பாற்றாமல் இலங்கைக் கடற்படையினர் சென்றுவிட்டனர்" என்றார்கள் அவர்கள். அவர்கள் வந்த படகில் இருந்த ஏனைய மூவரும் இவர்கள் இருவரையும் நீண்ட நேரம் தேடினர். எனினும் கண்டுபிடிக்க முடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

கடலில் வீழ்ந்தவர்களில் ஒருவர் சுமார் 4 மணிநேரம் நீந்திய பின்னர் நயினாதீவுக் கரையை அடைந்தார். மற்றையவர் 12 மணிநேரம் நீந்திய நிலையில் உள்ளூர் மீனவர்களின் படகைக் கண்டு உதவிகோரியதால் உயிர் பிழைத்தார். இருவரும் பின்னர் கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர் என்று உள்ளூர் மீனவர்கள் தெரிவித்தனர்.

கடலில் வீழ்ந்த அவர்கள் இருவரையும் தேடிய அவர்களது படகில் இருந்தவர்கள் அவர்களைக் கண்டுபிடிக்க முடியாத நிலையில் நேற்றுக் காலையில் இலங்கைக் கடல் எல்லைக்குள் நுழைந்த நிலையில் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

"எம்மோடு வந்தவர்களின் நிலை என்ன என்று தெரியாத நிலையில் நாம் திரும்பிச் செல்ல விரும்பவில்லை. அதனால் நாங்களாகவே கடற்படையினரிடம் வந்துசேர்ந்தோம்" என்று தெரிவித்தனர்.

தமது டோறா படகு மீனவர்களின் படகைமோதியது என்ற குற்றச்சாட்டைக் கடற்படையினர் மறுத்தனர். இலங்கைக் கடற்பகுதிக்குள் நுழைந்த இந்திய மீனவர்களே கைதுசெய்யப்பட்டனர் என்று அவர்கள் கூறினர். கடற்படையினரிடம் இருந்து தப்பிப்பதற்காக இந்த இருவரும் கடலில் குதித்திருக்கலாம் என்றும் அவர்கள் தெரிவித்தனர். (உ-101)

# சென். ஆன்ஸ் மகுடம் சூடியது

யாழ்ப்பாணம், ஓக. 9

புங்குடுதீவு நசரேத் விளையாட்டுக் கழகம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் வலைப்பாடு சென். ஆன்ஸ் அணி சம்பியனானது.

புங்குடுதீவு நரரேத் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வலைப்பாடு சென். ஆன்ஸ் அணி மோதியது. இந்த ஆட்டத்தில் சென். ஆன்ஸ் அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

சிறந்த வீரனாக வலைப்பாடு சென். ஆன்ஸ் விளையாட்டுக் கழக அணியின் லீனஸ் தெரிவானார். சிறந்த கோல் காப்பாளராக நவிண்டில் கலைமதி அணியின் நிறஞ்சன் தெரிவானார். (ம-23)

# சாந்தை, குமரநகர் அணிகள் அசத்தல்

யாழ்ப்பாணம், ஓக. 9

நாவற்குழி சரஸ்வதி சனசமூக நிலையமும், விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் தாச்சித் தொடரில் சாந்தை விளையாட்டுக் கழக 'பி' அணி, குமரநகர் விளையாட்டுக் கழக 'பி' அணி என்பன அடுத்த சுற்றுக்கு தகுதிபெற்றன.

குறித்த கழக மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் குமரநகர் விளையாட்டுக் கழக 'பி' அணியை எதிர்த்து வளர்மதி விளையாட்டுக் கழக அணி மோதியது. 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் குமரநகர் அணி வெற்றிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற ஆட்டத்தில் சாந்தை விளையாட்டுக் கழக 'பி' அணியை எதிர்த்து கைதடி உதய சூரியன் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் சாந்தை விளையாட்டுக் கழக பி அணி 10:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ம-23)



# ஞானம்ஸ் அணி மகுடம் சூடியது

யாழ்ப்பாணம், ஓக. 9

கொம்பந்தறை நெற்கொழு கழுகள் விளையாட்டுக் கழகம் நடத்திய துடுப்பாட்டத் தொடரில் கிண்ணத்தைக் கைப்பற்றியது கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகம்.

கழுகுகளின் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பருத்தித்துறை வீனஸ் விளையாட்டுக் கழகம் மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய ஞானம்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 8 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 76 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக பிரகாஸ் 32 ஓட்டங்களையும், ரஜீபன் 15 ஓட்டங்களையும், ஜெனி 11 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் பகீ 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.

77 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய வீனஸ் விளையாட்டுக் கழகம் 5.1 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 46 ஓட்டங்களை மட்டுமே பெற்று 30 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அதிகபட்சமாக ராஜா 28 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் சேந்திரன் 3 இலக்குகளையும், ரஜீபன் மற்றும் ஜென் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக பிரகாஸ் தெரிவு செய்யப்பட்டார்.

(ம-108)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஓக. 9

நாவற்குழி சரஸ்வதி சனசமூக நிலையமும், விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 7.15 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கைதடி விநாயகர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மறுமலர்ச்சி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

இரவு 8.15 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உதயசூரியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

## எறிபந்தாட்ட பயிற்சி முகாம்

வடமாகாண கல்வி திணைக்களத்தினால் எறிபந்தாட்ட விளையாட்டுத் தொடர்பில் தெரிவு செய்யப்பட்ட உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கான வதிவிட பயிற்சி முகாமொன்று மன்னார் ஆசிரியர் வள நிலையத்தில் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது.

செப்ரெம்பர் மாதத்தில் எறிபந்தாட்ட நடுவர் பரீட்சை மற்றும் பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட தொடர்கள் நடைபெறவுள்ளன. இந்தப் பின்னணியிலேயே இந்த முகாம் நடைபெறுகிறது. 30 உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் 20 மாணவர்கள் நிகழ்வில் கலந்து கொள்கின்றனர். (ம-422)

# ஐக்கியம் அணி முன்னேற்றம்



யாழ்ப்பாணம், ஓக. 9


திக்கம் சனசமூக நிலையம் தனது வைர விழாவை முன்னிட்டு நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் மன்னார் ஜோசவாஸ் நகர் ஐக்கிய அணி முன்னேற்றம் கண்டது.

திக்கம் சனசமூக நிலையத்தின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் மன்னார் ஜோசப்வாஸ் ஐக்கிய அணியை எதிர்த்து அண்ணா அணி மோதியது.

முதல் பாதியாட்டத்தின் 11ஆவது நிமிடத்தில் ஜோசப்வாஸ் ஐக்கிய அணி வீரர் ஜோன்சன் முதலாவது கோலைப் பதிவுசெய்தார். 20ஆவது நிமிடத்தில் அண்ணா முன்னேற்றக் கழகத்தின் வீரர் ஜெனிஸ்ரன் மற்றொரு கோலைப் பதிவுசெய்தார். முதல் பாதியின் முடிவில் இரு அணிகளும் தலா ஓர் கோலைப் பதிவுசெய்திருந்தன.

இரண்டாம் பாதியின் 10ஆவது நிமிடத்தில் ஐக்கிய அணி வீரர் டினுசன் கோலொன்றைப் பதிவுசெய்ய முடிவில் ஜோசப்வாஸ் நகர் ஐக்கிய அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-422)

# இறுதி டெஸ்ட் ஆட்டத்தில் கேரத்துக்கு கட்டாய ஓய்வு



இந்திய அணியுடனான இறுதி டெஸ்ட் ஆட்டத்தில் இலங்கை கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளர் ரங்கன கேரத்துக்கு கட்டாய ஓய்வு வழங்கப்பட்டுள்ளது.

ரங்கன கேரத்துக்கு உபாதைகள் எதுவும் இல்லை எனவும் தொடர்ச்சியாக பந்துவீசி வருகின்ற காரணத்தாலும், அடுத்து பாகிஸ்தான் தொடர் நடைபெறவுள்ளதாலும் இவற்றைக் கருத்தில் கொண்டு சிறிது ஓய்வு வழங்கும் நோக்கிலேயே இறுதி டெஸ்ட் ஆட்டத்தில் இருந்து கேரத் விடுவிக்கப்பட்டார் என்றும் தெரியவருகிறது.

"வீரர்களை சரியாக முகாமைத்துவப்படுத்த வேண்டியுள்ளது. நாம் எந்தவொரு வீரரையும் இழக்க விரும்பவில்லை" என இலங்கை கிரிக்கெட் சபையின் முகாமையார் அசங்க குருசிங்க தெரிவித்துள்ளார்.

வேகப்பந்து வீச்சாளர் நுவான் பிரதீப், காயம் காரணமாக முன்னதாக விலகியிருந்த நிலையில் தற்போது கேரத்தும் விலகியமையானது இலங்கை அணிக்கு கடும் பின்னடைவைக் கொடுக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இந்த ஆட்டத்தில் இந்திய அணியின் சகலதுறை வீரர் ஜடேயாவுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


(ம)



பிரேசிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் கடந்த வருடம் ஒலிம்பிக் தொடர் நடைபெற்றது. இந்தத் தொடருக்காக கட்டப்பட்ட விளையாட்டுத் தொகுதியின் ஒரு பகுதியின் தற்போதைய ஒளிப்படமே இது. உரிய பராமரிப்பு இல்லாமல் பெரியளவில் கட்டுமானங்கள் சேதமடைந்து உள்ளன என்று பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் செய்தி வெளியிட்டது. (ம)

# பந்துவீச்சு, சகலதுறை முதலிடத்தில் ஜடேயா

## சகிப்பின் நீண்டகால ஆதிக்கம் முடிவுக்கு



பன்னாட்டு கிரிக்கெட் சபையின் டெஸ்ட் ஆட்டங்களுக்கான தரப்படுத்தலில் பந்துவீச்சு, சகலதுறை என்று இரு பிரிவிலும் முதலிடம் பிடித்துள்ளார் இந்திய அணியின் சகலதுறை வீரர் ஜடேயா.

**பந்துவீச்சுத் தரப்படுத்தல்**

பந்துவீச்சைப் பொறுத்தவரை 893 புள்ளிகளுடன் ஜடேயா முதலிடத்தில் உள்ளார். இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் அண்டர்சன் 860 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும், இந்திய அணியின் பந்துவீச்சாளர் ரவிச்சந்திரன் அஸ்வின் 842 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும், ஆஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஹசில்வூட் நான்காவது இடத்திலும், இலங்கை அணியின் ரங்கன கேரத் ஐந்தாவது இடத்திலும் உள்ளனர்.

**சகலதுறைத் தரப்படுத்தல்**

சகல துறைத் தரப்படுத்தலைப் பொறுத்தவரை நீண்டகாலமாக முதலிடத்தில் நீடித்துவந்த பங்களாதேஷ் அணியின் சகலதுறை வீரர் சகிப் அல் ஹசன் இரண்டாவது இடத்துக்குப் பின்தள்ளப்பட்டு ஜடேயா முதலிடம் பிடித்தார். இதன்படி ஜடேயா 438 புள்ளிகளையும், சகிப் அல் ஹசன் 431 புள்ளிகளையும் பெற்றுள்ளனர். அஸ்வின் 418 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும், இங்கிலாந்து வீரர்களான மொயின் அலி 409 புள்ளிகளுடன் நான்காவது இடத்திலும், பென் ஸ்ரோக்ஸ் 360 புள்ளிகளுடன் ஐந்தாவது இடத்திலும் உள்ளனர்.

இலங்கைக்கு எதிராக நடைபெற்றுவரும் டெஸ்ட் தொடரின் முதலிரு ஆட்டங்களிலும் ஜடேயா சிறந்த பங்களிப்பை வழங்கினார். இதன் விளைவாகவே அவருக்கு இந்த முன்னேற்றம் கிட்டியது என்று கருதப்படுகிறது. (ம)



## தெல்லிப்பழை செயலக அணி மகுடம் சூடியது

யாழ்ப்பாணம், ஓக. 9

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் வெற்றிக் கிண்ணத்துக்கான துடுப்பாட்டத் தொடரில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி கிண்ணம் வென்றது.

கல்வியங்காடு ஜீ.பி.எஸ். மைதானத்தில் நேற்று இடம்பெற்ற இந்த இறுதி யாட்டத்தில் சாவகச்சேரி பிரதேச செயலக அணியை எதிர்த்து தெல்லிப்பழை பிரதேச செயலக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சாவகச்சேரி பிரதேச செயலக அணி 15 பந்துப்பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 93 ஓட்டங்களைப் பெற்றது.

94 ஓட்டங்கள் என்ற இலக்கை நோக்கி பதிலுக்குத் துடுபெடுத்தாடிய தெல்லிப்பழை பிரதேச செயலக அணி 10 பந்துப் பரிமாற்றங்களில் 2 இலக்குகளை இழந்து வெற்றிபெற்றது. (ம-108)

## கரப்பந்தாட்ட தொடருக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம், ஓக. 9

அரியாலை திருமகள் சனசமூக நிலையத்தின் 65ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு அமரர் நல்லையா சதீஸ்குமார் ஞாபகத்த வெற்றிக் கிண்ணத்துக்கான யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தப்படவுள்ள கரப்பந்தாட்டத் தொடருக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பங்குபற்ற விரும்பும் கழகங்கள் எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர். (ம-23)



## சாராவுக்கு தடை

தடை செய்யப்பட்ட மருந்தைப் பயன்படுத்தியமைக்காக இத்தாலி ரென்னிஸ் வீராங்கனை சாரா எராளிக்கு இரண்டு மாதங்கள் தடை விதிக்கப்பட்டுள்ளது. மார்பகப் புற்றுநோய்க்காக எடுத்துக்கொண்ட மருந்து தடை செய்யப்பட்ட மருந்து என்ற காரணத்தாலேயே எராளிக்கு இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கன் ரென்னிஸ் தொடர் இந்த மாதத்தின் இறுதிப் பகுதியில் நடைபெறவுள்ளது. இந்தத் தொடரில் சாரா பங்கேற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. (ம)

## டெஸ்ட்டுக்கு வில்லியர்ஸ் வரமாட்டார்

### பிளாசிஸ் சொல்கிறார்

இங்கிலாந்துக்கு எதிராக டெஸ்ட் தொடரை 1:3 என்று இழந்ததை அடுத்து டெஸ்ட் ஆட்டங்களுக்கு ஏ.பி.டி. வில்லியர்ஸ் எப்போது திரும்புவார் என்ற பேச்சுகள் அதிகம் எழுந்துள்ளதையடுத்து "வில்லியர்ஸ் திரும்புவது அரிது அவரைப்பற்றி சிந்திப்பதில் இருந்து நாம் விடுபடுவது நல்லது" என்று தெரிவித்தார் பிளாசிஸ். "வில்லியர்ஸ் விளையாடுவதை நானும் விரும்புகிறேன். அவர் எவ்வளவு பெரிய வீரர்



என்பதை நாம் அனைவரும் அறிவோம், அவர் இல்லாமல் வாடுகிறோம் என்பது உண்மைதான், ஆனால் அவர் டெஸ்ட் ஆட்டங்களுக்கு எப்போது திரும்புவார் என்ற யோசனையில் நாம் ஏராளமான நேரத்தை வீண் செய்கிறோம். அவரது இடத்தில் வேறு ஒருவர் வேண்டும், அந்த மாற்று வீரரை நாம் தேட வேண்டும். வில்லியர்ஸ் வந்தாரென்றால் அது பெரிய போனஸ். ஆனால் அவர் டெஸ்ட் அணிக்குத் திரும்புவார் என்று நான் நினைக்கவில்லை" என பிளாசிஸ் மேலும் தெரிவித்தார். (ம)

# தொடரைக் கைப்பற்றியது இங்கிலாந்து அணி

தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை 3:1 என்ற அடிப்படையில் தனதாக்கியது இங்கிலாந்து அணி.

மன்செஸ்டரில் கடந்த 4ஆம் திகதி இந்த ஆட்டம் ஆரம்பித்து நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து சகல இலக்குகளையும் இழந்து 362 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக பரிஸ்ரௌவ் 99 ஓட்டங்களையும், ஸ்ரோக்ஸ் 58 ஓட்டங்களையும், ரூட் 52 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ரபாடா 4 இலக்குகளையும், மோர்கல், ஒலிவர், மகாராஜ் மூவரும் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி 226 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக பவுமா 46 ஓட்டங்களையும், அம்லா 30 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் அண்டர்சன் 4 இலக்குகளையும், புரோட் 3 இலக்குகளையும், மொயின் அலி 2 இலக்குகளையும், ரோலன்ட் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

136 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து சகல இலக்குகளையும் இழந்து 243 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக மொயின் அலி ஆட்டமிழக்காமல் 75 ஓட்டங்களையும், ரூட் 49 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மோர்கல் 4 இலக்குகளையும், ஒலிவர் 3 இலக்குகளையும், ரபாடா 2 இலக்குகளையும், மகாராஜ் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.




379 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குக் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி 202 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்ததை அடுத்து 177 ஓட்டங்களால் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது இங்கிலாந்து.

பந்துவீச்சில் மொயின் அலி 5 இலக்குகளை வீழ்த்தினார். அவர் ஆட்டநாயகனாகவும், தொடராட்ட நாயகனாகவும் தெரிவானார். (ம)

## வேலையாள்கள் தேவை

213, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள லிங்கன் கிறீம் ஹவுஸ் இற்கு அனுபவம் வாய்ந்த றொட்டி தயாரிப்பாளர்கள் மற்றும் கிளீனிங் வேலைக்கு ஆண், பெண் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (CS 61992) (14)

லிங்கம் கிறீம் ஹவுஸ்
யாழ்ப்பாணம்.
021 222 6660

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

கைதடி சந்தியிலிருந்து 150 M தூரத்தில் A9 பாதைக்கு அருகில் பொன்னம்பலம் எரிபொருள் நிலையத்துக்கு அருகில் 8.5 பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு. (CS 66021) (14)

071 476 5998

## மரண அறிவித்தல்



### திருமதி மஞ்சுளா பாக்கியநாதன்

சமாதி கோயிலடி, குப்பிளான் வடக்கை பிறப்பிடமாகவும், குப்பிளான் தெற்கு, குப்பிளானை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மஞ்சுளா பாக்கியநாதன் 05.08.2017 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மகாலிங்கம் - இராஜேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகமணி - ராஜேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகளும், பாக்கியநாதனின் அன்பு மனைவியும், பார்த்தீபன் (லண்டன்), பிரதீபன் (சுவிஸ்), மயூரா ஆகியோரின் அன்புத் தாயாரும், இராசேந்திரம் (ராசு - சுவிஸ்), ஊர்மிளா (மாலா) ஆகியோரின் சகோதரியும், ரவீந்திரன், ரோகினி, பிருந்தா ஆகியோரின் மாமியாரும், திருச்செல்வராணியின் (சுவிஸ்) மைத்துனியும், கிருபாயினி, கயூன், மதுன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.08.2017) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11 மணியளவில் காடாகடம்பை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குப்பிளான் தெற்கு,
குப்பிளான்.

தகவல் :
குடும்பத்தினர்.

077 723 8615

## தரம் - 5 புலமைப்பரிசில் வெற்றித்தேர்வு இறுதிப் பரீட்சை - 2017

2017 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான முழு மாதிரி வினாப்பத்திர இறுதிப்பரீட்சை (16 பக்கங்கள்) எதிர்வரும் 10.08.2017 (வியாழன்) நல்லூர் சயன்ஸ் அக்கடமியில் (நல்லூர் முருகன் ஆலயம் முன்பாக, யாழ். மாநகர சபை அருகில்) பி.ப. 2.00 மணிமுதல் பி.ப.4.00 மணிவரை நடைபெறும். விடையுடன் பரீட்சைப் பெறுபேறு 13.08.2017 வெளியிடப்படும். (முற்பதிவு அவசியம்) ஆயிரக்கணக்கான மாணவர்களின் சித்திக்கு வித்திட்ட வெற்றித்தேர்வு இறுதி மாதிரிப் பரீட்சைப் புள்ளிகளே அரச பரீட்சைப் புள்ளியாக அமையும்,

தொடர்பு :-
077 538 8471,
021 222 9016,
077 312 6807

## ஊடகவியல்

A/L Media, A/L 2018, 2019

* விடுமுறைக்கால விசேட வகுப்புக்கள்
* வெளிமாவட்ட மாணவர்களின் நலன் கருதி விசேட நேர அட்டவணை
* அனுமதிகளை இதுவரை பெறாத மாணவர்களுக்கு தனியான பிரிவுகள்.

A/L கலை, தொழில்நுட்பபாட மாணவர்களுக்கானது.

ஆசிரியர் - என். கனிதரன்
B.A (Hons) SPL.in Mediastudies, M.A (Mass Comm.& Journalism)

பொருளியற் கல்லூரி
நாவலர் வீதி யாழ். நகர். K.K.S வீதி, இணுவில்.
(இரு இடங்களிலும்)

## பெண் பணியாளர்கள் தேவை

வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை நிறுவனத்தில் பணிபுரிவதற்கு பெண் பணியாளர்கள் தேவை. 09 ஆம், 10 ஆம் திகதிகளில் நேரில் சமுகம் தரவும். (அடிப்படைச்சம்பளம் 15000/= மேலும் EPF, ETF )

அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
இல. 01, பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி
யாழ்ப்பாணம். 021 222 6113

## EASY WAY யின்

புதிய முறையிலான ஆங்கிலப்பயிற்சி

EASY WAY யின் ஆங்கில பாடப்புத்தகங்களைக்கற்று அதிலுள்ள பயிற்சிகளை செய்தவர்கள் சரளமாக ஆங்கிலத்திலும் பேசுவதை ஏற்கனவே எமது நேரடி வகுப்புகளில் நாம் நிரூபித்துள்ளோம்.

வகுப்புகளுக்கு வர நேரமற்ற தொழில்புரிவோர், பாடசாலை மாணவர்கள், வீட்டுப்பெண்கள், ஆசிரியர்கள்,பல்கலை கழக மாணவர்கள் ஆங்கிலம்பேசவிரும்புவோர் இணையமுடியும்

பாடநெறிக்கட்டணம் : ரூபா 1000 மட்டுமே.
(14.08.2017 இற்குமுன் இணைவேருக்கு மட்டுமே! பின்னர் ரூ 3000.00)

90 பாடங்களையும், 90 வீடியோ பாடங்களையும் கற்று அதிலுள்ள பயிற்சிகளுக்கு பதில்களை எழுதி ஆகக் கூடியது 90 - 120 நாட்களுக்குள் ஒப்படைத்தல்வேண்டும.

இலங்கையின் அனைத்து மாவட்டங்களிலும் இறுதிப்பரீட்சை நவம்பர் 12, 2017 அன்று இடம்பெறும்.

EASY WAY
403, மணிக்கூட்டு வீதி,
பெருமாள் கோவில் அருகில்
யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

# ARUL STUDY CIRCLE

111,Bonjean Road,Kotahena,Colombo - 13
T.P.: 011 233 1495, 011 247 0148

2017 - G.C.E. O/L பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு கொழும்பு அருள் கல்வி வட்டத்தினால் நடத்தப்படும் இலவசக் கல்விக் கருத்தரங்கு

## இலவசக் கல்விக் கருத்தரங்கு

குறிப்பு - இலவசமாக வழங்கப்படும் புத்தகங்கள்
1. சகலபாடங்களும் அடங்கிய கையேடு 2. 2016 ஆம் ஆண்டு கடந்தகால வினாவிடை
3. 2016 ஆம் ஆண்டு முதல் புதிய கல்வித்திட்டத்திற்கு அமைய விஞ்ஞான வினா விடைக்கொத்து (30 வருடம்)
4. கணிதபாடம் 5. மாதிரி வினாத்தாள்கள் பகுதி IA, பகுதி - IB

| திகதி | இடம் | நேரம் |
|---|---|---|
| 10.08.2017 (வியாழக்கிழமை) | வேலணை பிரதேச செயலகம் வேலணை (இருபாலாரும்) | காலை : 08.30 மணி முதல் மாலை 3.00 மணி வரை |
| 11.08.2017 (வெள்ளிக்கிழமை) | தொழில்நுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி வட்டுக்கோட்டை (இருபாலாரும்) | காலை : 08.00 மணி முதல் மாலை 03.00 மணி வரை |
| 12.08.2017 (சனிக்கிழமை) | யாழ். வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம் (பெண்பிள்ளைகள் மாத்திரம்) | காலை : 06.00 மணி முதல் மாலை 03.00 மணி வரை |
| 13.08.2017 (ஞாயிற்றுக்கிழமை) | யாழ். வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம் (ஆண்பிள்ளைகள் மாத்திரம்) | காலை : 06.00 மணி முதல் மாலை 03.00 மணி வரை |
| 14.08.2017 (திங்கட்கிழமை) | யாழ். வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம் (இருபாலாரும்) | காலை : 06.00 மணி முதல் மாலை 03.00 மணி வரை |
| 15.08.2017 (செவ்வாய்க்கிழமை) | உருத்திரபுரம் தமிழ்மகா வித்தியாலயம் கிளிநொச்சி (இருபாலாரும்) | காலை : 08.00 மணி முதல் மாலை 03.00 மணி வரை |
| 16.08.2017 (புதன்கிழமை) | கற்சிலைமடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை கற்சிலைமடு (இருபாலாரும்) | காலை : 08.00 மணி முதல் மாலை 03.00 மணி வரை |
| 17.08.2017 (வியாழக்கிழமை) | மன்னார் நகரசபை மண்டபம் மன்னார் (இருபாலாரும்) | காலை : 08.00 மணி முதல் மாலை 03.00 மணி வரை |
| 18.08.2017 (வெள்ளிக்கிழமை) | வவுனியா நகரசபை மண்டபம் (இருபாலாரும்) | காலை : 08.00 மணி முதல் மாலை 03.00 மணி வரை |

| பாடங்கள் | ஆசிரியர்கள் |
|---|---|
| கணிதம் | திரு. V.தேவசேனாதிபதி - திரு. K.வசந்தன் - திரு. S. மணிமாறன் - திரு. M.லிங்கேஸ்வரன் |
| விஞ்ஞானம் | திரு. V.சுந்தரேஸ்வரன் - திரு. V.பிரேம்குமார் - திரு. மகேந்திரன் - திரு. றுடானி |
| தமிழ் | திரு. S.நடராஜா - திரு. K. திவாகர் |
| வரலாறு | திரு. S.நடராஜா - திரு. S. ஐங்கரன் |

இலவசக் கருத்தரங்கின் முழு அனுசரணையாளர் : சட்டத்தரணி திரு. V. தேவசேனாதிபதி LLB
T.P. 077 113 3400 / 011 232 7524

தொடர்புகளுக்கு : திரு. P.இளமுருகன் - 077 907 3593 - திரு. சக்திதரன் AD - 077 842 9649
திரு. சுந்தரேஸ்வரன் - 077 385 0841 - திரு. A. முருகானந்தன் - 071 856 1252
திரு. ஐங்கரன் - 077 715 7779

ஊடக அனுசரணையாளர்: உதயன்

அனைவரும் பாடசாலை சீருடையில் கலந்துகொண்டு பயன் அடையுமாறு வேண்டப்படுகின்றீர்கள்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.08.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.